DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

BIG
Great Coverage. BIG Savings.
Home - Auto - Life - Business
Iggy Thuray Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1456 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 1, 2024

# Canadian Dental Care Plan – பல் மருத்துவ திட்டத்தின் கீழ் பற்சிகிச்சை பெறும் அங்கீகாரம் 400,000 இற்கும் அதிகமான கனேடிய முதியவர்களுக்கு கிட்டியுள்ளது




கனேடிய பல் மருத்துவ திட்ட (CDCP) விண்ணப்பங்கள் விரிவாக்கப்படுகின்றன: தகுதிபெறுவார்களெனக் கருதப்படும் 72 வயதை அடைந்த முதியவர்கள் விண்ணப்பிக்கக் கோரும் கடிதங்களை பெப்ரவரி முதலாந் திகதி முதல் பெறுவார்கள்.

கனேடிய அரசு கனேடிய பல் மருத்துவ திட்டத்தை (CDCP) கடந்த மாதம் ஆரம்பித்தது. கனேடிய பல் மருத்துவ திட்டம் (CDCP) தற்போது தனிப்பட்ட பல் மருத்துவ காப்புறுதி இல்லாத 9 மில்லியன் வரையானோர் வாய்ச் சுகாதாரப் பராமரிப்பைப் பெறுவதில் நிலவும் நிதிச் சுமையைக் குறைப்பதற்கான கனடிய மத்திய அரசின் புதிய திட்டமாகும்.

(உள்ளே விபரமான செய்தி 26 ம் பக்கத்தில்)



# Ontario's Premier Doug Ford graced the Chinese New Year Celebrations hosted by Chinese and Korean Speaking Members and Ministers of his Government

ஒன்றாரியோ மாகாணத்தின் கொன்சர்வேர்ட்டிவ் அரசின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் கடந்த புதன்கிழமை மாலை ஸ்காபுறோவில் நடைபெற்ற சீன புத்தாண்டு கொண்டாட்டத்தின் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவரது அரசில் உள்ள சீன மற்றும் கொரிய மொழி பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் நால்வர் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவிற்கு 'உதயன்' பத்திரிகையின் பிரதம
ஆசிரியர் மற்றும் ரூபம் வானொலி அதிபர் ராம் சங்கர் சிவநாதன் ஆகியோரும் அழைக்கப்பெற்றிருந்தனர்
ஏராளமான அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் அங்கு கலந்து கொண்டு மாகாண முதல்வரின் சிறந்த உரையை கேட்டு மகிழ்ந்தனர்.

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

உதயன் சர்வதேச விருது விழா-2024
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
மண்டபம்:- The Estate Banquet & Event Centre 430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM




# இன்றைய நேரம் தான் நேற்றைய நேரம்

## நேற்றைய விலையில் கொண்டோவை இன்று வாங்குங்கள்

## பிக்கரிங் நகரின் சிறந்த பெறுமதி கொண்ட ஒரு புதிய வரவு! வரலாற்றில் புதிய கொண்டோ விலைகளில்!

விலைகள் அதிகரிக்கும் முன்பாகவே நீங்கள் கொண்டோக்களை வாங்கிக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். அதை நீங்கள் இப்போதே செய்யலாம், ஏனென்றால் **Highmark** வரலாற்றில் குறைந்த விலைகளில் புதிய வரவாக நவீன கொண்டோக்களை வழங்குகின்றது!

அத்துடன் எமது விசேடமான சேமிப்புத் திட்டம். எமது **Highmark** இல் புதிய கொண்டோ ஒன்றை வாங்கினால்

**$50,000** வரையில் கழிவைப் பெறலாம்.

வட்டி வீதம் குறையும் போது கொண்டோக்களின் விலைகள் அதிகரிக்கலாம். எனவே தற்போது வாங்கிக் கொள்வதே சரியானதாகும். எமது விற்பனை முகவர் ஒருவரை இன்றே அழைத்து தாங்கள் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குறைந்த $500களில் இருந்து பிக்கரிங் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள எமது கொண்டோக்கள் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை.




Off-site Sales Gallery Location and Hours:

633 KINGSTON ROAD, PICKERING

Mon. – Thu. 12pm – 6pm
Friday – Closed
Sat. & Sun. 12pm – 5pm

# TheHighmark.ca

CALL: 905-831-1755 or EMAIL: info@thehighmark.ca

HIGHMARK

FOLLOW US

* Prices, promotions, and specifications are subject to change without notice. All promotions are subject to terms and conditions. Renderings are artists' concepts. See Sales Representative for details. Exclusive Listing Brokerage Milborne Group Brokerage. Brokers Protected. E. & O.E.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# அரசியல் தலைவர்களிடமிருந்து தமிழ் மக்களுக்கு கிட்டாத தலைமைத்துவத்தை வேறு யார் தருவது?

60 வருடங்களுக்கு மேலான பாராளுமன்றக் கதிரைகளை நோக்கிய தமிழர் அரசியலில் ஏற்பட்ட பின்னடைவிற்கு அதன் தலைவர்கள் தான் காரணம் என்பதை தற்போது கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. தமிழ்த் தேசியத்தின் பண்பாடு சார்ந்த நிலப்பரப்பாக ஆண்டாண்டு காலம் தொடர்ச்சியாகக் கணிக்கப்பெற்றுவரும் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள எமது மக்கள் தொகையில் தங்களுக்கான பாதையைத் தேடும் வகையில் இல்லாமலும் நேரடியாக அரசியலில் ஈடுபட விரும்பாமல் இருக்கும் மக்களே அதிகளவில் உள்ளார்கள் விகிதாசாரத்தில் கணிப்பதானால் 90 வீதமான மக்கள் தங்கள் பிரச்சனைகளை தமது தலைவர்களே தீர்த்து வைக்க வேண்டும் என்ற நம்பிக்கையோடு தங்கள் குடும்பத்தையும் தொழிலையும் தங்களைச் சூழ்ந்து வாழும் உறவுகளையும் நண்பர்களையும் சார்ந்தும் அவர்களைக் கவனிப்பதுமாக நாட்களைக் கடந்து செல்வார்கள். ஆனால் மிகுயாக உள்ள பத்து வீதமானோர் அரசியல் என்ற வாகனத்தில் ஏறி விடுவார்கள். அந்த பயணத்தை அவர்கள் ஒரு விமானப் பயணம் போல எண்ணி திருப்தியடைவார்கள்.

தேர்தல் காலங்களில் தாங்கள் தலைவர்களாக வரித்துக் கொண்டவர்களுக்கும் வாக்களிக்கும் மக்களும் இடைத் தரகர்களாக இவர்கள் மாறுவார்கள். ஆனால் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற அரசியல்வாதிகள்இ யாரிடமிருந்து எங்களுக்கான உரிமைகளை வென்று தருகின்றோம் என்று தேர்தல் மேடைகளில் முழங்கினார்களோ. அவர்களது 'நண்பர்கள்' ஆகிவிடுவார்கள். அந்த நட்பின் காரணமாக தேர்தல் காலங்களில் தங்கள் வெற்றிக்காக உழைத்தவர்களுக்கு தென்னிலங்கை அரசியல் 'நண்பர்களிடமிருந்து' சில சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பார்கள். அவற்றுள் சிலருக்கு அரசாங்க உத்தியோகம் போன்றவையும் சிலருக்கு வியாபார இறக்குமதி அனுமதிப் பத்திரம் போன்றவை 'சன்மானமாகக்' கிடைக்கும்.

ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் தங்கள் வாக்குகளை இவர்களுக்கு வழங்கிய மக்கள், தலைவர்களுக்காக் காத்திருப்பார்கள். அவர்கள் தங்களுக்காக எதையாவது கொண்டுவருவார்கள் என்று காத்திருப்பார்கள். மேலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தலைநகர் வாழ்க்கையில் அள்ளுண்டு சென்றவர்களாக அங்கும் வீடு வாசல் என்று தேடிக் கொள்வார்கள். தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கான சேவைகளையும் தேவைகளையும் மறந்தவர்களாக மாறிவிடுவார்கள்.

வேறு சில சமூக ஆர்வலர்கள் அதே நேரத்தில் அரசியலில் அல்லது அரசியல் செயற்பாடுகளில் பங்கெடுக்க முடியாதவர்கள் அல்லது தேர்தல் மைய அரசியலில் வெறுப்பும் சலிப்பும் அடைந்தவர்கள் போன்ற வகையினர் பொதுவான மக்கள் அமைப்புக்களில் இணைந்து கொள்வார்கள். தங்கள் சமூகம் சார்ந்த மாற்றங்க்ளைக் கொண்டு வர அவர்கள் முயற்சி செ ய்வார்கள். அரசாங்க அதிகாரிகளை நாடுவார்கள். தங்கள் கிராமத்தின் தேவைகளுக்காக அவர்கள் தங்கள் நேரத்தையும் பொருளையும் அவர்கள் செலவு செய்வார்கள்..அவர்கள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கம் அற்றவர்கள் என்பதுதான் அவர்களுக்குரிய அடையாளமாகத் தெரியும்.

ஆனால் அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களாக மாறிவிடும் தெரிவு செய்யப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள அரச அதிகாரிகளையும் உயர் நிர்வாக அதிகாரிகளையும் தங்கள் பக்கம் 'இழுத்துக்'கொள்வார்கள். இதனால். எவ்விதமான சுயநலன்கள் இல்லாமல் ஊர் மக்களுக்கான பணிகளைச் செய்ய முயன்றவர்களுக்கு எதிராக அந்த பிரதேசத்தின் அரச நிர்வாகத்தை செலுத்த திட்டங்களைத் தீட்டுவார்கள். இதனால் சேவை செய்யவென புறப்பட்டவர்கள் நிராகரிக்கப்பட்டு விரக்தியடைந்த நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இறுதியில் மக்கள் தேர்ந்தெடுத்த அரசியல்வாதிகளோ. அரச அதிகாரிகளோ அன்றி தங்களைச் சூழ்ந்து வாழ்ந்து கொண்டு தங்கள் உயர்ச்சியில் அக்கறைகொண்ட மக்கள் அமைப்புக்களைச் சேர்ந்தவர்ளோ. எவராலும் உதவிகள் தேவைப்பட்ட மக்கள் எவருக்கும் அ வை கிட்டாமல் போய்விடும். இவ்வாறான ஒரு தொடர்ச்சியான பயணம் தான் நமது தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சமூக அக்கறை இல்லாத அரச அதிகாரிகள் அரசியல் 'குள்ளர்களின்' கையாட்களாக மாறிவிடுகின்றார்கள். தென்னிலங்கை அரசியல் பீடங்களினால் 'ஆளுனர்கள்' என்ற பதவியோடு அமர்த்தப்பட்டவர்கள். இந்த 'குடியாட்சி' காலத்திலும் 'மன்னராட்சி' இடம்பெறுவது போன்று தங்கள் உயர்ந்த இடத்தில் வைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

இப்படியாக. தமிழ்த் தேசியம் ஓங்கியிருக்க வேண்டிய வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் தலைவர்களால் மக்களுக்கு ஒன்றுமே கிட்டாத ஒன்றாகவும் பதவிகளில் இருப்பவர்கள் மக்கள் வரிப்பணத்தை தங்கள் 'சுகபோகங்களுகான' ஏற்பாடுகளை மட்டும் கவனிப்பவர்களாகவே உள்ளார்கள் என்பதும் எமக்கு முன்னால் உள்ள காட்சிகளாகத் தெரிகின்றன.

அவ்வாறானால் அரசியல் தலைவர்களிடமிருந்து கிட்டாத தலைமைத்துவத்தை மக்களுக்கு தரவல்லவர்கள் யாராக இருப்பார்கள் என்று நாம் தேட வேண்டியுள்ளது அல்லவா?

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

(பின் பக்கத் தொடர்ச்சி)

## கனடாவிற்கான இந்தியத் தூதுவர் சஞ்சே குமார் வெர்மா ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு ரொறன்ரோவில் இடம்பெற்றது

## High Commissioner of India in Ottawa, His Excellency Sanjay Kumar Verma hosted a 'Media Reception' in Toronto



High Commissioner of India in Ottawa, His Excellency Sanjay Kumar Verma with the Consul General of India in Toronto Mr. Shri Siddhartha Nath jointly hosted a 'Media Reception' in Toronto, on Sunday 25th. Feb. 2024, at Roof Garden Holiday Inn in Toronto.

Members from many Ethnic Media Outlets from difference Languages, were invited by High Commissioner and Consul General.

High Commissioner of India , His Excellency Sanjay Kumar Verma was welcome to the state by Mr. Shri Siddhartha Nath to the Stage to deliver his speech.

His Excellency Sanjay Kumar Verma, in his very clear speech, he touched issues between India and Canada, Trade Agreements, signed very recently and other accords. His speech was highly appreciated by the audience.

During the Question Period many Editors and News Reporters submitted very important questions regarding many current issues, including the International Students from India, who have been facing challenges in their Educational Institutions.

Canada Uthayan's Logan Logendralingam's question about the International Students was given very detailed and appropriately answered by the High Commissioner.

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva


**416-706-8160**

**ROHINI TAILORS & DESIGNS**

**Saree Blouse, Skirt & Blouse**
மற்றும் மணமகளுக்கான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கான தையல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இடம்:- **Pickering**
**தொடர்புகளுக்கு:** 647 569 4794
**அல்லது** 416 438 2552

## தமிழர் நிறுவனம் ஒன்றுக்கு தொண்டு அடிப்படையில் பணியாற்றுவதற்கு ஆண் – பெண் பணியாளர்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய தமிழர் நிறுவனம் ஒன்றுக்கு தொண்டு அடிப்படையில் பணியாற்றுவதற்கு ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரிகள் வரவேற்கப்படுகின்றார்கள்.
ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் அலுவலகப் பணி மற்றும் மொழிபெயர்ப்பு செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மேலும் கொம்பியுட்டர் அனுபவம் அதில் கணக்கியல் தொடர்பாக வேலைகள் **( Excel and Word Processing)** மற்றும் அலுவலக மேற்பார்வை ஆகியவற்றில் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
தற்போது தற்காலிக விசா பெற்று இலங்கையிலிருந்து வந்துள்ளவர்களும் வரவேற்கப்படுகின்றார்கள்.
தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கு பிரயாணப்படி **(Travelling Allowance)** மற்றும் உணவுப்படி **(Food Allowance**) ஆகியன வழங்கப்படும். மேலும் ஒப்பந்த அடிப்படையில் **(Contract Basis)** சில பணிகளைச் செய்தால் அதற்குரிய சன்மானமும் வழங்கப்பெறும்.
மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க **info@cyecs.org** என்னும் மின்னஞ்சலைப் பயன்படுத்தவும்.
தொலைபேசி மூலம் அழைப்பவர்கள் 647 762 9512 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.



**Personal Prayer To The Holy Spirit**

Holy spirit thou make me see everything and show me the way to reach
my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that
is done to me and who are in all instances of my life with me. I, in this
short dialogue, want to thank You for everything and confirm once more
that I never want to be separated from You no matter how great the mate-
rial desire may be. I want to be with You and my loved ones in Your per-
petual glory. Amen. Person must pray this 3 consecutive days without stat-
ing one's wish. After the 3rd day your wish will be granted no matter how
difficult it may be. Promise to publish this as soon as your favor has been
granted - R.R RV. P.R

Our Mother of Perpetual Help

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# இந்திய — இலங்கை கடல் எல்லையில் போராட்டத்துக்கு மீனவ சமூகம் அழைப்பு!



இந்திய இழுவை படகுகளுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டம் ஒன்றினை இந்திய - இலங்கை கடல் எல்லையில் நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலுயே, அந்த அமைப்பின் பிரதிநிதி பாக்கியநாதன் றேகன் அவர்கள் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவை படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் முதல்களை அழித்து வந்த வேளை, எமதா கடற்படையினரால் அந்த இந்திய இழுவைப்படகுகள் கைப்பற்றப்பட்டு அதில் பயணித்த மீனவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இப்போது இந்திய அரசாங்கம், அந்த மீனவர்களை விடுதலை செய்யுமாறு எமது அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

எங்களுடைய வளங்களை அழித்தவர்களை எப்படி விடுதலை செய்ய முடியும்? அவர்களுக்குரிய தக்க தண்டனை கொடுத்த பின்னரே அவர்களை விடுதலை செய்யலாம். ஏனென்றால் எங்களது வளங்கள் எத்தனையோ காலமாக அழிக்கப்பட்டுள்ளது.

எங்களுடைய வளங்களை சூறையாடி தங்களது பிழைப்புகளை நடத்தியவர்கள், தங்களது மீனவர்களை எமது அரசாங்கம் பிடித்து வைத்துள்ளபோது அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றார்கள்.

அடுத்த வாரத்தில் எமது கடல் தொழிலாளர்கள் இணைந்து கறுத்தக்கொடி போராட்டம் ஒன்றினை இலங்கை - இந்திய கடல் எல்லையில் நடாத்த உள்ளோம்.

எங்களது அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிய கூடாது. கைது செய்த மீனவர்களுக்கு தக்க தண்டனையை கொடுக்க வேண்டும்ஹ எக்காரணம் கொண்டும் அவர்களிடம் மண்டியிடக் கூடாது என்பதை நாங்கள் ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

# வரலாற்று சிறப்புமிக்க கீரிமலை நகுலேச்சரத்தின் வருடாந்த திருவிழா ஆரம்பம்!





பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள கீரிமலை பதியுறை அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவானது 24-02-2024 அன்று காலை 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.



தொடர்ந்தும் 15 நாட்கள் இடம்பெறவுள்ள மகோற்சவத்தில் 07ம் திகதி பெரிய சப்பறத் திருவிழாவும், மறுநாள் காலைஇரதோற்சவம் இடம்பெறவுள்ளதுடன் இரவு சிவராத்திரி விசேட பூசைகளுடன் ஆன்மீகம் சார் நிகழ்ச்சியும் இடம்பெற்று மறுநாளான 09ம் திகதிதீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.



# மத்திய கல்லூரி உட்பட்ட அறிவார்ந்த கல்லூரிகளின் வளர்ச்சிக்காக என்றும் அறம் சார்ந்தே நிற்பேன் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

மத்திய கல்லூரி உட்பட்ட அறிவார்ந்த கல்லூரிகளின் வளர்ச்சிக்காக என்றும் அறம் சார்ந்தே நிற்பேன் - அமைச்சர் டக்ளஸ்.

கல்லூரிகளின் வளர்ச்சியே கல்விச்சமூகத்தின் எழுச்சி. தமிழ் தேசத்தின் கல்லூரிகள் எல்லாமே நிமிர்ந்தெழவேண்டும். இதுவுமே என் நோக்கும் இலட்சியமும்.

ஆனாலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எனக்கு என் இரத்தமும் தசையும் போன்றது. நான் இந்த கல்லூரியின் பழைய மாணவன் என்பதற்காக எனது அரசியல் அதிகாரங்களை ஒருபோதும் தவறாக பயன்படுத்தியதில்லை - பயன்படுத்தப் போவதுமில்லை என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

அவரது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நான் தேடிக்கொண்டிருந்தது சிறந்த அதிபர், சிறந்த நிர்வாகி, அது பெண்ணாகவும் இருக்கலாம், ஆணாகவும் இருக்கலாம்.

அழிவு யுத்த காலத்தில் அச்சம் தரும் சூழலில் வராது வந்த அதிபர் நாயகமாக யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் வந்தமர்ந்தவர் அமரர் இராசதுரை அவர்கள், இடிந்தும் சிதைந்தும் இருந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூ ரியை மறுபடி தூக்கி நிறுத்திய அவரது சாதனைகளுக்கு உந்து கோலாக நான் இருந்திருக்கிறேன் என்று சாட்சியம் கூற அதிபர் இராசதுரை இன்று உயிருடன் இல்லை.

ஆனாலும் சாட்சியம் கூற இன்றும் வரலாற்று மனிதர்கள் உண்டு.

தமிழ் தேசியம் என்ற ஒற்றைச்சொல் மந்திரத்தின் பெயரால் அதிபர் இராசதுரை என்ற ஆளுமை இல்லாமால் ஆக்கப்பட்டார், அதிபர் இராசதுரைக்கு அடுத்து நான் கண்ட சிறந்த நிர்வாக திறன் மிக்கவர் அதிபர் இந்திரகுமார். இவரை விடவும் ஆற்றல் உள்ளவர் ஒரு பெண்ணாக இருப்பினும் அவரையே நான் சிபார்சு செய்திருப்பேன். இங்கு பெண் ஆண் பிரசச்சினை அல்ல பிரதானம், ஆளுமையும் ஆற்றலும் மிக்கவர்களே எமக்கு தேவை.

அதிபர் இராசதுரையை தமிழ் தேசியத்தின் பெயரால் கொன்றொழித்து அகற்றியது போல் அதிபர் இந்திரகுமாரை பெண்ணியத்தின் பெயராலும் சாதியத்தின் பெயராலும் உயிருடனே அகற்ற முற்படும் ஈனச்செயல்களுக்கு இடமளிக்க வேண்டாம்.

பெண்ணியம் பற்றி, பெண்கள் உரிமைகள் பற்றி நாம் தெளிவான நிலைப்பாட்டை கொண்டவர்கள். ஆற்றல் உள்ளவர்கள் பெண்கள் என்றும், ஆயுதம் எந்த வேண்டும் அவர்கள் என்றும் நடை முறையில் நிரூபித்தவர்கள் நாம். இயக்கத்தில் இணையும் பெண்களை சீருடை தைக்கவும், மருத்துவம் பார்க்கவும், சமையல் அறையில் இருத்தவும் சிலர் வகுத்திருந்த பழைய பாரம்பரியங்களை உடைத்து. முதன் முதலில் ஆயுதம் தரித்த பெண்களாக ஆண்களுக்கு நிகராக அவர்களை நிறுத்தியவர்கள் நாங்கள்.

ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் களப்பளியான பெண் போராளி எனது சகோதரி சோபா.

இலங்கை அரசின் தேசியக்கொள்கையில் தேர்தலில் பெண்களின் பிரதிநித்துவம் 25 வீதமாக இருப்பினும், எமது கட்சிக்கொள்கையில் பெண்களின் பிரதிநித்துவம் ஐம்பதுக்கு ஐம்பது என்ற சமத்துவக்கோட்பாட்டை கொண்டவர்கள் நாம்.

ஆகவே ஆளுமை மிக்க பெண்களை உருவாக்கவும் அரச உயர் பதவிகளில் அவர்களை உட்கார வைக்கவும் நாம் ஒருபோதும் பின்நின்றதும் இல்லை - பின்நிற்கப்போவதில்லை.

அநீதியான புறக்கணிப்புகளும் பாகுபாடுகளும் எங்கு நடக்கின்றதோ அதற்கு எதிராகவே என்றும் நாம் உறுதியுடன் நிற்பவர்கள்.

ஒளிவிடு அறிவுச்சுடர்களை உருவாக்கித்தந்த யாழ் மத்திய கல்லூரியின் நீடித்த வளர்ச்சிக்கு உறுதியுடன் உழைப்போம் வாருங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.



# தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் நயினாதீவுக்கு விஜயம்

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் றொஷான் ரணசிங்க மற்றும் பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜெயசுமன ஆகியோர் 26-02-2024 நயினாதீவு ராஜமஹா விகாரைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இவ்வாறு விஜயம் மேற்கொண்டவர்கள் நயினாதீவு ஆலய வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

இதில் சமய ஆசி உரைகளும் மதத்தலைவர்களினால் நிகழ்த்தப்பட்டன.



# மத்திய கல்லூரி அதிபர் விவகாரம் தகுதியான அதிபர் பக்கமே நான் — அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்ற நீதியில் கல்லூரியின் தகுதியான அதிபர் பக்கமே நான் நிற்பேன் என கடற்தொழில் அமைச்சரும் மத்திய கல்லூரியின் பழைய மாணவனுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சமூக பாதுகாப்பு சபையின் புலமைப் பரிசில் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மத்திய கல்லூரியை அமரர் இராசதுரை எவ்வாறு வழிநடத்தியவர் என பலருக்கு தெரியும் துரதிருஷ்டவசமாக அவரது உயிர் பறிக்கப்பட்டது.

தற்போது யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு நிரந்தர அதிபர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரசியல் தலையீடு இருப்பதாக கேட்கிறீர்கள்.



அரசியல் தலையீடு இல்லாமல் எங்காவது பிரச்சனைகள் தீர்க்கப்படுகிறதா என கூறுங்கள் பார்க்கலாம்.

மத்திய கல்லூரி அதிபர் விவகாரத்தில் அரசியல் செய்யவேண்டிய தேவை இல்லை ஆனால் பழைய மாணவன் என்ற நீதியில் கல்லூரிக்கு தகுதியான அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது.

ஆகவே மத்திய கல்லூரி விடயத்தில் யார் கல்லூரியை முன்னோக்கி கொண்டு செல்வார் என கருதுகிறேனோ அவர் பக்கமே நான் நிற்பேன் அரசியல் எனக் கூறுபவர்கள் கூறிவிட்டு செல்லட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News


# சாந்தனின் பூதவுடலுக்கு சீமான் அஞ்சலி!

## உடலை இலங்கைக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள்

(28-02-2024)

சாந்தனின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நளினி மற்றும் அவரது சட்டத்தரணி புகழேந்தி ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவரது பூதவுடல் இலங்கைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.





இந்த நிலையில் சாந்தனின் பூதவுடலுக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீ-மான் அஞ்சலி செலுத்தியுள்தாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தமது நண்பன் சாந்தனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான பேரறிவாளன், நளினி ஆகியோர் வைத்தியசாலைக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



உயிரிழந்த சாந்தன் இறுதியாக எழுதிய கடிதம் என்ற வகையில் அவருடைய கையெழுத்துடன் கடிதம் தற்போது சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சாந்தனை அவரது சகோதரர் மதிசுதா கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது எடுத்துக் கொள்ளப்பட்டதாக கூறப்படும் புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது.

# சியம்பலாண்டுவ கொடயான பிரதேசத்தில் பஸ்வண்டி தடம்புரண்ட விபத்தில் மாணவர்கள் உட்பட 34 பேர் படுகாயம்

(கனகராசா சரவணன்)

சியம்பலாண்டுவ புத்தமவில் இருந்து மொனரா-கலை நோக்கி பிரயாணித்த இலங்கை போக்குவரத்து சபை பஸ்வண்டி ஒன்று 29-02-2024 வியாழக்கிழமை காலை 7.10 மண-ியளலில் சியம்பலாண்டுவ கொடயான பிரதேசத்தில் வீதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் மாணவர்கள் உட்பட 34 பேர் காயமடைந்த நிலையில் சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவதினமன்று காலை மொனராகலை நோக்கி பிரயாணித்த குறித்த பஸ்வண்டியில் சுமார் 45 பாடசாலை மாணவர்கள் உட்பட 80 பேர் பிராணித்துள்ள நிலையில் வேகக்கட்டுப்பாட்டை மீறி வீத-ியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் உட்பட 34 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சியம்பலாண்டுவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.





கனடிய செய்திகள் Canadian News

# திசை மாறிச் செல்லும் கனடிய தமிழர் பேரவையை சீர் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ள "கனடிய தமிழர் கூட்டு" – CANADIAN TAMIL COLLECTIVE

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்)**



கனடாவில் ஏனைய பல இனக்குழுக்கள் தங்கள் இனம் சார்ந்த பலமான அமைப்புக்களை நிறுவி அவற்றை பயனுள்ள செயற்பாடுகளுக்கு ஊடாக தங்கள் இனம் சார்ந்த சேவைகளை தொடர்கின்றன என்பதை நாம் செய்திகள் வாயிலாக அறிந்து வருகின்றோம்.

மேலும், கனடிய அரசாங்கத்தோடு இடம்பெறும் பயனுள்ள பேச்சுவார்த்தைகள் மற்றும் குறிப்பிட்ட இனம் பல்வேறு வகையில் சலுகைகளையும் சந்தர்ப்பங்களையும் கனடிய அரசிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளும் வகையில் நிறுவப்பெற்ற ஏனைய இனம் சார்ந்த அமைப்புக்கள் அவற்றால் பல வெற்றிகளை சாதித்துள்ளன. இன்னும் மிக உறுதியாக தங்கள் இருப்பையும் நிலை நாட்டியுள்ளன.

அவ்வாறான நோக்கத்தோடு கனடாவில் நிறுவப்பெற்ற எமது "கனடிய தமிழர் பேரவை," அந்தத் திசையிலிருந்து மாறி வேறு திசைகளில் பயணிப்பதை கடந்தகாலங்களில் அவதானித்த சமூக ஆர்வலர்கள், பல சந்தர்ப்பங்களில் கனடிய தமிழர் பேரவையின் நிர்வாகிகளோ அன்றி ஊதியத்திற்கு பணியாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கோ எடுத்துக் கூறியும் அவர்கள் அந்த வேண்டுகோள்களை செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

ஒரு பக்கத்தில் ஆக்கபூர்வமான சமூகம் சார்ந்த மனித நேயப்பணிகளை ஆற்றிவந்தாலும் மற்றொரு பக்கத்தில் கனடியத் தமிழர்களுக்கோ அன்றி எமது தாயகத் தமிழர்களோ நன்மை பயக்கும் வகையில் அல்லது அவர்களது "வலிகளுக்கு" பரிகாரம் காணும் வகையிலோ ஈடுபடவில்லை. மாறாக தாயகத் தமிழர்களின் நலன்களுக்கான வழிகளை பற்றி யோசிக்காமல் தங்கள் சொந்த நலன் கருதியும் சுகபோகம் கருதியும் "அரசியல்" செய்துவரும் பாராளுமன்ற உறுப்பினர்களை வருடத்திற்கு ஒரு தடவை விமானச் சீட்டுக்கள் அனுப்பியும் ஹோட்டல்களில் தங்க வைத்து உபசரித்து பயணம் அனுப்பி வைக்கும் "வேலைகளை"யும் தமிழர்களை பொழுது போக்கு என்ற மாயைக்குள் இழுத்துச் செல்வது ஆகியவற்றையே "முதன்மை" செயற்பாடுகளாகச் செய்துவந்தது இந்த கனடிய தமிழர் பேரவை.

அதன் அடுத்த கட்டமாக அண்மையில் இலங்கையில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுக்களோடு இணைந்து "இமாலயப் பிரகடனம்" என்னும் அரசியல் செயற்பாட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்ததில் இந்த கனடிய தமிழர் பேரவை முக்கிய பங்கு வகித்ததை செய்திகள் மூலமாகவும் புகைப்படங்கள் மூலமாகவும் கனடியத் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் தாயகத் தமிழர்களுக்கும் பகிரங்கப்படுத்தியது இந்த அமைப்பு.

அதனைத் தொடர்ந்து "இமாலயப் பிரகடனம்" என்னும் அரசியல் செயற்பாட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்தது தொடர்பாக கனடாவில் எழுந்த "கடும் எதிர்ப்பைத்" தொடர்ந்து மௌனத்தை கடைப்பிடித்ததும் பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தியது கனடியத் தமிழர் பேரவை.

மேற்படி பத்திரிகையாளர்கள் சந்திப்பில், "இலங்கையில் 2009லும் அதற்கு முன்னரும் பின்னரும் இடம்பெற்ற தமிழர்கள் படுகொலைகளை எமது அமைப்பு "இனப்படுகொலை" என்று பகிரங்கமாக அறிவிக்கமாட்டாது" என்றும் அதன் தற்போதைய தலைவியும் ஏனைய இயக்குனர் சபை உறுப்பினர்களும் கூட்டாகத் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து கனடிய தமிழர் பேரவையின் செயற்பாடுகள் திசை மாறிச் செல்வதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக பல தனி நபர்களும் அமைப்புக்களும் கனடிய தமிழர் ஊடகங்களும் தங்களால் ஆன வகையில் பல "விடயங்களை" கையில் எடுத்தனர்.

கனடா உதயன் பத்திரிகையானது, தனது வாராந்த ஆசிரிய தலையங்கம் ஊடாகவும் சில கட்டுரைகள் ஊடாகவும் கனடிய தமிழர் பேரவைக்கு சில அறிவுறுத்தல்களை முன் வைத்தது. குறிப்பாக "உலகத் தமிழர் பேரவையிலிருந்து விலகி நில்லுங்கள்" என்ற வேண்டுகோளையும் பகிரங்கமாக முன்வைத்திருந்தது.

இவ்வாறான நிலையில் அண்மையில் கனடாவில் கூடிய கல்விமான்கள். சட்டத்தரணிகள். சமூகச் செயற்பாட்டாளர்கள். அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் பல தடவைகள் கலந்துரையாடிய பின்னர் 23-02-2023 வெள்ளிக்கிழமையன்று "கனடிய தமிழர் கூட்டு" - CANADIAN TAMIL COLLECTIVE - என்ற அமைப்பின் ஒரு ஊடகவியலாளர்கள் சந்திப்பை நடத்தினர்.

பிரதான மேடையில் (HEAD TABLE) சட்டத்தரணி அபி சிங்கம் தலைமையில் சட்டத்தரணிகள் லக்சுமி வாசன், மரியோ புஸ்பரட்ணம். மற்றும் பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன். அரசியல் மற்றும் மொழி சார்ந்த செயற்பாட்டாளர் நீதன் சண்முகராஜா ஆகியோர் அமர்ந்திருந்து அங்கு சமூகளித்திருந்த ஊடகவியலாளர்களைச் சந்திக்கும் கலந்துரையாடலை ஆரம்பித்தனர்.

முதலில் மேற்படி ஐவரும் கனடிய தமிழர் பேரவை தொடர்பாகவும் அந்த அமைப்போடு தாங்கள் இணைந்து பணியாற்றிய அனுபவங்களையும் "மனந்திறந்து" தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த ஐவரும் பல்வேறு "அனுபவம் - ஆற்றல் - செயற்பாட்டுத் திறன்" ஆகியவற்றை கொண்டவர்கள் என்பதும் எமது தமிழர் சமூகம் அறிந்த ஒன்று. அவர்களது பங்களிப்பு போற்றுதற்குரியது. அவர்களின் முயற்சி வாழ்த்துவதற்கு ஏற்றது. கனடிய தமிழர் சமூகத்தை இணைத்துக்கொண்டு திசை மாறிச் செல்லும் கனடிய தமிழர் பேரவையை "சீர்" செய்வோம் என்கின்ற நல்லெண்ணம் அனைவருக்கும் புரிகின்றது.

பல்வேறு அச்சு ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களும் சமூக ஊடகங்களை நடத்துகின்றவர்களும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

எனினும் மிக நீண்ட நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பினைத் தொடர்ந்து இறுதியில் "இன்னும் பல விடயங்கள் உள்ளன" என்ற உணர்வையே பலருக்கு தந்திருக்கும் என்றே கருதவேண்டியுள்ளது. சந்திப்பை நடத்தியதன் நோக்கம் பூரணமாக எட்டப்படவில்லை என்பதும் அங்கு உணரப்பட்டது.

எனினும், மேலும் தொடர்ச்சியாக பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடல்களையும் சந்திப்புக்களையும் நடத்தவுள்ளதாக மேற்படி "கனடிய தமிழர் கூட்டு" என்ற அமைப்பின் தலைமை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

எமக்கு கிடைத்த தகவல்களின் படி "கனடிய தமிழர் கூட்டு" அமைப்பின் பின்னால் சுமார் 30 தீவிரமான அங்கத்தவர்கள் உள்ளார்கள் என்றும் அவர்களின் கூட்டு முயற்சியாகவே கனடிய தமிழர் பேரவையை "சீர்" செய்யும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்றும் அறியப்படுகின்றது.

சந்திப்பின் போது எடுத்துரைக்கப்பெற்ற கருத்துக்கள் அனைத்தையும் உள்வாங்கிய வண்ணம் இனி நடைபெறவுள்ள தொடர்ச்சியான மக்கள் சந்திப்புகள் மூலம் நல்ல ஒரு முடிவை எட்டுவதற்கு அனைவரும் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதையும் கனடா வாழ் தமிழ் மக்கள் இனி வரும் காலங்களிலாவது, கனடிய தமிழர் பேரவை போன்ற மக்களுக்கான அமைப்புக்கள் சரியான திசையில் மக்கள் சேவையாற்ற வேண்டும் என்பதையும். தமிழ் மக்களுக்காகவே இந்த அமைப்புக்களுக்கு வருடா வருடம் கனடாவின் மூன்று தளங்களில் உள்ள அரசுகளும் இலட்சக் கணக்கான டாலர்களை நிதிஉதவியாக வழங்குகின்றன என்பதையும் அறிந்து கொண்டு தங்கள் ஆதரவை வழங்க வேண்டும் என்பதையும் நாம் அவர்களிடமிருந்து எதிர்பார்ப்போமாக!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தாய் மண்ணை நேசித்த காரணத்தால் தாய் முகம் காணாமலே கனத்த இதயத்துடன் மடிந்த சாந்தன் என்னும் உணர்வாளன்

இதுவரை எழுதித்தீரா ஈழத்தின் தியாக வரலாற்றில் "சாந்தன்" என்னும் இன்னுமொரு உயிர் சருகாகியிருக்கிறது.

தாயகக் கனவைச் சுமந்து, தனது இருபது வயதில் தாய்நிலம் பெயர்ந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்டு 33 ஆண்டுகள் சிறைமீளப் போராடி, விடுதலையான பின்னரான இறுதி ஒன்றரை ஆண்டுகள் தாய்நிலம் திரும்பப் போராடி, அந்த ஏக்கம் தீராமலேயே உயிரிழந்திருக்கிற செய்தி, அத்தனை தமிழர்களையும் உறையவைத்திருக்கிறது.

இருபது வயது இளைஞனாக சிறைசென்ற தன்மகன், என்றோ ஓர் நாள் தாய்மடி சேர்வான் என்ற, சாந்தனின் தாயாரின் 33 வருடக் காத்திருப்பு பொய்த்துப்போய்விட்டது என்பதைத்தான் அத்தனை இலகுவாக எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.


தன் இளமைக்காலக் கனவுகளையும், வாழ்வையும் சிறையறைக்குள் குறுக்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தின் நீட்சியில், கடந்த 2022.11.11 ஆம் திகதி இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதன் பின்னரான இந்த ஒன்றரை ஆண்டுகளில், தாய்முகம் காணவும் தாயகம் சேரவும் எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளும் பயனற்றுப் போய், உயிரற்ற உடலமாய் சாந்தன் நாடு திரும்பும் நிலை ஏற்பட்டமை நான் உட்பட, ஒரு இனமாக எம் ஒவ்வொருவரையும் இயலாமையின் விளிம்பில் கூனிக்குறுகி நிற்கவைத்திருக்கிறது.

இந்த இறுதிநாட்களில் எது நிகழக்கூடாது என நினைத்தோமோ அந்தக் கொடுந்துயர் நிகழ்ந்திருக்கிறது. தன் ஆயுளின் அரைவாழ்நாளை மகனுக்கான காத்திருப்பிலேயே கழித்த ஒருதாயின் கனவு கானல்நீராகக் கலைத்துப் போடப்பட்டிருக்கிறது. அந்தத்தாயின் கண்ணீரின் கனதி, இது இரங்கலோடு கடந்துசெல்லும் இறப்புச் சம்பவமல்ல என்பதை வரலாறு தோறும் எங்களுக்கு இடித்துரைத்த வண்ணமே இருக்கும்.

ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக, எனது தனிப்பட்ட மற்றும் பதவிநிலை இயலுமைகளின் எல்லா எல்லைகளைக் கடந்தும் சாந்தனின் விடுதலைக்கான சில முயற்சிகளை, பல அழுத்தங்களை நானும் முன்னெடுத்திருந்தேன். பலதரப்பு அழுத்தங்கள், கோரிக்கைகள் எல்லாவற்றினதும் கூட்டிணைந்த வடிவமாக இருநாட்டு சட்ட நடைமுறைகளின் நெடுநாளைய இழுபறி நிலைக்குப் பின்னர், நாடு திரும்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு, பயண ஒழுங்குகளும் திட்டமிடப்பட்டு எல்லோரது வேண்டுதல்களும் கைகூடவிருந்த கடைசித் தருணத்தில் சாந்தனின் இறப்பு நேர்ந்திருக்கிறது.

எந்தச் சமரசங்களுக்கும் உட்படுத்த முடியாத வகையில், ஈழத்தமிழினத்தின் ஏதிலித்தனமும், அதிகாரமற்ற கையறுநிலையும், சாமான்யர்களின் உணர்வுகளை உணரத்தலைப்படாத அரசபீடங்களின் அசமந்தப்போக்கும், விடுதலை வேண்டிய எங்கள் இனத்தின் விடுதலைப் போராளியை காந்திய தேசத்தில் காவு வாங்கியிருக்கிறது.

இந்தக் கொடுந்துயரின் வலி சாந்தனின் குடும்பத்துக்கு வாழ்நாள் வலி என்றபோதும், இழப்பின் ரணங்களைச் சுமந்தவர்களாகவேனும் சாந்தனின் தாயார், தம்பி மதிசுதா உள்ளிட்ட சகோதரர்கள், உறவுகள் அனைவரும் இந்தக் கொடும் வலியின் வாதையிலிருந்து மெல்ல மெல்ல மீள, வல்ல இயற்கை வழிசெய்யட்டும்.



கனத்த இதயத்தோடு மாவீரன் சாந்தனுக்கு எம் புகழ் வணக்கம்.

சிவஞானம் சிறீதரன்
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

உலக செய்திகள்
World News

# ஐரோப்பிய ஒன்றிய முன்றலில் நடைபெற்ற நீதிக்கான போராட்டம்



தமிழின அழிப்பிற்கு நீதிகேட்டு, பிரித்தானியாவிலிருந்து ஜெனிவா நோக்கி பயணிக்கும் துச்சக்கர வண்டி பயணம் கடந்த 19ஆம் தேதி பெல்ஜியம் தலைநகர் புரூசலில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியம் முன்பாக, பெல்ஜியம் வாழ்தமிழ்மக்களுடன் இணைந்து கண்டனப் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

தமிழின அழிப்பிற்கு நீதிகேட்டும் தமிழர்களுக்கு தமிழீழமே இறுதித்தீர்வு என்பதை வலியுறுத்தியும் மோசமான காலநிலயினையும் பாராது அனைவரும் உரிமைக்குரல் எழுப்பினர் என தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் அரசியற்சந்திப்பும் நடைபெற்றது.

அச்சந்திப்பில் தாயகத்தில் தொடரும் இனவழிப்பு, அடக்குமுறை மற்றும் நடைபெற்ற தமிழின அழிப்பிற்கான அனைத்துலக நீதி பற்றிய தேவையினையும் எடுத்துக்கூறப்பட்டதோடு, எமது நிலைப்பாடு சார்ந்த மனுவும் எமதுதரப்புப் பிரதிநி-திகளால் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிதிநிகிகளிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து மக்கள் பங்களிப்போடு துச்சக்கர வண்டி பயணம் சிறப்பாக இடம் பெற்றது.

# தனுஷ்கோடி நோக்கி 40 நாட்களுக்கு பின் தாமதமாக வருகை வந்துள்ள ஆயிரகணக்கான பிளமிங்கோ பறவைகள் : கண்டம் விட்டு கண்டம் தாண்டி தனுஷ்கோடிக்கு

இந்தியா தனுஷ்கோடி மற்றும் ராமேஸ்வரம் பகுதிகளுக்கு 40 நாட்களுக்கு பின் காலதாமதமாக பிளமிங்கோ பறவைகள் வருகை தந்துள்ளன.

கடல் மாசுபாடு மற்றும் கடல் நீர் தரம் குறைவதால் பறவைகளின் வருசை குறைந்து வருவதாக பறவைகள் ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி செல்லும் பாதையில் அமைந்துள்ளது கோதண்டராமர் கோயில் கடற்கரைப்பகுதி அருகே அமைந்துள்ள கடல் நீர் மற்றும் மழைநீர் தேங்கும் பகுதிக்கு ஐரோப்ப கண்டத்தில் இருந்து பிளமிங்கே பறவைகள் வருடந்தோறும் டிசம்பர் மாதம் இறுதி முதல் ஜனவரி மாத இறுதிவரை உணவு தேடி வந்து செல்லும்.

அங்குள்ள சதுப்பு நிலப்பகுதியல் வாழும் கடல்வாழ் உயிரினங்களை உணவாகக் கொண்டு வாழ்ந்து வரும் பிப்ரவரி தொடக்கத்தில் தமிழகத்திலுள்ள சரணலாயங்களுக்கு செல்லும் ஆனால் இந்தாண்டு 40 நாட்கள் கால தாமதமாக பிளமிங்கோ பறவைகள் வருசை தந்துள்ளது.

வருகை வரும் பிறமிங்கோ பறவைகளை இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து ராமேஸ்வரத்திற்கு வரும் சுற்றுலாபயணிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் குடும்பம் குடும்பமாக வந்து பறவைகள் உணவு தேடும் அரிய காட்சிகளை கண்ட ரசித்து வருகின்றனர்.

இந்நிலையில் பருவநிலை மாற்றம் மற்றும் சமூகவிரோதிகள் வேட்டையாடி வந்ததால் கடந்த இரண்டு வருடங்களாக பிளமிங்கோ பறவைகள் வரத்து தடைப்பட்டது. இதனால் சுற்றுலாப்பயணிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்து வந்த நிலையில் இந்தாண்டு வருசை வரும் பறவைகள் கடந்த சில நாட்களாக வந்த வண்ணம் உள்ளது.

இது குறித்து பறவைகள் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டவர்கள் கூறுகையில் இந்த ஆண்டு 40 நாட்களுக்குப் பிறகு தனுஷ்கோடி பகுதிக்கு பிளமிங்கோ பறவைகள் வலசை வந்துள்ளது. தொடக்கத்தில் 400 பறவைகள் வந்த நிலையில் தற்போது 4 ஆயிரத்திற்க்கும் உட்பட்ட பறவைகள் குஜராத் மாநிலத்தில் இருந்து தனுஷ்கோடி பகுதிக்கு வந்த வண்ணம் உள்ளது.



பிளமிங்கோ பறவைகள் ஆண்டுதோறும் ஒரு வார காலம் இங்கு வருசை வருவதற்கான முக்கிய காரணம் பறவைகளுக்கு தேவையான உணவுக்காக மட்டுமே இப்பகுதிக்கு வருகை வருகிறது.

இந்த ஆண்டு கால தாமதமாக வந்ததற்கு நீர் மாசுபாடு மற்றும் ராமேஸ்வர பகுதியில் இருந்து வெளியாகும் கழிவு நீர் கடலில் கலப்பதால் தண்ணீரின் பி எச் அளவு குறைந்தால் பறவைகள் உண்ணக்கூடிய பாசிவகைகள் உற்பத்தி ஆகாததால் வருகை வரும் பிளமிங்கோ பறவைகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இவ்தாண்டு குறைந்துள்ளது.

தனுஷ்கோடி சுற்றுலா தளமாகவும், ஆன்மீக தலமாக மட்டுமே மக்கள் பார்த்து வரும் நிலையில் தனுஷ்கோடி பல்லுயிர் பெருக்கத்திற்கான முக்கிய இடமாக இருப்பதால் அதனை பாதுகாத்தால் மீன்களின் வளம் பெருகி மீனவர்கள் வாழ்வாதாரம் அதிகரிக்கும். எனவே இந்த பகுதியை பாதுகாக்க மக்கள் வனத்துறையுடன் இணைந்து கடலில் மாசுபடுவதை நீர் மாசுபடுவதையும் தடுக்க வேண்டும் என பறவைகள ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

பேட்டி
ரவி - பறவைகள் ஆர்வலர்

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஆற்றல் மிகு ஈழத்தமிழ் சமூகத்தை உருவாக்க கலைப்பணி ஆற்றுகை நிகழ்வு

பு. கஜிந்தன்



ஆற்றல் மிகு ஈழத்தமிழ் சமூகத்தை உருவாக்க கலைப்பணி ஆற்றுகை நிகழ்வு 26-02-2024 அன்று சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாண பண்பாட்டு கூடத்தின் ஏற்பாட்டில் ஆற்றல் மிகு ஈழத்தமிழ் சமூகத்தை உருவாக்க கலைப்பணி ஆற்றுகை நிகழ்வு யாழ்ப்பாண கந்தர்மட பழம் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பண்பாட்டு கூடத்தில், ஊடக இணைப்பாளர் பத்மநாதன் தர்மினி தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆற்றல் மிகு ஈழத்தமிழ் சமூகத்தை உருவாக்க கலைப்பணி ஆற்றுவோம் எனும் கருப்பொருளில், கலை நிகழ்ச்சிகள் என்றால் என்ன? கலை நிகழ்ச்சிகளை எப்படி நிகழ்த்துவது? கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தும் போது மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய விளைவுகள் யாவை?

போன்ற வினாக்கள் தொடர்பாக, அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த இசை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல குழப்பமான கதையாடல்கள் எமது சமூகத்தில் நிலவுகின்றமை தொடர்பாக ஆற்றுகையிடப்பட்டது.

இத்தகையதோர் பின்னணியில் ஈழத்தமிழரிடையே கடந்த காலங்களில் நிலவிய கலை நிகழ்ச்சிகள் எத்தகையன? அவை நிகழ்த்தப்பட்ட முறைமைகள் எத்தகையன? அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய விளைவுகள் யாவை? பற்றி விரிவாக துறை சார்ந்த அறிஞர்களினால் விரிவாக கலந்துரையாடப்பட்டன. மேலும் எமது சமூகத்தை ஆற்றல் மிகு சமூகமாக மாற்றுவதற்கு நமக்குத் தேவைப்படும் கலை நிகழ்ச்சிகள் பற்றிய உரையாடல்களும் இடம்பெற்றன.

இச்சந்திப்பில் ஊடகவியலாளர்கள், இணையத்தளம் மற்றும் வலைய வானொலி இயக்குநர்கள், யாழ்ப்பாண பண்பாட்டு கூடத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.







# யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தை திறந்து வைத்த பசுபிக் பிராந்திய பணிப்பாளர்

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் யாழ்ப்பாண பண்ணை பகுதியில் 28-02-2024 அன்று திறந்துவைக்கப்பட்டது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஐக்கிய நாடுகளுக்கான சனத்தொகை நிதியத்தின் (UNFPA) ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பாய் ஸ்மித் (Poi Smith) குறிந்த அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இதில் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் உத்தியோகத்தர்கள், பலரும் கலந்துகொண்டனர்.






# சாந்தன் அவர்களது மரணத்திற்கு அங்கஜன் எம்.பி இரங்கல்

சாந்தன் அவர்களது மரணத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இரங்கல் வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்ட உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

விரைவில் தனது தாயாரை சந்திப்பார் என நாமெல்லாம் எதிர்பார்த்திருந்த சாந்தன் அவர்கள் இயற்கை எய்தியுள்ளதாக தமிழக செய்திகள் தெரியப்படுத்தியுள்ளன.

கல்லீரல் பாதிப்பால் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாந்தன் 27-02-2024 அன்று காலை 7.50 மணிக்கு காலமானார் என சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனை அறிவித்துள்ளது.

நீண்ட சிறைவாசம், வலிகள் வேதனைகள் கடந்து விடுதலையாகியும் நாடு திரும்ப முடியாத முடக்கம், அதற்கான போராட்டம் என நீடித்த சாந்தனின் வாழ்வு நோயால் முடிந்து போனது.



அவர் இன்றிரவு நாட்டுக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நேரத்தில் இந்த துயரம் நடந்துள்ளது.

தன் மகனின் வருகைக்காக இறைநம்பிக்கையோடு மனநம்பிக்கையோடும் காத்திருந்த அவரது தாயாருக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை.

சாந்தனின் தாயார், சகோதரர், சகோதரிகள் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்வதோடு, சாந்தனின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது.

# சுன்னாகத்தின் மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் மரணம்!

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலணி பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் 26-02-2024 உயிரிழந்துள்ளார். மயிலணி வடக்கு சுன்னாகம் பகுதியை சேர்ந்த தேவராசா கமல்ராஜ் (வயது 39) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது வீட்டில் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் அயல் வீட்டில் இருந்து மின்சாரம் பெற்று தண்ணீர் மோட்டார் பயன்படுத்தியுள்ளார். இதனால் இவர் மின்சார தாக்குதலுக்கு உள்ளானார்.

இதன்போது அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் இன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்களுக்கான ஏயுவு தொடர்பான விழிப்புணர்வும் ஆரோக்கியமான வியாபார சூழலை உருவாக்குதலும் தொடர்பான கலந்துரையாடல்



யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்களுக்கான ஏயுவு தொடர்பான விழிப்புணர்வும் ஆரோக்கியமான வியாபார சூழலை உருவாக்குதலும் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பதிகாரி ந. விஜிதரன் தலைமையில் 28-02-2024 அன்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண பிராந்திய இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் செல்வி. மு. சிந்துஜா ஆகியோர் கலந்துகொண்டதோடு, ஆரோக்கியமான வியாபார சூழலை உருவாக்குதல் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள்.



மேலும் இக் கலந்துரையாடலில் சதொச நிறுவன முகாமையாளர், காகில்ஸ் நிறுவன முகாமையாளர், ப. நோ. கூட்டுறவு சங்க முகாமையாளர்கள், வர்த்தகர்கள், வியாபார உரிமையாளர்கள், வியாபார முகவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

# இலங்கை தமிழரசுக் கட்சியின் நலன்கருதி பதவியை துறந்தார் சிறிதரன் எம்.பி — புதிய தேர்தலுக்கு சம்மதம்!



இலங்கை தமிழரசுக் கட்சியின் 17வது தேசிய மாநாட்டை நடாத்துவதை தடுக்குமாறு கோரி இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவரால் திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது.

அந்தவகையில் அந்த வழக்கானது இன்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிலையில் வழக்கை தாக்கல் செய்தவரது குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், டாக்டர் சத்தியலிங்கம், குகதாஸன் ஆகியோர் கையொப்பமிட்டனர். அத்துடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் தேர்தலுக்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் கட்சியின் நலன்கருதி புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தனது தலைமை பதவியை துறந்துள்ளார்.

வழக்கின் பிரதிநிதிகளில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் வழக்கிற்கு இன்றையதினம் வருகை தராத காரணத்தால் வழக்கானது சித்திரை 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் சட்டத்தரணி புவீந்திரன் ஆகியோர் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மேய்ச்சல் தரை மீட்கும் மயிலத்தமடு, மாதவனை தமிழ் பண்ணையாளர்களின் போராட்டம் தொடர்கிறது



ஐந்து மாதங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமக்கும், தமது கால்நடைகளுக்கும், சிங்கள பெரும்பான்மையின விவசாயிகளால் இழைக்கப்படும் அட்டூழியங்களும், அநியாயங்களும் அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாணத்தின் தமிழ் பாற்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெரும்பான்மையின சிங்கள விவசாயிகள் தமது கால்நடைகளை தொடர்ச்சியாக துன்புறுத்தி வருவதோடு கொலை செய்வதாக, தொடர்ச்சியாக 160 நாட்களைக் கடந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள, மயிலத்தமடு, மாதவனை தமிழ் பால் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"அதிகூடிய மின்சாரத்தைக் கொடுத்து குறைமாதத்தில் கன்றை ஈன்றுள்ளது. குறை மாதத்தில் பிறந்த கன்றால் எழும்பிகூட நிற்க முடியவில்லை. இந்த கன்று குட்டி. இது அநியாயம்தானே? இது வாய்பேச முடியாத மிருகம் தானே இது? இது மின்சாரக் கம்பியா? இல்லையா என இதுக்கு தெரியுமா? பௌத்த தர்மத்தை மதிக்கும் அனைவரும் பாருங்கள். வாய்பேச முடியாத ஜீவன்களுக்கு இவ்வாறு செய்கிறீர்கள்? சுடுகிறீர்கள். வாய் வெடியை போடுகிறீர்கள். கட்டுத் துப்பாக்கியை கட்டுகிறீர்கள். வெட்டுகிறீர்கள். நீங்களா, பௌத்த தர்மத்தை மதிப்பவர்கள்?" என கால் பண்ணையாளர் ஒருவர் கவலை வெளியிடுகின்றார்.

மயிலத்தமடு, மாதவணையில் மேய்ச்சல் தரையை பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள விவசாயிகளை அகற்றுமாறு தமிழ் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக கோரிக் விடுத்து வருகின்றனர்.

கடந்த வருடம் செப்டெம்பர் 13ஆம் திகதி, மட்டக்களப்பு மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் பாற்பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க முடியாது என மாவட்டத்தின் அப்போதைய செயலாளர் கமலாவதி பத்மராஜா தெரிவித்ததை அடுத்து, செப்டெம்பர் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக தமிழ் பாற்பண்ணையாளர்கள் முதன் முதலாக ஆரம்பித்த போராட்டம் இன்றும் தொடர்கிறது.



தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தம்மை சந்திப்பதாக (பெப்ரவரி 25) தெரிவித்த, மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச, தம்மை சந்திக்கவில்லை என மயிலத்தமடு மாதவணை பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீனிதம்பி நிமலன் தெரிவிக்கின்றார்.

அத்துமீறி மேய்ச்சல் தரையை பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள விவசாயிகள், போராட்டம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை 275 மாடுகளை கொலை செய்துள்ளதாகவும் இதுத் தொடர்பில் கரடியனாறு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளபோதிலும் இதுவரை எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் சீனிதம்பி நிமலன் தெரிவிக்கின்றார்.

குறித்த 275 மாடுகளும் 22 பண்ணையாளர்களுக்கு சொந்தமானதென அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

மேய்ச்சல் தரையை கைப்பற்றியுள்ள சிங்கள விவசாயிகள் சிறிய குளங்கள் மற்றும் ஆறுகளையும் ஆக்கிரமித்துள்ளமையால் மாடுகளின் தாகத்தைத் தீர்க்க வழியின்றி பண்ணையாளர்கள் தடுமாறுவதாக அவர் வலியுறுத்துகின்றார்.

சுமார் 6,500 ஏக்கர்களைக் கொண்ட குறித்த மேய்ச்சல் தரை காணியில் 5,000 ஏக்கர் வரையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும், விவசாயப் பணியில் ஈடுபடுவதற்கென அந்த பிரதேசத்தில் சுமார் 700 பேர் வரையில் தங்கியிருப்பதாகவும் பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டுகின்றார்.

தனக்கு சொந்தமான 50 மாடுகளில், 15 மாடுகளை விவசாயிகள் கொலை செய்துள்ளதாக தெரிவிக்கும் பண்ணையாளர் ஒருவர், தமது வாழ்வதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

"காலங்காலமாக மாடுகள் கொண்டுவந்து கட்டும் இடம். இவர்கள் அத்துமீறி குடியேறியமையால் எங்கள் மாடுகளை கட்ட முடியாமல் உள்ளது. வெட்டுவதும், சுடுவதும், இதோடு வெட்டிடி போட்டுள்ளார்கள். இதோடு 15 மாடுகள். என்னுடைய 50 பதிவு செய்து, 15 மாடுகள் இவ்வாறு கிடக்கின்றன. இதற்கு அரசாங்கம்தான் பொறுப்புக்கூற வேண்டும். எங்களுக்கு ஒரு ஆதாரமும் இல்லை. மாடுதான் எங்களின் வாழ்வாதாரம். இவர்கள் வந்ததால்தான் இந்த அழிவு கூட."

மயிலத்தமடு, மாதவணையில் மேய்ச்சல் தரையை நம்பி 982 பால் பண்ணையாளர்களுக்குச் சொந்தமான சுமார் இரண்டு இலட்சம் மாடுகள் காணப்படுவதோடு, இந்த மாடுகளை தமது வாழ்வாதாரமாக நம்பி சுமார் 3,000 குடும்பங்கள் வாழ்கின்றன.

இவர்கள் அனைவரது வாழ்வாதாரமும் தற்போது கேள்விக் குறியாகியுள்ளதாக மயிலத்தமடு மாதவணை பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன் தெரிவிக்கின்றார்.

# கனடாவில் இருந்து மாதகலுக்குச் சென்றவர் மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில் உயிரிழப்பு!

மூச்செடுக்க சிரமப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆணொருவர் 26-02-2024 அன்று உயிரிழந்துள்ளார். கனடாவில் வசிக்கும் சோதிலிங்கம் கந்தசாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மாதகல் கிழக்கு, மாதகல் என்ற முகவரியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தார். இந்நிலையில் அவருக்கு ஒரு நாள் முன்னதாக மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 26-02-2024 அன்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது சடலம் கனடாவிற்கு கொண்டு வரப்படுமா என்ற தகவல் கிடைக்கவில்லை.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை சிவில் சமூகங்களால் தீர்க்க முடியுமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பத்தில் சிவில் சமூகங்கள் தலையிட வேண்டும் என்று கடந்த வாரம் நான் எழுதிய கட்டுரை தொடர்பாக சிவில் சமூக மட்டத்தில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. ஒரு கட்சியின் உட்கட்சி விவகாரத்தில் எதற்காக சிவில் சமூகம் தலையிட வேண்டும் என்ற ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. அதாவது எதைப் பாதுகாப்பதற்காக அந்த தலையீடு? என்று அந்தக் கேள்வியை மேலும் கூர்மையாகக் கேட்கலாம்.

ஆம். சிவில் சமூகங்களின் தார்மீகத் தலையீடு என்பது ஒரு கட்சியைப் பாதுகாப்பதற்கு அல்ல. ஒரு நிர்ணயகரமான காலகட்டத்தில் தமிழ் அரசியலில் ஏற்படக்கூடிய ஒரு சேதத்தை தவிர்க்கும் நோக்கத்தோடுதான் அதைச் செய்யலாம். கட்சிகளை பாதுகாப்பது சிவில் சமூகங்களின் வேலையாக இருக்க முடியாது என்பதில் பிரதான சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தெளிவாக காணப்பட்டார்கள்.

மேலும், கடந்த 15 ஆண்டு காலத் தோல்விகளுக்கும் பெரும் பொறுப்பு தமிழரசுக் கட்சி தான். இப்பொழுது தலைமை பதவிக்காகப் போட்டியிடும் இருவருமே அதற்குப் பொறுப்புத்தான். இவர்கள் யாரையும் பாதுகாக்க வேண்டிய தேவையில்லை. இவர்கள் யாருடைய பக்கமும் நிற்க வேண்டிய தேவையும் இல்லை. கட்சி எக்கேடுகெட்டாவது போகட்டும். அது சிதையும் இடத்தில் வேறொன்று புதிதாக வரட்டும். என்று ஓர் அபிப்பிராயம் சில சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் காணப்பட்டது.

அதே சமயம் தமிழ்ச் சமூகத்தின் பொதுவான நோய்க்கூறாகிய சூழ்ச்சிக் கோட்பாடுகளை முன்வைத்து சிந்திப்பது என்ற போக்கு. சிவில் சமூகங்கள் மத்தியிலும் அவ்வாறான ராணுவப் புலனாய்வுச் சிந்தனையாளர்கள் உண்டு. தமிழரசுக் கட்சியின் விடயத்தில் சிவில் சமூகங்கள் தலையிட வேண்டும் என்ற கோரிக்கைக்குள் ஏதும் உள்நோக்கம் உண்டா என்ற ஒரு சந்தேகத்தை சில சிவில் சமூகத்தவர்கள் கிளப்பினார்கள்.

இவ்வாறான வாதப்பிரதிவாதங்களில் சிவில் சமூகங்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே திருகோணமலையில், அந்த மறை மாவட்டத்தின் ஆயர் தலைமையில் ஒரு சமரச முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அது எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்த தரப்புகள் நிபந்தனையின்றி அந்த வழக்கைக் கைவிடுவதற்குத் தயாராக இருக்கவில்லை. அதனால் ஆயரின் முயற்சி வெற்றி பெறவில்லை.

எனினும் யாழ்ப்பாணத்தில் இந்து மதத் தலைவர்களும் உள்ளிட்ட மதத் தலைவர்களின் சமூகம் ஒன்று இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுவது என்று ஒரு நகர்வை முன்னெடுத்தது. அதன்படி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நல்லை ஆதீனத்தில் ஒரு சந்திப்பு நடக்கவிருந்தது. ஆனால் சுமந்திரனின் தாயார் இயற்கை எய்தியதையடுத்து சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் வழக்கிற்கு சில நாட்களே இருக்கும் ஒரு பின்னணியில், சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களின் தலையீடு பயன் பொருத்தமானதாக இல்லாத ஒரு வெற்றிடத்தில், வழக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படலாம் என்ற ஒரு நிலைதான் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் காணப்படுகிறது. சில சமயம் சுமந்திரனுக்கு ஏற்பட்ட தனிப்பட்ட இழப்பு இந்த விடயத்தில் தாக்கம் செலுத்துமாக இருந்தால் ஏதும் மாற்றங்கள் நிகழலாம். இல்லையென்றால் வழக்கு நீதிமன்றத்துக்கு வரும்.

இந்த விடயத்தில் சிவில் சமூகங்களின் தலைஇட வேண்டும் என்ற சிந்தனையே மிகவும் பிந்தித்தான் ஏற்பட்டது. அதுவே ஒரு விடயத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. நடப்பு அரசியல் அரங்கில் நிகழ்வுகள் தொடர்பில் சிவில் சமூகங்கள் எந்தளவுக்கு கூருணர்வோடு - சென்சிட்டிவ் ஆகக்-காணப்படுகின்றன என்பது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சி மாற்றத்திற்கான ஒரு கூட்டை உருவாக்கியபொழுது அதில் சிவில் சமூகங்கள் தலையிட்டன. குறிப்பாக மறைந்த சோபித தேரின் தலைமையில் சிங்களச் சிவில் சமூகங்கள் தலையீடு செய்தமையை, பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட "அரசியல் கட்சிகளின் மீதான சிவில் சமூகத்தின் தார்மீகத் தலையீடு" என்று வர்ணித்தார்.

உண்மைதான். அரசியல் சமூகம் முடிவெடுக்க முடியாது திணறிக் கொண்டிருக்கும் பொழுது, சிவில் சமூகத்தின் தார்மீகத் தலையீடு தேவையாக இருக்கிறது.

அரசியலில் நேரடியாக ஈடுபட விரும்பாதவர்கள் அல்லது ஈடுபட முடியாதவர்கள் அல்லது தேர்தல் மைய அரசியலில் வெறுப்பும் சலிப்பும் அடைந்தவர்கள் போன்ற வகையினர் பொதுவாக சிவில் சமூகங்களில் இணைவதுண்டு. அவர்கள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கம் அற்றவர்கள் என்பதுதான் அவர்களுக்குரிய மகிமை. அதேசமயம் தமது சமூகத்தின் கருத்துக்களை உருவாக்குவதில் அபிப்பிராயங்களை திரட்டுவதில் அவர்கள் செல்வாக்கு செலுத்த முடியும் என்பது அவர்களுக்கு உரிய பலம்.

இவ்வாறு தேர்தல் மைய அரசியல் அபிலாசைகள் இல்லாதவர்களும் அதேசமயம் தமது சமூகத்தின் நீதிக்காக குரல் கொடுப்பவர்களுமாகிய சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு எப்பொழுதும் சமூகத்தில் குறிப்பாக அரசியல் சமூகத்தில் மதிப்பான இடம் இருக்கும். ஆனால் தமிழ் அரசியல் சூழலில் அவ்வாறான பலமும் மதிப்பும் எந்த ஒரு சிவில் சமூகத்திற்கும் கிடையாது.

மிகக்குறிப்பாக அதிக ஆசனங்களை வென்று பலமாக காணப்படும் கட்சி சிவில் சமூகங்களை மதிக்காது. அல்லது சிவில் சமூகங்களை இடைஞ்சலாகப் பார்க்கும். இதுதான் கடந்த 15 ஆண்டு கால அனுபவம். மாற்று ஓட்டத்துக்குரிய கட்சியாக அல்லது ஒப்பீட்டளவில் பலம் குறைந்த கட்சியானது, சிவில் சமூகங்களோடு பெருமளவுக்கு ஒத்துழைக்கும். அதுகூட இயலாமையின் பாற்பட்ட ஒத்துழைப்பா? என்ற கேள்வி உண்டு. ஒரு பலமான அரசியல் எதிரியை எதிர்கொள்வதற்கு ஒப்பீட்டளவில் பலம் குறைந்த கட்சி சிவில் சமூகங்களின் ஒத்துழைப்பைப் பெறுவது என்பது பொதுவான ஒரு போக்கு. அவ்வாறு சிவில் சமூகங்களின் ஒத்துழைப்போடு அக்கட்சியானது பலமடைந்த பின் அது சிவில் சமூகங்களை அவமதிப்பதும் உண்டு. கடந்த 15 ஆண்டுகளில் அதுவும் நடந்திருக்கின்றது.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான சிவில் சமூகங்கள் அறிக்கைச் சமூகங்களாகவே காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக செயற்பாட்டு ஒழுக்கத்தை பொறுத்தவரை அவை அனேகமாக "ரியாக்டிவ்" ஆனவை. அதாவது அரசியலில் நிகழும் நகர்வுகளுக்குப் பதில் வினை ஆற்றுவது. மாறாக ஒரு புதிய போக்கை உருவாக்கும் "ப்ரோஆக்டிவ்" ஆன சிவில் சமூகங்கள் இல்லை.

இப்படிப்பட்டதோர் சிவில் சமூகச் சூழலில், ஒரு சிவில் சமூகம் சொன்னால் கட்சிகள் கேட்கும் என்றோ அல்லது மக்கள் கேட்பார்கள் என்றோ கூறத்தக்க ஒரு பலமான நிலை தமிழ் சமூகத்தில் இன்னமும் ஏற்படவில்லை. பெரும்பாலான சிவில் சமூகங்கள் அறிக்கைச் சமூகங்களாகதான். நீதியான ஒரு நிலைப்பாட்டை எடுத்து அந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவை திரட்டுவது; சூம் சந்திப்புகளை ஒழுங்கு செய்வது; அல்லது நேரடியாக சந்திப்புகளை ஒன்று செய்வது; அல்லது கூட்டு அறிக்கைகளைத் தயாரித்து சிவில் சமூகப் பிரதிநிதிகளிடமும் கையெழுத்துக்களைப் பெறுவது. போன்ற நடவடிக்கைகளில்தான் அவர்கள் பொதுவாக ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக, தேர்தல் காலங்களில் அவர்கள் எப்பொழுதும் தமிழ்ப் படங்களில் வரும் போலீசைப்போல சண்டை முடிந்த பின் கடைசி நேரத்தில் விசில் அடித்துக் கொண்டு வந்து அறிக்கை விடுவார்கள். இப்பொழுது தமிழரசுக் கட்சியின் உன் வீட்டுச் சண்டையிலும் அதுதான் நிலைமை.

இதில் இரண்டு தரப்பிலும் நிற்கும் சட்டத்தரணிகள் யார் யார் என்று பார்த்தால், அதில் முக்கியமான இருவர் ஒரே சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் சிறீதரன் அணியின் சட்டத்தரணியாக உள்ளார். மற்றவர் யாழ்ப்பாணத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் சிறீதரனுக்கு எதிரான அணியின் சட்டத்தரணியாக உள்ளார்.

தமிழ் சிவில் சமூகங்கள் மத்தியில் உள்ள பிரச்சினை என்னவென்றால், இங்கு தீவிரமாகச் செயல்படும் சிவில் சமூகங்கள் ஏதோ ஒரு கட்சிக்கு நெருக்கமானவைகளாக பார்க்கப்படுகின்றன. குறிப்பாக தமிழ் சிவில் சமூக அமையத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு நெருக்கமானது என்று சில விமர்சிகர்கள் விமர்சிப்பது உண்டு. ஆனால் அந்த அமைப்புக்குள் இருக்கும் எல்லாருமே அவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நிபந்தனையற்ற ஆதரவாளர்கள் அல்ல. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மீது விமர்சனத்தை கொண்டவர்களும் அங்கே உண்டு.

கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளை அதிகமாக முன்னெடுத்தவர் மன்னாரைச் சேர்ந்த சிவகரன். இப்பொழுது அவரும் ஒரு பக்கம் வைத்து பார்க்கப்படுகிறார்.

இப்படிப்பட்டதோர் சிவில் சமூகப் பின்னணிக்குள், தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட பிணக்கைத் தீர்க்கும் விதத்தில், இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும், தமிழ் சிவில் சமூகங்களால் தலையீடு செய்ய முடியவில்லை. இவ்வாறு ஏற்கனவே உள்ள சிவில் சமூகங்கள், குறிப்பாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட சிவில் சமூகங்கள் உணர்த்திறனோடு செயற்படாத வெற்றிடத்தில்தான் புதிது புதிதாக யார் யாரோ சிவில் சமூகங்களை உருவாக்குகிறார்கள். ராணுவ புலனாய்வாளர்கள் உட்பட.

---



Sri Lanka News இலங்கை செய்திகள்

# கல்விசார பணியாளர்களைப் பாதிக்கும் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு கண்டு மாணவர்களின் கல்வியை உறுதி செய்க — யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

கல்விசார பணியாளர்களைப் பாதிக்கும் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு கண்டு மாணவர்களின் கல்வியை உறுதி செய்ய வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

26-02-2024 அன்றையதினம் அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் சிக்கல்களிற்கு உரிய காலஅவகாசம் ஊழியர் சங்கங்களினால் வழங்கப்பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் சிறிலங்கா அரசாங்கமும் இதுவரை தீர்வு வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உடனடித் தீர்வினை வழங்கவேண்டி நாடு தழுவிய இடம்பெறும் வேலைநிறுத்தத்தில் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் எதிர்வரும் பெப்ரவரி 28 மற்றும் 29, 2024 ஆம் திகதிகளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக, எங்களின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முன்னெடுக்கும் இருநாள் வேலைநிறுத்தத்திற்கு மாணவர்கள் நாங்கள் எமது விரிவுரைகளினைத் தவிர்த்து எங்கள் மூத்தவர்களிற்கு தார்மீக மற்றும் முழுமையான ஆதரவுகளினையளிக்கின்றோம்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையில் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பால், அடித்தட்டு உழைக்கும் வர்க்கமும் முதற்கொண்டு அனைத்துத் தரப்பினரும் பாரிய நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ள நிலையில் அவற்றினை ஈடுசெய்வதற்கேற்ற சம்பள அதிகரிப்பென்பது அத்தியாவசியமானதொன்றாகும்.

மேலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அவ்வப்போது ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளினால் மாணவர்களின் கல்வியாண்டுகள் நிர்ணயித்தவற்றைவிட காலத்தால் அதிகரித்துள்ள நிலையில், மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டேனும், காலதாமதம் ஏதுமின்றி கல்விசார ஊழியர்களைப் பாதிக்கும் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட நியாயமான சிக்கல்களிற்கு விரைந்து தீர்வுகான உரிய தரப்புக்கள் முன்வர வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது.

# மத்திய அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் மனித சங்கிலி போராட்டம் முன்னெடுப்பு



மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீரழித்து வரும் இலங்கை அரசையும், சிறை தண்டனையை தட்டி கேட்காத மத்திய அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் மனித சங்கிலி போராட்டம் 27-02-2027 அன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழக கடலோரப் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை இலங்கை கடற்படை யானது எல்லை தாண்டி மீன் பிடித்ததாக குற்றம் சாட்டு முன் வைத்து தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருவது மட்டுமல்லாது இரண்டாவது முறையாக எல்லை தாண்டும் மீனவர்களுக்கு ஓராண்டு முதல் இரண்டு ஆண்டு சிறை தண்டனையும் படகோட்டிகளுக்கு ஆறு மாதம் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அகில இந்திய மீனவர் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ தலைமையில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்கும் இலங்கை அரசையும், அதை தடுக்காத மத்திய அரசையும் கண்டித்து பாம்பன் தெற்குவாடி கடற்கரை பகுதியில் மனித சங்கிலி போராட்டம் நடத்தினர்.



இந்த போராட்டத்தில் பல்வேறு மாவட்டத்திலிருந்து காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டு இலங்கை அரசுக்கு எதிராகவும், மத்திய அரசுக்கு எதிராகவும் கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# தூய்மை திட்டத்திற்கான பூரண ஒத்துழைப்புகளை வழங்க தயார் என யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணை தூதுவர் வடக்கு மாகாண ஆளுநரிடம் உறுதி



யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை சந்தித்தார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று (28.02.2024) இந்த சந்திப்பு நடைபெற்றது.

மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது இந்திய துணைத் தூதுவருக்கு தெளிவுப்படுத்தினார்.

அதற்கமைய, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி தெரிவித்தார். இளைஞர், யுவதிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சிகளை பெற்றுக்கொடுக்கவும், தீவுகளுக்கான படகு சேவையை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான வசதிகளை ஒழுங்கு செய்வதுடன், தரை மற்றும் கரையோர தூய்மை திட்டத்திற்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் கூறினார். தூய்மை திட்டத்திற்கு தேவையான நிதியை இந்திய துணை தூதரகத்திலிருந்து ஒதுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் அவர்களிடம் யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி உறுதியளித்தார்.


Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthdays
- Graduation Party
- Bridal Shower
- Engagement
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இறுதிவரை குடும்பத்தினரைக் காண முடியாமல் சாந்தன் மறைவு! உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் இரங்கல்!

28-02-2024

இராசீவ்காந்தி கொலை வழக்கில் தடா நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை விதிக்கப் பெற்று பின்னர், உச்சநீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனையாக்கப்பட்டு 31 ஆண்டு காலமாக இருண்ட சிறையில் வாடிய சாந்தன், அதே உச்சநீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டும்கூட சிறப்பு முகாம் என்னும் சிறையில் அடைக்கப்பட்டார்.

உடல்நலம் குன்றியிருக்கக் கூடிய அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க இந்திய அரசு மறுத்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில் அரசு மருத்துவமனையில் சாந்தன் உயிர் துறந்த செய்தி அனைவரையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. உச்சநீதிமன்ற ஆணையிட்டபடி உடனே விடுதலை செய்திருந்தால், அவர் தமிழீழம் சென்று தனது குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்திருப்பார். அவர்களின் அன்பான பராமரிப்பில் உயிர்ப் பிழைத்திருக்கக் கூடும்.

குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.

தனக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத ஒரு வழக்கில் தண்டிக்கப்பட்டு, 31 ஆண்டுகள் சிறையில் சொல்லொண்ணாத வேதனைகளுக்கு ஆளாகி இறுதியில் மறைந்து போன சாந்தன் அவர்களுக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)
தலைவர்.





# மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் சம்பள அதிகரிப்பு கோரி ஆர்ப்பாட்டம்



(கனகராசா சரவணன்)

கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை மற்றும் ஊழியர்களுக்கு நீண்ட நாட்களாக தீர்க்கப்படாதுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு கோரி 28-02-2024 அன்று புதன்கிழமை மட்டக்களப்பு அரசடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலைய முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு இணங்க நாட்டில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 28, 29 ஆகிய இருநாள் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அமைவாக கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கம் இணைந்து மட்டக்களப்பில் வெளிவாரி கற்கைகள் நிலைய முன்பாக நூற்றுக்கு மேற்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் அன்று காலை ஒன்றினைந்தனர்.




இதன் போது 2016ம் ஆண்டைய சம்பள சீர்திருத்தத்திற்கு அமைவாக பல்கலைக்கழக ஊழியர்களுக்கு தருவதாக அரசினால் வாக்குறுதியளிக்கப்பட்டு இன்றுவரை வழங்கப்படாதுள்ள 15 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு,

மாதாந்த இடர் கொடுப்பனவை அதிகரி, பல்கலைக்கழக சேமலாப நிதியை வேறு தேவைகளுக்கு அரசாங்கம் பயன்படுத்தாதே, யாருடைய படையிது பல்கலையின் படையிது, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஊதிய அதிகரிப்புச் செய், பல்கலைக்கழகங்களில் காணப்படும் நீண்டகாலமாக காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்பு, மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையில் கைவைக்காதே,

அரசே ஏற்றுக் கொள்ளப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு போன்ற பல்வேறு வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஸங்கள் எழுப்புயவாறு ஆர்பாட்டத்தில் சுமார் ஒருமணித்தியாலம் ஈடுபட்டபின்னர் ஆர்பாட்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

# மட்டக்களப்பு தனியார் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள வாவியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரிலுள்ள தனியார் பேரூந்து தரிப்பிடத்தின் அருகிலுள்ள வாவியில் உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவர் புதன்கிழமை (29) காலை 9 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி 6ம் பிரிவு ஏ.எல்.எஸ். மாவத்தையைச் சேர்ந்த 49 வயதுடைய முகமது கனிபா முகம்மது அஸ்மி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சுனயீனம் காரணமாக சம்பவதினமான நேற்று காலை வீட்டை விட்டு வெளியேறி மட்டு போதனா வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் வீடதிரும்பிவராத நிலையில் உறவினர்கள் தேடிவந்த நிலையில் வாவியில் சடலம் மீட்கப்பட்டுள்ளார் என பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.


பொலிசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணையையடுத்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் உப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.



# கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை விடுதலை செய்ய முடியும் என்றால் ஏன் சாந்தன் அவர்களை நாட்டுக்கு அழைத்து வர முடியவில்லை — கோமகன் கேள்வி



சட்டரீதியாக கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை இந்திய அரசின் அழுத்தத்தின் பேரில் இரவோடு இரவாக விடுதலை செய்கின்றீர்கள் ஆனால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன் அவர்களை ஏன் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு முடியவில்லை என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை எல்லைக்குள் உள் நுழைந்து தொழிலில் ஈடுபடுகின்றார்கள் என்ற ரீதியாக கைது செய்யப்பட்டு, அவர்கள் இந்திய மத்திய அரசினுடைய அழுத்தத்தின் காரணமாக இரவோடு இரவாக விடுதலை செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இடம்பெறுகின்றன.

நீதிமன்றங்களில் வழக்குகள் இருந்தாலும் அதற்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனைகளை வழங்கி இரவோடு இரவாக விடுதலை செய்யப்படுகின்ற சம்பவங்கள் இந்த நிகழ்காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த நேரத்தில் கூட சாந்தன் அவர்கள் 2022 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில் இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில்கூட ஏன் அவருக்கு இப்படியான சம்பவம் நடக்கவில்லை.

வயது முதிர்ந்த காலத்தில் கூட அவரது தாயார் ஒரு நேர உணவை உண்டு கொண்டு தன்னுடைய மகனுக்கு தன்னுடைய கையால் ஒரு நேர சாப்பாடு ஆவது ஊட்டி விட வேண்டும் என்ற ஒரு அந்த உயரிய கனவோடு காத்திருந்தார்.

அவருக்கு எவ்வாறான தேற்றுதல்களை நீங்கள் சொல்லி தேற்றுவீர்கள்?

அதே நேரத்தில் குடி வரவு குடியகல்வு திணைக்களங்கள் கூட இந்த சம்பவத்திற்கு கரிசினையாக செயல்பட்டு இருந்தால் சாந்தன் அவர்களை உயிரோடு தாயாரிடம் ஒப்படைத்திருக்க முடியும் என்பதனையும் இந்த நேரத்தில் பொறுப்போடு கூறிக் கொள்ள விரும்புகிறேன் என்றார்.



# கறுப்புக்கொடி போராட்டத்திற்கு தயாராகும் வடமராட்சி கிழக்கு மீனவர்கள்!

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து இலங்கை கடல் எல்லையில் கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பினை தெரிவிப்பதற்கு வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் பகுதிக்குள் அத்துமீறி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இந்திய இழுவை மடி படகுகளை எதிர்த்து எதிர்வரும் 3.3.2024 கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்வதற்கே வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சமாசங்களின் சம்மேளனத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

26.02.2024 அன்று வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் தவறாது அனைத்து அங்கத்தவர்களையும் கறுப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் அண்மைக்காலமாக இந்தியன் இழுவை மடி படகுகளின் அத்துமீறல் அதிகரித்துக் காணப்படுவதால் வடமராட்சி கிழக்கில் குறித்த கறுப்புக் கொடி போராட்டத்திற்கு பலத்த ஆதரவு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# தென்னிந்தியக் கும்மாள நடிகைகளின் வருகை சமூகத்தைப் போதை மயப்படுத்தும் இன்னுமொரு நிகழ்ச்சி நிரல் — பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



தமிழ்ப் பிரதேசங்களில் தினம் தினம் போதை மரணங்கள் பதிவாகும் அளவுக்கு எமது இளைய தலைமுறை இன்று போதைப்பொருட்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட கையோடு இளைஞர்களை இலட்சியப் பாதைகளில் இருந்து திசை திருப்பும் நோக்கில் போதைப் பொருட்கள் திட்டமிட்டு விநியோகிக்கப்பட்டன. இன்று அதைக் கைவிட முடியாத அளவுக்கு போதை பெரும் புற்று நோயாகத் தமிழ்ச் சமூகத்தை அரிக்க ஆரம்பித்து விட்டது. இது போதாது என்று, இப்போது திட்டமிட்டுத் தென்னிந்தியாவில் இருந்து கும்மாள நடிகைகள் வரவழைக்கப்படுகின்றனர். இதுவும் தமிழ்ச் சமூகத்தைப் போதை மயப்படுத்தும் இன்னுமொரு நிகழ்ச்சி நிரலே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை மல்லாகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது மக்களின் பொழுது போக்குக்காக என்று சொல்லி இந்தியாவில் இருந்து கும்மாள நடிகைகள் கூட்டிவரப்படுகின்றனர். ரம்பா, ஊர்வசி, மேனகாக்களைக் கொண்டு முனிவர்களின் தவத்தைக் கலைத்த கதைகள் புராணங்களில் நிறைய உண்டு. இந்தக் கதைகள்தாம் இப்போது எம் கண்முன்னே அரங்கேறத் தொடங்கி உள்ளன. கஞ்சாவும் மாவாவும் ஐஸும் கெரோயினும் மாத்திரம் போதைப்பொருட்கள் அல்ல. மதியை மயக்கும் எல்லாமே போதைகள்தாம். அந்தவகையிலேயே, எமது இளைஞர்களைக் குறிவைத்து கும்மாள நடிகைகளின் களியாட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இவை தொடர்ந்து நிகழுவதைத் தவிர்க்கும் முயற்சிகளில் தமிழ்ச் சமூகத்தின் நலனில் அக்கறையுள்ள அனைவரும் ஈடுபடவேண்டும்.

போரினால் பாதிக்கப் பட்ட எமது மக்களின் உள ஆற்றுப்படுத்தலுக்குப் பொழுது போக்குகள் அவசியம். ஆனால், அந்தப் பொழுதுபோக்குகள் பண்பாட்டுச் சீரழிவுக்கு வித்துடுவனவையாக இருக்கக் கூடாது. பண்பாடு என்பது ஒரு இனத்துக்குத் தனித்துவமான, அந்த இனம் தன்னை யார் என்று உணர்ந்து கொள்ளவும், மற்றவர்களுக்குத் தன்னை யார் என்று அடையாளப்படுத்தவும் கூடிய ஒரு வாழ்க்கை முறை. இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கின்ற நாம் எமது இனத்தின் பண்பாட்டு அடையாளங்களை எந்தக் கேளிக்கைகளின் பொருட்டும் இழந்து விடக்கூடாது. நாமும் நமக்கென்று பல கலைகளைக் கொண்டிருக்கிறோம். அவற்றை மேடையேற்ற உணர்வுள்ள பணம் படைத்தவர்கள் முன்வரவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் அரச உத்தியோகத்தர்களின் 49 வீதமான தொலைபேசி எண்கள் செயல்படாதவை என ஆய்வில் கண்டுபிடிப்பு

## அரச சேவையில் வினைத்திறன் இன்மை குறித்து கணக்கெடுப்பின் முடிவுகள் மூலம் புரிந்து கொள்ள முடியும் என பேராதனை பலகலைக் கழக பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்

**(கனகராசா சரவணன்)**

இலங்கையில் அரச உத்தியோகத்தர்களின் 49 வீதமான தொலைபேசி எண்கள், அதாவது அரைவாசி எண்கள் செயல்படாத எண்கள் என் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரக் கற்கைகள் பிரிவின் கணக்கெடுப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரலவினால் நாடு முழுவதையும் உள்ளடக்கிய இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரதேச செயலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களைக் கருத்தில் கொண்டு இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணக்கெடுக்கப்பட்ட 589 தொலைபேசி எண்களில் 286, அதாவது 49 வீதமானது செயலற்ற எண்கள் எனவும் தொலைபேசி எண்களில் 22 வீதம் செயலில் உள்ளது ஆனால் பதிலளிக்கவில்லை எனவும் ஆய்வுத் துறையின் கூற்றுப்படி, அழைப்புகளுக்கு பதிலளிக்கும் சதவீதம் 29 வீதமாகும்.

மேலும், 98 உள்ளூராட்சி மன்றங்கள், 23 மாநகர சபைகள் மற்றும் 36 நகர சபைகளின் தொலைபேசி இலக்கங்கள் இந்த ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அரச சேவையில் தற்போதுள்ள வினைத்திறன் இன்மை குறித்து கணக்கெடுப்பின் முடிவுகள் மூலம் புரிந்து கொள்ள முடியும் என பேராதனை பலகலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரக் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் இலங்கை விமானப்படையின் 73வது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம் — 2024" கண்காட்சி நிகழ்வுகள்




இலங்கை விமானப்படையின் 73வது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம் - 2024" கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

"நட்பின் சிறகுகள்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் மார்ச் மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிவரை காலை 10 மணி முதல் இரவு 11 மணிரை இந்த கண்காட்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

குறித்த விடையம் தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இலங்கை விமானப்படையுடன் இணைந்து யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றமும் இந்த கண்காட்சில் இணைந்துள்ளது.

கட்: Air Vice Marshel
Muditha Mahawattage
(Head Of Organizing Committee)

கட்: வி.கே. விக்னேஷ்
நிர்வாக இயக்குனர்
யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்
(Executive Director - CCIY)

கட்: Asela Jayasekara
Air Commodore

கட்: Sivanesan Senthuran
Squadron Leader



# இந்திய அரசு தொடர்ச்சியாக அழுத்தங்களை கொடுக்குமாக இருந்தால் அமைச்சுப் பதவியை துறப்பேன்

## - அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இந்திய அரசிடமிருந்து இலங்கை அரசிற்கு மீனவர்கள் தொடர்பான பிரச்சனை குறித்து தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் ஆனால் எனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டு மீனவ மக்களுடன் இணைந்து கடலில் போராடுவேன் என கடத்தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க இல்லையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய தூதுவருடன் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் அதிகார பகிர்வு குறித்து கலந்துரையாடினோம். நான் நீண்டகாலமாக எதை கூறி வந்தேனோ அதைத்தான் வரலாறும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

அன்றைக்கு நான் சொன்னதை சக கட்சிகள், சக இயக்கங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இன்றைக்கு இந்த அழிவுகள், இழப்புக்கள், துன்பங்கள் வந்திருக்காது என்று நான் அவரிடம் கூறியிருந்தேன்.

நாட்டினுடைய வருங்கால அரசாங்கம் எப்படி இருக்கும், யார் இருப்பார்கள் என்றும் கலந்துரையாடினோம்.

அதைவிட மிக முக்கியமாக சமீபத்தில் ஜேவிபி கட்சியின் தலைவர் புதுடெல்லிக்கு சென்று இருந்தார். ஆனால் அவர் அங்கு எமது கடல் தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து எந்த ஒரு கருத்தும் சொல்லவில்லை. அதைவிட வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கடந்தவாரம் இந்திய தூதுவர் சந்தித்திருந்தார். அங்கு கூட நமது கடல் தொழில் மக்களின் பிரச்சினைகள் குறித்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் எவற்றையும் சொல்லவில்லை.

ஆனால் என்னுடைய பேச்சுவார்த்தையில் கூடியளவு நேரம் அத்துமீறிய சட்டவிரோத இந்திய கடல் தொழிலாளர்களினால் எமது வளங்கள் சுரண்டப்படுகிறது, எங்களுடைய கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே ஒரு வினாடி கூட அந்த தடை செய்யப்பட்ட அந்த சட்டவிரோத தொழிலுக்கு இடம் கொடுக்க முடியாது என்பதை நான் தெரிவித்திருந்தேன்.

ஆனால் அதைத் தொடர்வதற்கான அழுத்தங்கள் இந்திய தரப்பிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்படுமாக இருந்தால் நான் அமைச்சரவையில் இருந்து ராஜினாமா செய்துவிட்டு, எமது கடல் தொழிலாளர்கள் இணைந்து கடலில் அதனை எதிர்ப்பதற்கு தயாராக உள்ளேன் என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# மோகன் சுவாமிகளுக்கு மிக சிறந்த ஆன்மீகவாதிக்கான விருது!

இலங்கை செய்திகள் Sri Lanka News





யாழ்ப்பாணம் வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கௌரவ கலாநிதி மோகன் சுவாமிகள் அவர்களுக்கு மிகச் சிறந்த ஆன்மீகத்திற்கான விருது தமிழ்நாடு ABJ அறக்கட்டளையால் 25-02-2024 கொழும்பில் தனியார் விடுதியில் நடத்திய விருது வழக்கும் விழாவில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், ABJ அறக்கட்டளை நிர்வாகிகள், உறுப்பினர்கள், பௌத்த மத குரு, உட்பட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

இதேவளே கடந்த வெள்ளிக்கிழமை ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் காலை 10:45 மணிமுதல் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் பரா.ரதீஸ் அவர்களின் ஆன்மீக சொற்பொழி இடம் பெற்றுள்ளதுடன்.

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த, விவேகானந்தா இந்து மகளிர் கல்லூரி, விவேகானந்தா தேசிய பாடசாலை, தி/இந்து மகாவித்தியாலயம், உவர்மலை விவேகானந்தா கல்லூரி, தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலையில் கல்வி கற்கின்ற, 10 மாணவர்களுக்கு 70,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் - தொல்லியல் மற்றும் கலாசார சுற்றுலா கற்கையினை மேற்கொள்வதற்காக, அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக ரூபா 50,000 நிதியும் கொடையளிக்கப்பட்டுள்ளது.

# நெல்லியடி மத்திய கல்லூரியில் மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம் - நெல்லியடி மத்திய கல்லூரியில் தரம் 06 இல் இணைந்து கொண்ட புதுமுக மாணவன் மீது, தரம் பத்து மாணவனால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் பணிப்புரைக்கு அமைய, இந்த விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு பாடசாலை அதிபர் மற்றும் வலயக்கல்வி பணிமனைக்கு கௌரவ ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படும் அபயம் பிரிவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவன் மற்றும் தாக்குதல் மேற்கொண்டதாக கூறப்படும் மாணவன் ஆகியோரிடம் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மாணவனுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கும் வரை கௌரவ ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படும் அபயம் பிரிவினால் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணம் - நெல்லியடி மத்திய கல்லூரியில் தரம் 06 இல் இணைந்துக்கொண்ட புதுமுக மாணவன் மீது கடந்த 22 ஆம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், கௌரவ ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய, குறித்த மாணவனை ஆளுநர் செயலகத்தின் உத்தியோகத்தர் குழாம் நேரில் சென்று நலன் விசாரித்ததுடன், மாணவன் மீதான தாக்குதல் தொடர்பிலும் அறிந்துக்கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியை தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டு தெற்கு, பகுதியில் ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவர் 26-02-2024 அன்றையதினம் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். இச்சம்பவத்தில் வட்டு தெற்கு நாவலடி வீதி என்ற முகவரியில் வசித்து வந்த செல்வரதி விதிதரன் (வயது 59) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், வீட்டில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தில் பி.ப 5.00 மணிக்கும் பி.ப 6.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் 2016ஆம் ஆண்டு ஏற்கனவே ஒரு தடவை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர் என்றும், அதற்கு பின்னர் மன அழுத்தத்தில் காணப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.




# மறைந்தும் மறையா அருள்திரு பங்காரு அடிகளாரின் 84வது அவதாரத்திருநாள்




ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர்
ஆதிபராசக்தி குருமன்றத்தில் 03-03-2024
ஞாயிற்றுக்கிழமை அன்று அவதாரத்திருநாள்
சிறப்பாக நடைபெறவுள்ளது.

**"மனநலத்தின் ஆகும் மறுமைமற்
றதும் இனநலத்தின் ஏமாப்(பு) உடைத்து"
மறுமைப் பேரின்பம் என்பது அவரவர் மனத்தின்
தூய்மையைப் பொறுத்ததாகும்.
மேலும் அம்மறுமைப்பேறு அவரவர் சார்ந்துள்ள
இனத்தின் தன்மையால் சிறப்பாகும்.**

ஆன்மீக குருவின் அவதாரப் பெருநாள் என்பது ஒரு பெருமங்கள விழா மட்டுமல்ல மனித குலத்தின் துயர் துடைத்து ஏற்றமும். மாற்றமும் தந்து உள்ளத்தில் பொலிவும், புத்துணர்ச்சியும் ஊட்டி ஆன்மாக்களின் வாழ்வையும் புதுப்பிக்கும் நாள். என்னை வெறும் படம் என்று எண்ணாதே! அதில் நான் உயிரோட்டமாய் இருக்கின்றேன் என்று அன்று கூறியிருக்கின்றார்.




**காலை 8-00 மணிமுதல் பூசை நியதிகள் நடைபெற்று.
பஜனைகள், சிறப்பு நடனம், மகேஸ்வரபூசையுடன்
முடிவடையும்.
அன்னையின் அருள் வேண்டி சிறப்புடன் வாழ அனைத்து
சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
அத்துடன் நீங்கள் விரும்பிய வேப்பிலை, பழம், பூ என்பன
கொடுத்துதவலாம்.**

80E மார்க்கம்-நாஸ்டீன் வீதி ஸ்காபரோ
தொடர்புகளுக்கு: 647-436-9647

# முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

பிறப்பு:
14 - 06 - 1943



இறப்பு:
29 - 01 - 2024

## திரு. சண்முகம் தியாகராஜா (வர்த்தகர்)

(யாழ்ப்பாணம், வேலணை, கரம்பன், கனடா)

*தாங்கள் எமக்கு தந்தையாய் கிடைத்தது எம் தவப்பயனே*
*தந்தையாய் கிடைத்த சொத்தும் நீங்கள் தான் அப்பா!*
*எங்களை விட்டு நீங்கள் மறைந்தது கொடுமையப்பா*
*மனம் போன்ற வாழ்வு இனிதாய் தந்தவர் நீங்கள்!*
*எம்மை தனிமையில் விட்டு சென்றது முறையோ?*
*மாதம் ஒன்று கடந்தும். எம் அழுகை தீரவில்லை*
*ஓயாது உங்கள் நினைவு எங்களை வாட்டுகின்றதே!*
*மண்ணை விட்டு அப்பா நீங்கள் மறைந்து*
*விண்ணை அடைந்து அங்கு வாசம் செய்தாலும்*
*உங்கள் ஆசைமுகமும் அன்பான வார்த்தைகளும்*
*எங்கள் மனதைவிட்டு அகலவே மாட்டா அப்பா!*

எங்களின் குடும்பத்தலைவர் இறைபதமடைந்திட்ட செய்தி கேட்டு எங்கள் இல்லங்களுக்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மண்டபத்திற்கு இருதினங்களும் வருகை தந்து அஞ்சலி செலுத்தி இறுதிக் கிரியைகளிலும் பங்கு கொண்டும் மலர்மாலைகள் சாத்தியும், மலர் வளையங்கள் வைத்தும், தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டும் அனுதாபம் தெரிவித்தவர்கள், பல்வேறு வகையிலும் உதவி நின்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதோடு,

எதிர்வரும் சனிக்கிழமை *02-03-2024* அன்று பகல் *11* மணி தொடக்கம் இல. **733 Birchmount Road** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்!

இங்ஙனம். மனைவி. பிள்ளைகள். மருமக்கள்



# தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடைய செய்துள்ளன

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை

(29-02-2024)

தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடைய செய்துள்ளன. எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு தேர்தல்கள் பின் தள்ளப்பட்டு வருகிறன. இது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் மறைமாவட்ட இறை மக்களுக்கு தவக்காலத்தில் விடுக்கும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தவக்கால மடலில் அவர் மேலும் தெரிவிக்கையில், திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டில் மீண்டும் ஒரு தவக் காலத்தில் கத்தோலிக்க மக்களாகிய நாம் காலடி பதித்துள்ளோம்.

இத் தவக்காலம் அருளின் காலமாகவும், மனமாற்றத்தின் காலமாகவும் அமைந்துள்ளது. பழைய பாவ இயல்புகளை களைந்து விட்டு செபம், தவம், தான தர்மம் வழியாக இறைவனோடும் தன்னோடும் அயலவர் களோடும் ஒப்புரவாக வேண்டிய காலமாக இந்த தவக்காலம் அமைந்துள்ளது.

தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடைய செய்துள்ளது.

தேசிய அரசியல் கட்சிகளுக்கிடையே தொடர்ந்து இழுபறி நிலை தொடர்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு தேர்தல்கள் பின் தள்ளப்பட்டு வருகிறது.

இது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆட்சியில் உள்ளவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்கு பல்வேறு காய் நகர்த்தல்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

ஆகவே இந்த நிலையில் ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படவும் மக்களின் உரிமைகள் நிலை நாட்டப் படவும் தொடர்ந்து நாம் செபிப்போம்.

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. பெரும்போக நெல் அறுவடை நடைபெறும் இக்காலத்தில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லாத சூழ்நிலையில் விவசாயிகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் நுண்நிதி கடன்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருள் பாவனையின் தாக்கத்தால் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விட்டது.

மன்னார் தீவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள 250 மெகா வாட் காற்றாலை சக்தி திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முனைப்போடு செயல்படுகின்றது.

இத்திட்டத்தால் மக்கள் எதிர்நோக்கும் பாதிப்புகள் குறித்து எம்மாலும் பொது அமைப்புகளாலும் பல சந்தர்ப்பங்களில் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

ஆயினும் அரசாங்கம் இத்திட்டத்தை விடுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் தொடர்ந்து நாம் நமது எதிர்ப்பை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துவோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இறை மக்களுக்கு விடுத்துள்ள தனது தவக்கால மடலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



# மன்னாரில் கடற்படை, அதிரடிப்படை கூட்டு நடவடிக்கை : 53 ஆயிரம் Pregabalin மருந்து வில்லைகள் மீட்பு



- எஸ்.றொசேரியன் லெம்பேட்

(29-02-2024)

இலங்கை கடற்படை, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் (STF) இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது, மன்னார் இலுப்பைக்கடவை தடாகத்தில் புதர்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 53 ஆயிரம் Pregabalin காப்ஸ்யூல்கள் மருந்து வில்லைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோதமான பொருட்கள் நாட்டிற்குள் வருவதை தடுக்கும் நோக்கில் கரையோர மற்றும் கடற்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வழமையான நடவடிக்கைகளின் போது இந்த கடத்தல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளையில் உள்ள SLNS புவனேகாவினால் இலுப்பைக்கடவை தடாகத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் (STF) உதவியுடன் 28-02-2024 அன்று குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அருகே உள்ள புதர்களில் சந்தேகத்திற்கிடமான பெட்டியை மீட்டனர்.

இதன் போது 53 ஆயிரம் போதை மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட போதை மாத்திரைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# யார் குத்தியும் அரிசி ஆகட்டும்! அரிசியை யார் குத்துகிறார்கள் என்பது முக்கியமல்ல!

*(- கனடா நக்கீரன்(*

மாவீரர் நாளான நொவெம்பர் 27 அன்றும் அதற்குப் பின்னரும் நிலம், புலம் இரண்டிலும் வாழும் தமிழ் மக்களிடையே பேசு பொருளாகிவிட்ட விடயங்கள் இரண்டு. ஒன்று போலி துவாரகா பற்றிய சர்ச்சை. மற்றது உலகத் தமிழர் பேரவையின் இமயமலைப் பிரகடனம். முன்னது வந்த வேகத்தில் மறக்கப்பட்டு விட்டது. பின்னது பற்றி இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் காரசாரமாக விமர்ச்சிக்கப்பட்டு வருகின்றது.

இந்த இமயமலைப் பிரகடனம் இரண்டு அமைப்புக்களால் வெளிடப்பட்டது. ஒன்று பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உலகத் தமிழர் பேரவை. மற்றது பவுத்த தேரர்களை உள்ளடக்கிய சிறந்த இலங்கைக்கான சங்கம் (**'Sangha for a Better Sri Lanka'**).

உலகத் தமிழர் பேரவை (**GTF**) புலம் பெயர் தமிழர்களர்கள் சிலரால் ஆயுதப் போர் மவுனிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு தொடக்கப்பட்டது. உலகத் தமிழர் பேரவை பல்வேறு நாடுகளின் தமிழர் அமைப்புகளின் ஒரு கூட்டு அமைப்பாகும். ஈழத் தமிழர்களின் மனித உரிமைகளையும், தன்னாட்சியும், தாயகத்தையும் வலியுறுத்தும் அமைப்பாகும். இது மக்காளாட்சி, அறவழி, பன்னாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப செயல்ப்படுகிறது. இதன் முதல் தலைவர் வண. பிதா எஸ்.ஜே. இமானுவேல் அடிகள் ஆவர்.

1995 ஒக்தோபரில் குடாநாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்காக இலங்கை இராணுவம் தாக்குதலைத் தொடங்கியபோது யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேறிய 5 இலட்சம் மக்களில் இமானுவேல் அடிகளாரும் ஒருவர். அடுத்த ஆண்டை வன்னிக் காடுகளில் கழித்தார்.

1997 இல் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை காரணமாக, இம்மானுவேல் அடிகள் இங்கிலாந்து சென்று அங்கு ஓராண்டு காலம் பணியாற்றினார். பின்னர் செருமனியில், மூன்சுடர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் 2007 ஆம் ஆண்டு வரை குருவானவராகப் பணியாற்றினார். இங்கு பணியாற்றிக் கொண்டிருந்த போது அவர் இலங்கைத் தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும் பணிகளையும் பன்னாட்டு அரங்கில் முன்னெடுத்து வந்தார். 2010 ஆம் ஆண்டில் இம்மானுவேல் அடிகள் உலகத் தமிழர் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இம்மானுவேல் அடிகளார் அவர் 2020 ஆம் ஆண்டு தாயகம் திரும்பியிருந்தார். அவரை அடுத்து சுரேன் சுரேந்திரன் அதன் தலைவராகவும் பேச்சாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இங்கிலாந்து நாட்டை ப் புகலிடமாகக் கொண்டவர். 1983 ஆண்டு நடந்த இனக் கலவரத்தை அடுத்து அவரது குடும்பம் புலம் பெயர்ந்தது. இவ்வமைப்பு நான்கு மாநாடுகளை 2002 ஆண்டு தொடக்கம் தொடராக நடத்தியிருக்கின்றது.

உலகத் தமிழ் பேரவை தொடங்கிய காலம் தொட்டு அதில் கனடிய தமிழர் பேரவை **(CTC)** உறுப்புரிமை வகித்து வருகிறது. கனடிய தமிழர் பேரவை சார்பாக இராச்.தவரட்ணசிங்கம், ஆமெரிக்காவில் இருந்து மருத்துவர் இலயாஸ் ஜெயராசா மற்றும் இங்கிலாந்தில் இருந்து குகன் வேலுப்பிள்ளை ஆகியோரும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

சிறந்த இலங்கைக்கான சங்கம் என்பது பல தசாப்தங்களாக அமைதி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்கள் அனைவரும் அச்சமும் ஐயமும் இல்லாமல், சம உரிமைகளை அனுபவிக்கும் ஒரு அமைதியான சுபீட்சமான இலங்கைக்காக அர்ப்பணித்த ஒரு மகா சங்கக் குழுவாகும்.

சிறந்த இலங்கைக்கான சங்கம் என்ற அமைப்பில் இலங்கையில் உள்ள மல்வத்தை, அஸ்கிரிய மற்றும் அமரபுர - இராமஞ்ஞ பவுத்த பீடங்களைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தனித்தனியே இயங்கிய அமரபுர, இராமஞ்ஞன பீடங்கள் கடந்த ஓகஸ்ட் 16, 2019 இல் ஒன்றிணைந்தது தெரிந்ததே. இதன் காரணமாக இலங்கையில் உள்ள பவுத்த மத பீடங்களின் எண்ணிக்கை 4 இல் இருந்து 3 ஆகக் குறைந்துள்ளது. சிறந்த இலங்கைக்கான சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராக வண. களுப்பகான பியரத்தின தேரர் இருக்கிறார்.

27 ஏப்ரில் 2023 அன்று நாகர்கோட் நேபாளத்தில் **(27 April in Nagarkot, Nepal)** அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த மகா சங்கத்தினருக்கும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழ் உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இமயமலைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டது.

இலங்கையில் நிலவும் இனங்களுக்கு இடையிலான சிக்கல்கள் பற்றி இவை கலந்து பேசின. "நன்கு கட்டமைக்கப்பட்ட இந்தத் தொடக்கப் பேச்சுவார்த்தைகள் ஒருவருக்கொருவர் கண்ணோட்டத்தைப் பார்க்க எங்களுக்கு உதவியது" என இரண்டு அமைப்புக்களும் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "பவுத்த தேரர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் கடுமையான எதிர்மறையான கருத்துக்கள் காணப்படுவதாகவும், பொருளாதார ரீதியாக வெற்றிகரமான மற்றும் செல்வாக்கு மிக்க புலம்பெயர் தமிழர்கள் இலங்கையை அழிக்க முனைவதாக சிங்கள சமூகத்தினரிடையே ஒரு கருத்து நிலவுவதாகவும், இந்த மாறுபட்ட கருத்துக்கள் மற்றும் அச்சங்கள் எப்போதும் பகுத்தறிவு அடிப்படையிலானவை அல்ல என்பதைக் காணலாம். நாகர்கோட்டில் வெளியிடப்பட்ட 'இமயமலைப் பிரகடனம;' எங்கள் பயணத்தின் ஒரு முக்கியமான விளைவாகும்" என அந்தக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இமயமலைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு அறிக்கைகள் பின்வருமாறு -

அறிக்கை 1

எந்தவொரு சமூகமும் தனது அடையாளத்தையும் இடத்தின் பெருமையையும் இழக்க நேரிடும் என்ற அச்சம் இல்லாமல் வாழவும் இலங்கையின் பன்முகத் தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

**Statement 1**
**Preserving and promoting the pluralistic character of the country where no community feels threatened about losing its identity and pride of place.**

அறிக்கை 2

பொருளாதார நெருக்கடியை சமாளித்தல், உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக ஒரு பொருத்தமான மேம்பாட்டு மாதிரியைத் தெரிவு செய்தல், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் ஏனையவர்களிடம் இருந்து ஈடுபாடு மற்றும் முதலீட்டை எளிதாக்குதல், நாடு வளர்ச்சிப் பாதையில் இருப்பதை உறுதி செய்தல் மற்றும் இலங்கையை ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாக ஆக்குதல்.

**Statement 2**
**Overcoming the economic crisis, selecting an appropriate development model that encourages local production, facilitating involvement and investment from overseas Sri Lankans and others, ensuring the country is in a growth trajectory and making Sri Lanka firmly a middleincome country.**

அறிக்கை 3

தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் மற்றும் அனைத்து மக்களிடையே சமத்துவம் மற்றும் சம குடியுரிமையை ஊக்குவிக்கும், பொறுப்புக்கூறும் நிறுவனங்களை உறுதி செய்யும் மற்றும் மாகாணங்களுக்கு போதுமான அதிகாரப் பகிர்வை உத்தரவாதம் செய்யும் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குதல், அதுவரை நடைமுறையில் உள்ள அதிகாரப் பகிர்வு விதிகளை நம்பகமான முறையில் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

**Statement 3**
**Arriving at a new Constitution that guarantees individual and collective rights and promotes equality and equal citizenship among all peoples,ensures accountable institutions and guarantees adequate devolution of powers to the provinces, and until such time focus on the faithful implementation of provisions of sharing of powers in the existing Constitution.**

அறிக்கை 4

ஒன்றுபட்ட, பிளவுபடாத நாட்டில் அதிகாரப் பகிர்வு, மக்களின் சமயம், பண்பாடு மற்றும் பிற அடையாளங்களை ஏற்றுக்கொண்டு, அந்த அடையாளங்களை மதித்து, அதை நோக்கிச் செயல்படுதல். இனக்குழுக்களுக்கும் மதக் குழுக்களுக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்துதல்.

**Statement 4**
**Devolving power in a united and undivided country, accepting the religious, cultural and other identities of people and respecting those identities, and working towards establishing trust between ethnic groups and religious groups.**

அறிக்கை 5

கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்வதற்கும், அத்தகைய துன்பங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக பொறுப்புக்கூறல் உள்ளிட்ட நடவடிக்கைகளை உருவாக்குவதற்கும் இணக்கமாகவும் அர்ப்பணிப்புடனும் இருக்கும் ஒரு இலங்கையை கட்டி எழுப்பல்.

**Statement 5**
**Envision a Sri Lanka that is reconciled and committed to learning from its past and creating measures including accountability to ensure that such suffering never occurs again.**

அறிக்கை 6

இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் மற்றும் பன்னாட்டு கடமைகளுக்கு இணங்குதல், சுதந்திரமான மற்றும் ஆற்றல்மிக்க வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். மற்றும் (இலங்கை) உலகின் மக்களாட்சி, அமைதியான மற்றும் வளமான நாடுகள் போல் அதன் பெருமையைப் பெறுவதை உறுதி செய்தல்.

**Statement 6**
**Complying with bilateral and multilateral treaties and international obligations, taking steps to follow independent and dynamic foreign policy, and ensuring the country takes its pride of place among the democratic, peaceful and prosperous nations of the world.**

இந்த இமயமலைப் பிரகடனத்தின் படிகளை சிறந்த இலங்கைக்கான சங்கம் என்ற அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தேரர்கள் குழுவும், உலகத் தமிழர் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுக்குழுவும் இலங்கையில் உள்ள சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் உட்பட பல அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் போன்றோரைச் சந்தித்துக் கையளித்து வருகின்றன.

இந்தக் குழு தேசிய ஒற்றுமையை நிறுவுவதன் மூலம் அமைதியான நாட்டை கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தடைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இமயமலைப் பிரகடனத்தை பெற்றுக் கொண்ட சபாநாயகர் மதிப்புக்குரிய மஹிந்த யாப்பா அபேவர்தன பேசுகையில், ஒவ்வொரு இலங்கையரும் திறந்த மனதுடன் இதில் இணைந்து இணக்கமான மற்றும் சுபீட்சமான இலங்கைக்கான கூட்டு பார்வைக்குப் பங்களிக்குமாறு அழைப்பு விடுத்தார். இந்தத் தேசியப் பணிக்காக தங்களை அர்ப்பணித்த அனைத்துத் தரப்பினருக்கும் சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

மகா சங்கம், உலகத் தமிழ் சமூகம் மற்றும் மதிப்புக்குரிய உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தச் சந்திப்புக்கள் " தேசிய ஒற்றுமைக்கான ஒரு வரலாற்று வாய்ப்பு" என்று நீதி அமைச்சர் மதிப்புக்குரியு (கலாநிதி) விஜேதாச இராசபக்ச தெரிவித்தார். பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சமூகத்தை 'புலம்பெயர்ந்தோர்' என்று அழைப்பதற்கு பதிலாக, அவர்களை எங்கள் சொந்த சமூகமாக கருத வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். அவர்கள் அனைவரும் இந்த நாட்டில் வேர்களைக் கொண்டுள்ளனர், எனவே அவர்கள் இலங்கையர் என்று கருதப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் இனச் சிக்கலுக்கு நாடு சுதந்திரத்திரம் அடைந்த நாள் முதல் மேற்கொளளப்பட்ட முயற்சிகள் மகாசங்கத்தினரும் பவுத்த தேரர்களும் காட்டிய கடுமையான எதிர்ப்புக் காரணமாக சைவிடப்பட்டன. 1957 இல் எழுதப்பட்ட பண்டா - செல்வா உடன்பாடு, 1965 இல் எழுதப்பட்ட டட்லி - செல்வா உடன்பாடு இரண்டும் பவுத்த தேரர்கள் காட்டிய எதிர்ப்புக் காரணமாகவே கிழித்தெறியப்பட்டன என்பது வரலாறு.

எனவே சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என உலகத் தமிழர் பேரவை கருதுகிறது எனலாம். பவுத்த மத பீடங்களை எதிர்த்து அல்லது சிங்கள மக்களின் விரும்பத்திற்கு மாறாகத் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படுமாயின் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என்ற உண்மையை புறந்தள்ள முடியாது. எனவே சிங்கள மக்களிடையே செல்வாக்குச் செலுத்தும் பவுத்த தேரர்களது காலில் விழுந்தே இனச் சிக்கலுக்குத் தீர்வு காண்பது சிறந்த வழியாகும். இப்படியான முயற்சி முன்னர் மேற்கொள்ளப்படவில்லை. இதுவே முதல் முயற்சி. இந்த முயற்சி வெற்றியில் முடியாது தோல்வியில் முடியலாம். அதனால் நாங்கள் இழப்பதற்கு ஒன்றும் இல்லை. இந்த வழியையும் தமிழர் தரப்பு மேற்கொண்டது என்று வரலாறு பேசும்.

எதிர்பார்த்தது போலவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இரு கன்னகைகளாகப் பிரிந்து நிற்கும் தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் அமைப்புக்கள் உலகத் தமிழர் பேரவையின் முயற்சியை கடுமையாகச் சாடி வருகின்றன.

தமிழர்களும் தாயகமும் எரிந்து கொண்டிருக்கையில் உலகத் தமிழர் பேரவை பிடிலை இசைக்கிறதா? என பிரித்தானிய தமிழர் பேரவை தனது அறிக்கையில் காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளது. "உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பைச் சேர்ந்த ஒரு சிலர் பிக்குகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷ‘ களை கொச்சைப்படுத்தும் முகமாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என ரெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார். "எல்லோரும் ஏறிச் சறுக்கி விழுந்த குதிரையில் சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த கதை" என இபிஆர்எல்எவ் பொதுச் செயலாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் உலகத் தமிழர் பேரவையின் முன்னெடுப்பை வர்ணித்துள்ளார்.

எப்போதும் என் வழி தனி வழி என நடந்து கொள்ளும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உலகத் தமிழர் பேரவையின் முயற்சி இரணில் அரசாங்கத்துக்கு வெள்ளையடிக்கும் முயற்சி எனச் சாடியுள்ளார். காங்கிரசைப் பொறுத்தளவில் அது இந்தியா, அமெரிக்கா, பிரித்தானிய நாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வருகிறது. இன்றைய பூகோள அரசியலில் இந்தியாவையும் மேற்குலக நாடுகளையும் பகைத்துக் கொள்வது எந்தளவு தூரம் புத்திசாலித்தனமான அரசியல் என்பது புரியவில்லை.

தாயகத்தில் நித்தம் பலத்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் வாழும் எமது மக்களுக்கு விடிவு வேண்டும். அரசியல் தீர்வு வேண்டும். நிலம் பறிபோகிறது, இந்துக் கோயில்கள் இடிக்கப்படுகின்றன, பவுத்த விகாரைகள் ஆயிரக் கணக்கில் வடக்கிலும் கிழக்கிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் முளைக்கின்றன, வடக்குக் கடல் வளம் சீனாவுக்குத் தாரை வார்க்கப்படுகிறது, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்குத் தீர்வு காண முயற்சிக்கக் கூடாதா? முயற்சி செய்வோரை இகழந்து பேசலாமா?

உலகத் தமிழர் பேரவையின் நோக்கங்கள் எவையும் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரானவை அல்ல. மாறாக, சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த அதே நோக்கங்கள் இவை.

உண்மையான அமைதி சமாதானம் நீதியில் நங்கூரமிடப்பட வேண்டும். அனைவருக்கும் உலகளாவிய உரிமைகளுக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். இதைத்தான் உலகத் தமிழர் பேரவை அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக சாதிக்க முயற்சிக்கிறது. இந்த முயற்சிகளை நாம் ஊக்குவிக்க வேண்டுமே தவிர, தடைக் கற்களைப் போடக் கூடாது.

யார் குத்தியும் அரிசி ஆகட்டும்! அரிசியை யார் குத்துகிறார்கள் என்பது முக்கியமல்ல!

# உடல்நலக் குறைவால் உயிரிழந்த சாந்தன் உடலை இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை:

## உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்

இந்திய செய்திகள்

சாந்தன் உடலை இலங்கைக்கு கொண்டு செல்ல தேவையான உதவிகளை செய்து வருவதாக உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது. உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சாந்தன், கடந்த 28ம் தேதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.இந்த நிலையில், உயர் நீதிமன்றத்தில் அவர் ஏற்கெனவே தொடர்ந்த வழக்கு, நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், கே.குமரேஷ்பாபு அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது நடந்த வாதம்:தமிழக அரசு சார்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.முனியப்பராஜ்: சாந்தனை இலங்கைக்கு அனுப்ப தேவையான பணிகள் நடந்து வந்த நிலையில் துரதிருஷ்டவசமாக உயிரிழந்தார். நீதிபதிகள்: சாந்தனை இலங்கைக்கு அனுப்பி வைக்க மத்திய அரசின் அனுமதி எப்போது கிடைத்தது?மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏஆர்எல் சுந்தரேசன்: அவரை இலங்கைக்கு அனுப்ப மத்திய அரசு சார்பில் பிப். 22ம்தேதியே அனுமதி வழங்கப்பட்டு விட்டது.நீதிபதிகள்: மத்திய அரசு முன்கூட்டியே அனுமதி அளித்தும், சாந்தனை இலங்கைக்கு தமிழக அரசு அனுப்பாதது ஏன்?மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா: சாந்தனின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் கடந்த ஜனவரி 24ம் தேதி திருச்சி மருத்துவமனையில்



அனுமதிக்கப்பட்டார்.

அவரால் நகரக்கூட முடியாத சூழலில் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.ஏர்ஆம்புலன்ஸ் மூலமாக அவரை இலங்கைக்கு அனுப்பி வைக்க தேவையான நடவடிக்கைகள் எடுத்து வந்த நிலையில், மாரடைப்பால் உயிரிழந்துவிட்டார். (மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பித்தார். சாந்தனின் உடலை இலங்கைக்கு கொண்டு செல்ல தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு செய்து வருகிறது.மத்திய அரசின் கூடுதல் சொலி சிட்டர் ஜெனரல் ஏஆர்எல் சுந்தரேசன்: சாந்தன் உடலை இலங்கைக்கு கொண்டுசெல்ல தூதரக அனுமதி உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் உடனடியாக வழங்கப்படும். இவ்வாறு வாதம் நடந்தது.

இதையடுத்து, நீதிபதிகள் கூறியதாவது: உயிரிழந்த சாந்தன் தொடர்பான ஆவணங்களை மத்திய அரசுக்கு தமிழக அரசு வழங்க வேண்டும். சாந்தன் உடலை இலங்கைக்கு அனுப்பி வைக்க ஏதுவாக தூதரக அளவிலான சான்றிதழ்களை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதற்கான பொறுப்பு (‘நோடல்’) அதிகாரிகளாக மூத்த ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை நியமிக்க வேண்டும். இவ்வாறு உத்தரவிட்ட நீதிபதிகள், அதுதொடர்பான அறிக்கையை மார்ச் 4ம் தேதி தாக்கல் செய்ய அறிவுறுத்தி உள்ளனர்.

சாந்தன் உடல் உறவினர்களிடம் ஒப்படைப்பு: சாந்தனின் உடலை விமானம் மூலம் இலங்கைக்கு எடுத்துச் சென்று, அங்கிருந்து யாழ்ப்பாணம் அருகே உள்ள கிராமத்துக்கு செல்வதற்காக, அவரது உடல் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் நேற்று காலை 9.45 மணிக்கு பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டது.பின்னர் எம்பார்மிங் செய்யப்பட்டது. இதையடுத்து இரவு 9 மணிக்கு சாந்தனின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்று விமானம் மூலம் அவரது உடல் இலங்கைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

# அண்ணாமலையின் ‘மிஷன் பல்லடம்’ பாஜகவுக்கு ஆதாயமா, சேதாரமா ? ஒரு பார்வை




2024ம் ஆண்டு தொடங்கியதில் இருந்து நான்காவது முறையாக பிரதமர் மோடி தமிழகம் வருகை புரிந்தார். மற்ற வருகை அரசு விழாக்களாக இருந்த நிலையில், இம்முறை 100 சதவீத பாஜகவின் தேர்தல் பரப்புரைக்காக வந்திருந்தார் பிரதமர் மோடி.தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நடத்திய ‘என் மண் என் மக்கள்’ யாத்திரையின் நிறைவு விழா பல்லடம் மாதப்பூரில் நடந்தது. பிரதமர் மோடி பங்கேற்றிருந்தார். இந்தப் பொதுக்கூட்டம் பாஜகவினர் மத்தியில் பெரும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியது.

அது நிறைவேறியதா என்பதை விரிவாகப் பார்க்கலாம்.‘கட்சி சேர’ அரசியல்! குறிப்பாக, இதை வெற்றிகரமாக நடத்தி முடிக்க சில நுணுக்கங்களைக் கையாள பாஜக நினைத்தது. அதனால், பல மாநிலங்களில் நடப்பது போல் மாற்று கட்சியினர் பாஜகவில் இணையப் போவதாகப் பேசியது. குறிப்பாக, அதிமுகவிலிருந்து முக்கிய தலைவர்கள் சிலர் பாஜகவில் இணையும் நிகழ்ச்சியைப் பல்லடத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் 26ம் தேதி நடத்த திட்டமிட்டது பாஜக. பாஜக இந்நிகழ்வு குறித்து அறிவித்தது முதலே, அதிமுகவில் உள்ள சில முக்கிய தலைவர்களின் பெயர்கள் அடிபட்டன. மாஃபா பாண்டியராஜன், தங்கமணி, வேலுமணி, சிங்காநல்லூர் எம்எல்ஏ ஜெயராமன், அம்மன் அர்ஜுணன், கிணத்துக்கடவு தாமோதரன் ஆகியோர் பெயர்கள் சொல்லப்பட்டன.

ஆனால், கட்சியில் இணைய யாரும் வராததால் அந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. மேலும், இதற்கு பதிலடி தரும் வகையில் அதிமுக எம்எல்ஏ அம்மன் அர்ஜுணன் , பாஜகவிலிருக்கும் 4 எம்எல்ஏக்களில் 2 பேர் அதிமுகவில் இணையவிருப்பதாக புயலைக் கிளப்பினார்.பின்னர், நிகழ்ச்சி ஒன்றில் பேசிய வேலுமணி, “திமுக அதிமுக இணைய முடியுமா? காங்கிரஸ் பாஜக இணைய முடியுமா? அந்தச் சூழலில் நான் எப்படி பாஜகவில் இணைவேன்” என இந்த சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இப்படியாக, பாஜகவின் ஸ்டண்ட் முழுவதும் தோல்வியைத் தழுவியது.அண்ணாமலை ‘விக்கெட்’ பேச்சு! கொங்கு பகுதியில் உள்ள அரசியல் தலைவர்களைப் பாஜகவில் இணைத்து, இந்தக் கொங்கு மண்ணில் நடக்கும் பொதுக்கூட்டத்தை வெற்றி பெறச் செய்ய பாஜக திட்டமிட்டது.

ஆனால், பொதுக்கூட்டத்துக்கு முன்பு பத்திரிகையாளர்களிடம் பேசிய அண்ணாமலை, “கோவையில் அதிமுக 'பிக் ஷாட்' களின் விக்கெட் விழும்” என்றார். அவரின் இந்தப் பேச்சு அவருக்கே எதிரியாக மாறி, யாரும் கட்சியில் இணைய முன்வரவில்லை என விமர்சகர்கள் சிலர் கருத்துகளை முன்வைக்கின்றனர்.இதனால், சுதாரித்துக்கொண்டுப் பொதுக் கூட்டம் தொடங்கும் சில மணி நேரத்துக்கு முன்பு பேசிய அண்ணாமலை, “விக்கெட் எடுப்பதற்கு ஒன்றுமில்லை. விருப்பப்பட்டுத்தான் பாஜகவில் இணைகிறார்கள்” என மாற்றிப் பேசினார். ஆனால், காலம் கடந்த இந்தப் பேச்சு பாஜகவுக்கு எந்தப் பலனையும் தரவில்லை.பொதுக் கூட்ட அரசியல் பின்னணி? பிரதமர் மோடி பங்கேற்கும் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டம் பல்லடத்தில் 1,400 ஏக்கரில் நடத்த திட்டமிடப்பட்டது. 5 லட்சம் பேர் அமர்ந்து பார்க்கவும் 10 லட்சம் பேர் நின்று காணவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

60க்கு 80 அடியில் அமைக்கப்பட்ட மேடைக்கு வர பிரதமர் மோடிக்கு பிரத்யேக வழித்தடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 13 லட்சம் பேருக்கு உணவுப் பொட்டலங்களும் தயார் செய்யப்பட்டிருந்தன. ஆனால், 1.5 லட்சம் பேர் பொதுக்கூட்டத்துக்கு வந்திருந்ததாக தகவல் சொல்லப்படுகிறது. அதிலும், பனியன் கம்பெனிகளில் வேலை பார்க்கும் வட மாநிலத்தவர்களுக்கு ஒரு நாள் கூலி கொடுத்து அழைத்து வந்ததாகவும் தகவல்கள் சொல்லப்பட்டன. தமிழகத்தில் தேர்தல் நேரத்தில் பொதுக்கூட்டங்களை நடத்தி கட்சிகள் தங்கள் பலத்தைக் காட்டுவது வாடிகையாகி வருகிறது. குறிப்பாக, திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சிப் பொதுக் கூட்டத்தை நடத்தி தங்கள் பலத்தை நிரூபித்து மக்களவையில் நாமக்கல் சீட் வாங்கியது.அதேபோல், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் பொதுக்கூட்டம் நடத்தி தங்கள் பலத்தைக் காட்டியது.

அதன் வழியில் பாஜகவும் தமிழகத்தில் தங்கள் பலத்தை நிரூபிக்க பொதுக் கூட்டத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஆனால், தங்கள் பலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது கேள்வியே!பாஜகவின் வியூகம் என்ன? கொங்கு பகுதிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் இந்த மேடை பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, ஈரோடு மஞ்சளுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டதற்கு முதற்காரணம் பிரதமர் மோடி என்பதால் அவருக்கு மஞ்சளால் ஆன மாலை அணிவிக்கப்பட்டது. மேலும், தன் உரையிலேயே கொங்கு பகுதி எனக் குறிப்பிட்டே பேசினார் மோடி.மேலும், அதிமுகவுடன் பாஜக கூட்டணியிலிருந்து விலகியிருக்கும் சூழலில், அதிமுகவின் முக்கியமான தலைவர்களான எம்ஜிஆர், ஜெயலலிதா அவர்களை நினைவுக்கூர்ந்து பேசியுள்ளார்.

குறிப்பாக, எம்ஜிஆர் தமிழக மக்களுக்கு நல்லாட்சி தந்ததாகவும், அவரைத் தொடர்ந்து ஜெயலலிதா மட்டுமே நல்லாட்சி வழங்கியதாகவும் அதிமுக தலைவர்களுக்குப் புகழாரம் சூட்டினார். திமுகவை விமர்சிக்காமலும் இல்லை. எம்ஜிஆர் பற்றி பேசுகையில், “குடும்ப அரசியல் காரணமாக அவர் ஆட்சிக்கு வரவில்லை. திறமையின் காரணமாகவே தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்தார்” என திமுகவை சாடினார். “தமிழக மக்கள் மீது ஜெயலலிதா எந்த அளவுக்கு அன்பு வைத்திருந்தார் என்பது எனக்கு தெரியும்” எனப் பேசினார்.ஏற்கெனவே, கோவையில் பாஜகவுக்கு கணிசமான வாக்கு வங்கி இருக்கும் நிலையில், 'கொங்கு பகுதியில் பொதுக் கூட்டத்தில் பேசுவது மகிழ்ச்சி' எனப் பேசி மோடி ஸ்கோர் செய்திருக்கிறார்.

தவிர, கொங்கில் மிகவும் பலமாக இருக்கும் அதிமுகவுக்கு ஆட்டம் காட்ட, அவர்கள் மண்ணில் அதிமுக கட்சியின் முக்கியமான தலைவர்கள் பற்றி கூட்டத்தில் பேசியிருப்பதன் வாயிலாக, அதிமுகவின் அதிருப்தி வாக்காளர்களைக் கவருவது பாஜகவின் திட்டமாகவும் இருக்கலாம்.ஆனால், அதிமுகவில் இணையாமல் இருந்தாலும் பாஜக பலமாகயிருப்பதை வெளிக்காட்ட இந்தக் கூட்டம் நடத்த பாஜக திட்டமிட்டது. அதற்காகத் தான் அந்த ஸ்டண்டுகள். ஆனால், கூட்டத்தின் நோக்கம் நிறைவேறியதா என்னும் கேள்விக்குப் பாஜகவின் தலைவர்களால் கூட பதில் சொல்ல முடியாது என்பதே அரசியல் நோக்கர்கள் கருத்தாக இருக்கிறது.

## கப்பல் விவகாரம்: இலங்கை மீது சீனா கடும் அதிருப்தி

**- நடராசா லோகதயாளன் -**

இலங்கை கட ற்பரப்பிற்குள் ஆராய்ச்சி கப்பல்களுக்கு இலங்கை அரசு விதித்த தடை குறித்து சீன அரசு தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் திகதி முதல் சீன ஆராய்ச்சிகப்பல்கள் இலங்கையின் விசேட பொருளாதார வலயத்தில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு உத்தியோகபூர்வமாக அனுமதி கோரியபோதும் அதறகு இலங்கை அரசு தடைவிதித்துள்ளமை குறித்தே சீனா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பு எல்லைக்குள் எந்தவகையான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கும் இலங்கை அரசு ஒருவருடகால தடையை விதித்துள்ளது.

இதன்னால் சீனாவின் ஜியாங் யாங் கொங் 3 என்ற ஆராய்ச்சி கப்பல் தென் இந்திய கடற்பரப்பில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு முனகூட்டியே திட்டமிட்டிருந்த நிலையிலேயே இலங்கை அரசு இந்த தடையை அறிவித்தமை சீனாவிற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஜியாங் யாங் கொங் 3 என்ற ஆராய்ச்சி கப்பல் சீனாவின் இயற்கை வள அமைச்சிற்கு உரியதேயன்றி இராணுவப் பயன்பாட்டிற்கானது அல்ல எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் தனது அயலில் ஆராய்ச்சிகள் இடம்பெறுவது குறித்த பாதுகாப்பு கரிசனையை இந்தியா வெளியிட்ட நிலையிலேயே இலங்கை அரசாங்கம் இந்த தடையை விதித்திருப்பதாக சீனா திடமாக நம்புகின்றது.

இந்த நம்பிக்கைக்கு வலுச் சேர்ப்பதாக இந்திய ஊடகங்கள் இந்தச் செய்தியை சீனாவிற்கு விழுந்த அடி எனத் தலைப்பிட்டு வரைந்தமை குறிப்பிடத்தக்கது.

சீன அதிகாரிகள் இலங்கையின் இந்த முடிவு தொடர்பில் தற்போது கடும் அதிருப்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் சீனா அடுத்து என்ன காய் நகர்த்தலை செய்யவுள்ளது என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

## விஸ்வரூபம் எடுக்கிறது மீனவர்களின் பிரச்சனை: பதிலடிக்கு யாழ்ப்பான மீனவர்கள் தயார்

அத்துமீறும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த முடியாத - கையாலாகத கடற்படையினர் எங்கள் மக்களிடம் மாத்திரம் தங்கள் வீரத்தை காட்டுகின்றனர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவான் தெரிவித்தார்.

மாதகல்ப் பகுதியில் மீன்பிடிக்கு கடற்படையினர் தடை ஏற்படுத்துவது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

போர்க்காலத்தில் எங்கள் கடற்பரப்பில் நாங்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு சிறிலங்க கடற்படையால் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இன்று போர் முடிந்து விட்டது. சிவில் நிர்வாகம் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகின்ற சூழலில் கடற்படையினர் சிவில் நிர்வாகத்தில் - கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் விவகாரத்தில் தலையிடுகின்றனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு ஆரம்பமாகியுள்ள காலத்தில், கடற்படையினரின் சிவில் நிர்வாகத்தின் மீதான தலையீடு கண்டிக்கப்படவேண்டும்.

தென்னிலங்கையில் பல இடங்களில் விகாரைகளைச் சூழவுள்ள கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அவையொன்றும் விகாரையின் அழகை கெடுக்கவில்லையா? தமிழர்கள் என்பதற்காகவே எங்கள் மீது எவ்வளவு காலத்துக்கு இவ்வாறான பாகுபாடுகளை மேற்கொள்ளப்போகின்றீர்கள்? விகாரைக்கு அண்மையாக மீனைக் கொல்லுவதாகக் கடற்படையினர் கூறுகின்றனர்.

வாழ்வாதாரத்தைக் கெடுத்து - பட்டினிபோட்டு எங்களைக் கொல்லச் சொல்லியா உங்கள் புத்தர் பெருமான் உபதேசித்திருக்கின்றார்? சம்பில்துறையில் தலைமுறைகளாக எமது மக்கள் தொழில் செய்து வருகின்றார்கள். எப்போதும் இல்லாது திடீரென கடற்படையினர் அந்தப் பகுதியில் கடற்றொழிலை முன்னெடுக்க தடை விதிப்பது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

ஏற்கனவே அந்த விகாரைக்கு அண்மையாக, எங்கள் மக்களின் காணிகளை அத்துமீறி பிடித்த கடற்படையினர் விடுதியை அமைத்து சிங்களவர்கள் தங்க வைக்கின்றனர். இப்போது எங்கள் கடலையும் கையகப்படுத்தி அதிலும் விடுதி அமைக்கப்போகின்றார்களா என்ற நியாயமான சந்தேகம் எழத்தான் செய்கின்றது.

அத்துமீறும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த முடியாத - கையாலாகத கடற்படையினர் எங்கள் மக்களிடம் மாத்திரம் தங்கள் வீரத்தை காட்டுகின்றனர்.

நீங்கள் எங்கள் வாழ்வாதாரத்தில் - வயிற்றிலடிப்பதை மக்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று நினைக்க வேண்டாம் அமைதியை விரும்பும் எங்கள் மக்களை வலிந்து சீண்டுகின்றீர்கள். விளைவுகள் விபரீதமாக இருக்கும் என சிறிலங்கா கடற்படையை எச்சரிக்க விரும்புகின்றேன், என்றுள்ளது.

இதனிடையே எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (3) யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறல், இழுவைமடி படகின் பயன்பாடு, கடல் வளங்கள் அழிக்கப்படுவது ஆகியவற்றிற்கு எதிராக தமது கடற்பரப்பில் கருப்பு கொடிகளை தமது படகுகளில் பறக்கவிட்டு, அன்றைய நாளை கரிநாளாக அனுசரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளது, இலங்கைச் சட்டத்தின் அடிப்படையில் இடம்பெற்ற ஒன்று, அதற்கு எதிராக இந்திய அரசியல்வாதிகள் பேசுவதை ஏற்க முடியாது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தமது மீனவர்களின் பிரச்சனைகள் மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் நிறுத்தப்பட்டு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்று யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் உறுதிபட தெரிவித்துள்ளனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு – வாகரையில் காணி உரிமங்கள் வழங்கி வைப்பு!

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் காணி உறுதி வழங்கி வைக்கும் நிகழ்வு வாகரை பிரதேச செயலாளர் எந்திரி ஜீ.அருணன் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் 28-02-2024 அன்று இடம் பெற்றது.

ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவில் உதித்த உரிமை



வேலைத்திட்டத்தின் கீழ் அளிப்பு, பூரண அளிப்பு மற்றும் காணி அனுமதிப்பத்திரங்கள் என்பன தேசிய ரீதியில் வழங்கப்பட்டு வரும் நிலையில், வாகரையில் இடம்பெற்ற காணி உரிமங்கள் வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற நிகழ்வில் 150 பூரண அளிப்புக்களும் 400 காணி அனுமதிப்பத்திரங்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.





இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி. ஜஸ்டினா முரளிதரன், உள்ளிட்ட ஆளுநரின் உத்தியோகத்தர்கள், பிரதே செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் தமிழ் மொழித்தின விழா

**- பு. கஜிந்தன்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் தெரிவு குறித்து பெற்றோர்கள் ஒரு ஊடக அறிக்கையினை வெளியிட்டுள்ளனர். அவ் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2023.03.02 ஆம் திகதி தொடக்கம் எமது கல்லூரிக்கு பதில் அதிபராக நியமிக்கப்பட்ட திரு. சி. இந்திரகுமார் (SLEAS) அவர்கள் எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருகின்றார்.

முன்னைய காலத்தினை விட இவ்வதிபர் பதவியேற்ற குறுகிய காலத்தில் எங்களுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் கல்விசாராச் செயற்பாடுகளில் வளர்ச்சியை ஏற்படுத்தக் காட்டிய சிறப்பான திட்டமிடலுடன் கூடிய அணுகுமுறைகள் எங்களை மகிழ்வடைய வைத்ததுடன், பெற்றோர்கள் ஆகிய எங்கள் மத்தியில் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் உறுதுணையாக இருப்பார் என்ற நம்பிக்கை மிகவும் வலுவாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அதிபர் திரு. சி. இந்திரகுமார் அவர்களை, எங்களுடைய பிள்ளைகளின் எதிர்கால நலனை கருத்திற் கொண்டு நிரந்தர நியமனம் வழங்குமாறு பெற்றோராகிய நாங்களும் எங்களுடைய கல்லூரியின் பழைய மாணவர்களும், எமது பாடசாலையின் பழைய மாணவராகிய கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கோரியிருந்தோம். இக்கோரிக்கை தொடர்பில் எதுவித அரசியல் தலையீடுகளும் கையாளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும், எங்களுடைய கோரிக்கைக்கு இணங்கவே அமைச்சர் அவர்கள், பிள்ளைகளின் எதிர்கால அடைவுகளின் நியாயங்களைச் சமூகம் சார்ந்து ஆழமாக ஆராய்ந்து செயற்படுவது எங்களுக்குப் பக்கபலமாக இருப்பது வெளிப்படையானதொன்றாகும்.

மேலும், இவ்வதிபர் தன்னலம் சாராது யாழ்ப்பாணத்தின் கல்வி மற்றும் கல்விசாரா மேம்பாட்டிற்கு பெயர்குறிப்பிட்டுக்கூறும் அளவிற்கு பாடசாலையொன்றை உருவாக்க தீவிர முயற்சி எடுத்துவருவதால் பெற்றோர் மற்றும் மாணவர் மத்தியில் இப்பாடசாலையின் பெயர் பேசுபொருள் மட்டுமன்றி, மாணவர் கற்றலுக்கான அனுமதி கணிசமாக அதிகரித்துள்ளது. எனவே இவற்றை இழந்து யாழ்ப்பாணக் கல்விச்சமூகத்தின் எதிர்கால வளர்ச்சியைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் பாதக முயற்சிகளை பெற்றோர்கள் ஆகிய எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாதென்பது வெளிப்படை உண்மையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தலைவர் மற்றும் செயலாளர் தெரிவுகளை ரத்து செய்ய உடன்பாடு – சட்டத்தரணி கே.வி. தவராசா



(29-02-2024)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தலைவர் மற்றும் செயலாளர் தெரிவுகளை ரத்துசெய்ய உடன் பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராக நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவானது 29-02-2024 அன்று திருகோணமலை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “கடந்த மாதம் 21ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற்ற பொது சபை கூட்ட தெரிவுகளை ரத்து செய்ய கோரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி மனுதாரர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும், கட்சியின் நலன் கருதியும் குறித்த கோரிக்கைகளுக்கு நாங்கள் உடன்பட்டோம்.

இதற்கு காரணம் இது ஒரு கட்சி சார்ந்த பிரச்சினை மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சனை. இந்த வழக்கு நீடிக்குமாக இருந்தால் அது சமூகத்திற்கு செய்யும் துரோகமாகும்.

அதன்படி வழக்கானது எதிர்வரும் ஏப்ரல், 05 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த கட்சி உறுப்பினர்கள் நீதிமன்றில் முன்னிலையாகி உள்ள நிலையில் தமது கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

எனினும் எம். எ சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலை ஆகாவில்லை. அவரது நிலைப்பாடு தொடர்பில் கலந்தாலோசித்து மேலதிக முடிவை எடுப்போம்.” என்றார்.



# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி நிகழ்வின் முன் ஆயத்த நடவடிக்கை குறித்து ஆராய்வு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**மன்னார் நிருபர்**

**- எஸ்.றொசேரியன் லெம்பேட்**
(29-02-2024)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வின் முன் ஆயத்த நடவடிக்கை தொடர்பான இறுதி கலந்துரையாடல் 29-02-2024 வியாழக்கிழமை மதியம் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தலைவர் ராமகிருஷ்ணன், திணைக்கள தலைவர்கள், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலின் போது எதிர்வரும் 8 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற உள்ள மகா சிவராத்திரி நிகழ்வு தொடர்பாகவும், முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.



குறிப்பாக போக்குவரத்து, சுகாதாரம், குடி நீர், உணவு தங்குமிட ஏற்பாடுகள், பாதுகாப்பு உள்ளடங்களாக முன்னெடுக்க வேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.



# நானாட்டான் பிரதேசச் செயலகம் மற்றும் அட்ரா நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த தொழில் வழிகாட்டல் நிகழ்வு

(28-02-2024)

நானாட்டான் பிரதேசச் செயலகம் மற்றும் அட்ரா நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் சந்தை புதன்கிழமை (28) காலை நானாட்டான் பிரதேசச் செயலகத்தில் இடம்பெற்றது.

நானாட்டான் பிரதேசச் செயலாளர் சிவசம்பு கனகாம்பிகை தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

இதன் போது தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருந்த நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய இளைஞர் படையணி உள்ளடங்களாக தொழில் சார் கற்கை நெறிகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது தொழில் பயிற்சிகள் தொடர்பாக தெளிவு படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.





## Truck Training Schools Association of Ontario, Hosted its Annual Convention in Mississauga. Associate Minister of Ontario's Ministry of Transportation, Mr. Vijay Thanigasalam, Graced the eEvent as Guest Speaker.

கனடிய செய்திகள் Canadian News

# ஒன்றாரியோ கனரக வாகன சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் சங்கத்தின் மாநாட்டில் சிறப்புப் பேச்சாளராகக் மாகாண போக்குவரத்து துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம்



கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் "ஒன்றாரியோ கனரக வாகன சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் சங்கத்தின்" வருடாந்த மாநாடு 29-02-2024 வியாழக் கிழமையன்று மிசிசாகா நகரில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

மேற்படி மாநாட்டில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் அவர்கள் அங்கு பயனுள்ள உரையாற்றியதாக தமிழ் பேசும் அன்பரும் மேற்படி "ஒன்றாரியோ கனரக வாகன சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் சங்கத்தின்" நீண்ட கால உறுப்பினரும் எமது மத்தியில் இயங்கிவரும் .. 'Jays Professional Truck Training Centre' நிறுவனத்தின் தலைவருமாகிய ஜேய் ஜெயானந்தன் எமது ஆசிரிய பீடத்திற்கு தகவல் தருகையில் அங்கு உரையாற்றிய எமது மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அவர்களின் உரையை பல்வேறு மொழிகளைப் பேசும் பயிற்சி நிறுவனங்களின் அதிபர்கள் பாராட்டிச் சென்றார்கள் என்றும் தெரிவித்தார்.

மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் அவர்கள் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தற்போது ஒன்றாரியோ மாகாணத்தில் கனரக வாகனங்களின் தேவை அதிகரித்துள்ளதால் அவைகளுக்கான சாரதிகளின் தேவைகளும் அதிகரித்துள்ளன என்றும், அதற்கான முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்தி தங்கள் கனரக வாகன பயிற்சி நிறுவனங்களின் மூலம் ஏராளமான சாரதிகளை உருவாக்கும் அதன் நிர்வாகிகளையும் பயிற்றுவிக்கும் போதானசிரியர்களையும் பாராட்டுகின்றேன் என்று தெரிவித்ததுடன் கனரக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் பெருந்தெருக்களின் இளைப்பாறும் நிலையங்களில் மேலதிக கனரக வாகன தரிப்பிடங்களை ஏற்படுத்தும் வகையில் தமது அமைச்சினால் திட்டங்கள் தயாரிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இங்கே காணப்படும் படத்தில் தமிழ் பேசும் அன்பரான திரு ஜேய் ஜெயானந்தன் மற்றும் High Liteகனரக போக்குவரத்து நிறுவனத்தின் உப-தலைவர் உட்பட சங்கத்தின் உறுப்பினர்கள் எமது துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் அவர்களோடு நிற்பதைக் காணலாம்.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்பந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# அன்பின் தொனி - 723

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

### துஷ்டர் நியாயத்தை அறியார்கள்

ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள்; நீதிமான்களோ சிங்கத் தைப்போலே தைரியமாயிருக்கிறார்கள். தேசத்தின் பாவத்தினிமித்தம் அதின் அதிகாரிகள் அநேகராயிருக்கிறார்கள்; புத்தியும் அறிவுமுள்ள மனுஷனாலோ அதின் நற்சீர் நீடித்திருக்கும். ஏழைகளை ஒடுக்குகிற தரித்திரன் ஆகாரம் விளையாதபடி வெள்ளமாய் அடித்துக் கொண்டுபோகிற மழையைப்போலிருக்கிறான். வேதப்பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்; வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களோ அவர்களோடே போராடுகிறார்கள். துஷ்டர் நியாயத்தை அறியார்கள் கர்த்தரைத் தேடுகிறவர்களோ சகலத்தையும் அறிவார்கள். இருவழிகளில் நடக்கிற திரியாவரக்காரன் ஐசுவரியவானாயிருந்தாலும், நேர்மையாய் நடக்கிற தரித்திரன் அவனிலும் வாசி. வேதப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன்; போஜனப்பிரியருக்குத் தோழனாயிருக்கிறவனோ தன் தகப்பனை அவமானப்படுத்துகிறான். அநியாய வட்டியினாலும் ஆதாயத்தினாலும் தன் ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறவன், தரித்திரர்பேரில் இரங்குகிறவனுக்காக அதைச் சேகரிக்கிறான். வேதத்தைக் கேளாதபடி தன்செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது.

### தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்

உத்தமர்களை மோசப்படுத்தி, பொல்லாத வழியிலே நடத்துகிறவன் தான் வெட்டின குழியில் தானே விழுவான்; உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள். ஐசுவரியவான் தன் பார்வைக்கு ஞானவான்; புத்தியுள்ள தரித்திரனோ அவனைப் பரிசோதிக்கிறான். நீதிமான்கள் களிகூரும்போது மகா கொண்டாட் நீதிமான்கள் களிகூரும்போது மகா கொண்டாட்டம் உண்டாகும்; துன்மார்க்கர் எழும்பும்போதோ மனுஷர் மறைந்துகொள்ளுகிறார்கள். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான். ஏழை ஜனங்களை ஆளும் துஷ்ட அதிகாரி கெர்ச்சிக்கும் சிங்கத்துக்கும் அலைந்துதிரிகிற கரடிக்கும் ஒப்பாயிருக்கிறான். பிரபு புத்தியீனனாயிருந்தால் அவன் செய்யும் இடுக்கண் மிகுதி; பொருளா-சையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான். இரத்தப்பழிக்காக ஒடுக்கப்பட்டவன் குழியில் ஒளிக்க ஓடிவந்தால், அவனை ஆதரிக்கவேண்டாம். உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப் படுவான்; மாறுபாடான இருவழியில் நடக்கிறவனோ அவற்றில் ஒன்றிலே விழுவான். தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தால் திருப்தியாவான்; வீணரைப் பின்பற்றுகிறவனோ வறுமையால் நிறைந்திருப்பான். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான். முக தாட்சிணியம் நல்லதல்ல, முகதாட்சிணியமுள்ளவன் ஒரு துண்டு அப்பத்துக்காக அநியாய ஞ்செய்வான். முகதாட்சிணியம் நல்லதல்ல, முகதாட்சிணியமுள்ளவன் ஒரு துண்டு அப்பத்துக்காக அநியாயஞ்செய்வான். வன்கண்ணன் செல்வனாகிறதற்குப் பதறுகிறான், வறுமை தனக்கு வருமென்று அறியாதிருக்கிறான். தன் நாவினால் முகஸ்துதி பேசுகிறவனைப்பார்க்கிலும், கடிந்துகொள்ளுகிறவன் முடிவில் அங்கீகாரம் பெறுவான். தன் தகப்பனையும் தன் தாயையும் கொள்ளையிட்டு, அது துரோகமல்ல என்பவன் பாழ்க்கடிக்கிற மனுஷனுக்குத் தோழன். பெருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான். **- நீதிமொழிகள் 28: 1-26**

**தொடரும்...**



Toronto சிட்டி கவுன்சிலர்

PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை தொடர்ந்து ஆட்சியாளர்கள் மறுத்து வருவது கண்டிக்கத்தக்கது: அருட்தந்தை சத்திவேல்

**கா**ணமலாக்கப்பட்டோருக்கான நீதி தொடர்பில் காலத்தை இழுத்தடித்து நீதியை மறுக்கும் செயற்பாடுகளையே அனைத்து ஆட்சியாளர்களும் தொடர்ந்து செய்து கொண்டிருப்பதாக சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் இன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடகிழக்கில் அரச பாதுகாப்பு படைகளால் யுத்த காலப்பகுதியில், பலவந்தமாக கடத்தப்பட்டு காணமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் நீதி கேட்டு தொடர் போராட்டம் ஆரம்பித்து அதன் ஏழாவது நிறைவு தினத்திலே மீண்டும் ஒரு கவனயீர்ப்பு போராட்ட பேரணியை நடத்தி ஐ.நா மனித உரிமை பேரவையின் ஆணையாளருக்கு ஆறு அம்ச கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

இக்கோரிக்கைகள் நியாயமானது. உறவுகளை பறிகொடுத்த வலிகளோடு தொடர் போராட்டங்களை நடத்தி வரும் வடகிழக்கு காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் தமது முழுமையான ஆதரவை நடத்துவதோடு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுமாறு ஐ.நா மனித உரிமை பேரவையை வலியுறுத்துகின்றது.

**- நடராசா லோகதயாளன் -**

## இலங்கை மீனவர்களை பாதுகாக்க அமைச்சர் டக்ளஸ் சூளுரை

**எ**ங்களுடைய நாடு, எங்களுடைய மக்கள், எங்களுடைய கடல் இதுதான் எனது முன்னுரிமை என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் சிறை வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்திய மீனவர்கள் போராட்டம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு அரசியல் யாப்பு சட்டத்தில், முதற்தடவையாக எல்லை தாண்டி வந்தால் அவர்களுக்கு பிணை வழங்க முடியும் என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட தடவை எல்லை தாண்டி வரும்போது அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் போராட்டம் நடாத்துவது அவர்களுடைய உரிமை. அவர்களுடைய கோரிக்கை. ஆனால் நாங்கள் அதனை சட்டரீதியாக பார்க்க வேண்டும்.

2018ஆம் ஆண்டு அரசியல் யாப்பு சட்டத்தில், முதற்தடவையாக எல்லை தாண்டி வந்தால் அவர்களுக்கு பிணை வழங்க முடியும் என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட தடவை எல்லை தாண்டி வரும்போது அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றுள்ளது.

இந்த தடவை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் எல்லை தாண்டி வந்தவர்களும், படகின் உரிமையாளர் அல்லது படகோட்டியும் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். அது அவர்களுக்கு சுட்டுவிட்டது.

ஏனெனில், அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை எல்லை தாண்டி வருகின்றபோது தண்டிக்கப்படுவார்கள் என்ற வகையில் தமது கருத்துக்களை கூறி வருகின்றனர்.

என்னை பொறுத்தவரையில் எங்களுடைய நாடு, எங்களுடைய மக்கள், எங்களுடைய கடல் இதுதான் எனது முன்னுரிமை. அதுதான் நியாயம் என்றும் நான் கருதுகிறேன்.

இதேவேளை, இலங்கை மீனவர்கள் 3ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் குறித்து தங்களது நிலைப்பாடு என்ன என கேள்வி எழுப்பிய வேளை,

நான் அமைச்சரவையில் இருக்கிறேன். இராஜினாமா செய்யாதபடியால் அதில் நேரடியாக கலந்துகொள்ள மாட்டேன். அதற்கிடையில் நான் இராஜினாமா செய்தால் நானும் அந்த போராட்டத்தில் கலந்து கொள்வேன் எனவும் தெரிவித்தார்.

## சிவராத்திரி

(நிலைமண்டில ஆசிரியப்பா)

-------------------------

*சிவனுக்கு உகந்த திருநாள் சிவராத்திரி*
*அவனன்றி எதுவுமே அசையா உலகிலே!*
*மாசி மாதம் சதுர்த்தசித் திதியில்*
*மாசின்றி மக்கள் மகிழ்வாய்க் கொண்டாடுவர்*
*பிரமாவும் விஷ்ணுவும் பெருமைப் பட்டகால்*
*பரமன் விஸ்வரூபப் படிமம் காட்டியநாள்*
*தேவர்கள் பாற்கடலைத் தயிராய்க்*
*கடைந்தவேளை*
*தேவா அமிர்தத்திற் தோன்றிய நஞ்சை*
*பரமசிவன் பருகியதைப் பார்த்த போதுமே!*
*பராசக்தி பதைத்துப் பாதுகாத்த நாளாம்*
*சிவனடியார் சிவனைத் தொழுத காலையில்*
*சிவலிங்கம் காட்சி தந்ததும் இந்நாளாம்*
*காலையில் நீராடி கனிகள் பாலுடன்*
*மாலைவரை உணவை மருந்தாய் உண்பர்*
*இரவு முழுவதும் எம்பிரானை வேண்டியே!*
*விரதம் இருந்து மந்திரம் சொல்வர்*
*நான்கு சாமமும் நாயகன் திருவடியில்*
*மான்புடன் மலரொடு மனமுருகி வேண்டுவர்*
*அரிசி கோதுமை அறுகு வில்வத்தால்*
*அர்ச்சனை செய்து அமலனை வழிபடுவர்*
*மாங்கனி பலாக்கனி மாதுளை கொண்டு*
*பாங்காய்ப் பரம சிவனுக்குப் படைப்பர்*
*அடுத்தநாள் அடியார்க்கு அன்னதானம் வழங்கி*
*எடுத்த நோன்பை இனிதே முடிப்பர்*
*நாமும் நர்த்தனை இந்நாட் தொழுதே!*
*சேமம் பெற்றே சிறப்பாய் வாழ்வோமே!*

---

*ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்*
*(416) 844-7453*


HIGH SKY CANADA

- Visitor visas, Study visas, and Work Visas Applications
- Convert to WORK PERMIT from other status (Visitor)
- PR and Citizenship Application
- IELTS/ CELPIP/ CAEL Preparation
- Traffic Tickets and Pardon
- Tutoring for Students- ALL SUBJECTS, including TAMIL

CONTACT NOW!

Phone number/WhatsApp:
+1 (437) 365-5668
Email: highskycanada@gmail.com

# Tamil Cattle Farmers Protest Continue with no Solution in Sight

**- Siva Parameswaran**



The peaceful protest by the Tamil cattle farmers in the Eastern Province has crossed 150 days with no solution being offered by the Ranil Wickremesinghe government.

Cattle farmers are protesting against the inaction of the government to stop the atrocities perpetuated by the Sinhala people in the Mylathamadu - Mathavanai who have not only illegally occupied the grazing lands but also have deprived their livelihood.

Despite continuously protesting for over five months now, they allege the atrocities and the highhandedness of the Sinhala farmers continue they allege.

Tamil cattle farmers complain the Sinhala farmers continue to torture and kill their cattle stock which is their only source of living. Even afraid to speak openly for fear of reprisal, the Batticaloa milk producers describe how their cattle are being inhumanly abducted and tortured.

"A pregnant cow delivered a pre-term calf as a result of high voltage electricity being passed into her body. The pre-term calf is even unable to stand. This is a baby. Is this not an atrocity? It is an innocent animal that can't speak. We don't know which is a live wire. Those respecting Buddhism should see this. You are doing this to a dumb animal. You are putting crackers into their mouth and firing upon them through air rifles. You butcher them. Are you the people who say we are upholding Buddhist dharma?" an anguished and impoverished milk farmer told local media.

The demand of the Tamil cattle farmers to evict the Sinhala farmers who have forcefully occupied the Mylathamadu-Madhavanai grazing lands has fallen on the deaf ears of the administration and the politicians.

On the 13th of September, the then District Secretary Kamalavathy Pathmaraja told the District Development Council meeting that no solution could be offered to the issues faced by the milk-producing cattle farmers. Following this, the Tamil cattle farmers started their protest on the 15th of September in front of the Sithandi school. And, the protest has continued since then.



Even though the farmers were assured of a meeting with the Justice Minister Wijeyadasa Rajapaksa on the 25th of February at the protest site the meeting did not take place says Seenitambi Nimalan, President of the Mylathamadu - Madhavanai milk producers' association said.

"So far 275 cattle have been killed by the Sinhala farmers who are forcefully occupying the land demarcated as grazing land for the cattle. These cattle belong to 22 farmers. No firm action has been even though we have complained to the Karadiyanaru Police".

Adding further Nimalan said the Sinhala farmers who have occupied the grazing land have also forcefully occupied the water resources which were the source of drinking water for the cattle. Due to this the already vulnerable farmers and their cattle are being pushed further depriving them of essential water supply. Lack of water resources put them and their milk business in serious crisis he said with a choked voice.

Out of the 6,500 acres of the said grazing land, close to 5,000 acres are forcefully occupied by the Sinhala farmers numbering around 700 who are staying there says Nimalan. Yet another Tamil farmer who is protesting against this illegal occupation says 15 cows amongst his stock of 50 cattle have been killed by them and this has cast a big question mark on their lives.

"This is a place where we bring our cattle for grazing for generations. We are unable to let our cattle for grazing there. But what they are doing is butchering, shooting, and brutally injuring our cattle. I had 50 registered cows, but 15 have been killed. The government is responsible for this. The cattle are our only livelihood, we don't have anything else. Our lives have been ruined ever since they were settled here".

Over three thousand families and their 200,000 cattle and close to a thousand milk producers depend on the Mylathamadu - Madhavanai grazing land for their survival.

"Our future is uncertain and appears doomed," the protesting Tamil cattle farmers say in a united voice.

The Sinhala farmers mostly from the neighbouring district of Amparai were encouraged to settle there by the former governor of the Eastern Province Anuradha Yahambath local journalists say. These farmers have been leased lands here on a short-term basis to cultivate cash crops like maize based on the failed vision of the ousted President Gotabaya Rajapaksa on self-sustaining agriculture during the COVID-19 pandemic period.

Sri Lanka being a milk-deficit country largely depends on the import of milk powder mostly from New Zealand, Australia, and Denmark. According to the Food and Agriculture Organization of the UN, only 20% of the local fresh milk requirement is produced locally and the rest is compensated through imported milk powder.

Among the local produce of fresh milk, the Mylathamadu - Madhavanai milk producers, the Tamil cattle farmers contribute close to 18%.

With the Sri Lankan economy still struggling to recover and spiraling food costs the money spent on importing food and dairy products is huge adding a huge burden to the ailing economy. Economic analysts say any reduction in milk production in the country due to issues like the Mylathamadu-Madhavanai grazing land will only lead to further reduction in milk production apart from depriving the livelihood of the Tamil farmers by forcefully settling Sinhala farmers shrinking the grazing land available for the 200,000 cattle.

As the summer season is predicted to be harsh this year, the fodder available for the cattle is expected to deplete further pushing the already vulnerable Tamil cattle farmers towards the brink, agriculture experts point out.

## கடந்தவையும் கடப்பவையும் – [90]

குளத்தடிக் குட்டிவிநாயகரைத் தொழுதபின்
குருக்கட்டு சிந்திவிநாயகரை வணங்குதற்காய்

குளிர்ச்சியான மண்டபத்தில் நின்றபோது - பெரு
மகிழ்ச்சியாக இருந்தது முன்பு போல

சலிப்பில்லா அர்ச்சனைகள் தொடர்ச்சியாக நடப்பதுவும்
விருப்பத்திற்கு ஏற்ப நூல்களைக் கட்டிவித்துக் கொள்வதுவும்

அன்றுபோல் இன்றும் அப்படியே நடக்கிறது
என்றுமே மாறாத வடிவுடனும்வனப்புடனும் அருள்வழங்கும்

அப்பெரிய விநாயகரை வணங்கிவிட்டு
எப்பொழுதும் போலவே பொங்கலுக்கு உரிய

நல்லமடம் என மனம் நினைக்கும் அவ்விடத்தை
மெல்லமாகப் பரிந்துரைத்தபோது தெரிந்தது

இன்று அவ்விடத்தில் எதுகுமே இல்லை என்று
அன்று இருந்த மடமோ, மரமோ அன்றிக் கிணறோ

எதுவுமே இல்லாத வெறுமை ஏமாற்றமளிக்க
புதிதாக வந்தவர்க்குத் தெரியாது மறைந்துபோன

தலைமுறைக்கு சாட்சியாய் இருப்பதனை முதன்முதலில்
உணரவைத்த தருணமாக அமைந்தது அது

காகதாலி நியாயம் போல கட்டிடம் இடியவும் - சேர்ந்தே
காணாமல் போனாரோ தந்தை என

ஒரு ஓரமாய் நினைத்துக் கொண்டது மனம்
நெடுங்காலமாய் இடிந்த மடத்தின் பகுதியிலே

சின்னவயதில் தந்தை எழுதிய அவர் பெயர்
அன்றும் இருந்தது இறுதியாக தந்தையோடு வந்தபோது

இன்று இரண்டும் இல்லை என்றபோது
ஒன்றோடு ஒன்று தொடர்பாக இருந்ததோ

என்றதாயும் ஒரு எண்ணம் வந்து போக
எல்லாமும் அறிந்தவனை நொந்தாலும்

பொங்கலுக்கென போடப்பட்ட மண்டபத்துள்
பொங்கலையும் முடித்து படையலுக்கெனவே அமைத்த

பிரத்தியேக பூசை அறையில் அதனையும் முடித்து - மாயவனின்
சிறப்பான பூசையையும் முடித்துக்கொண்டு வெளியில்வர

வாழைக்கன்றுடனே பிள்ளையும் கையுமாக ஒருகுடும்பம் - உள்
நுழைய "அன்றொருநாள் உன்னையும் இங்குதான்

விற்று வாங்கினோம்" என்றார் அம்மா
உற்ற பிள்ளையை விற்று வாங்குதல் இன்றும் கூட...

எத்தகைய விந்தையான உலகத்தில் இருந்தாலும் - காலாகாலமாய்
போற்றிவரும் நம்பிக்கையை முறியடிக்க முடியாது

ஆத்திரம் வரும் சிலருக்கு ஆனாலும் அதுவே உண்மை - இத்தகைய
பேச்சுக்கள் பல தொடர மீண்டும் ஏறுகிறோம் வாகனத்தில்....

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# Canadian Dental Care Plan எனப்படும் கனேடிய பல் மருத்துவ திட்டத்தின் கீழ் பற்சிகிச்சை பெறும் அங்கீகாரம் 400,000 இற்கும் அதிகமான கனேடிய முதியவர்களுக்கு கிட்டியுள்ளது

கனடிய செய்திகள் Canadian News




கனேடிய பல் மருத்துவ திட்ட (CDCP) வி ண் ண ப் ப ங் க ள் விரிவாக்கப்படுகின்றன: தகுதிபெறுவார்களெனக் கருதப்படும் 72 வயதை அடைந்த முதியவர்கள் விண்ணப்பிக்கக் கோரும் கடிதங்களை ∴பெப்ரவரி முதலாந் திகதி முதல் பெறுவார்கள்.

கனேடிய அரசு கனேடிய பல் மருத்துவ திட்டத்தை (CDCP) கடந்த மாதம் ஆரம்பித்தது. கனேடிய பல் மருத்துவ திட்டம் (CDCP) தற்போது தனிப்பட்ட பல் மருத்துவ காப்புறுதி இல்லாத 9 மில்லியன் வரையானோர் வாய்ச் சுகாதாரப் பராமரிப்பைப் பெறுவதில் நிலவும் நிதிச் சுமையைக் குறைப்பதற்கான சமஷ்டி அரசின் புதிய திட்டமாகும்.

டிசம்பர் நடுப்பகுதியின் பின்னர் சேர்விஸ் கனடா (Service Canada) 400,000 இற்கும் அதிகமான விண்ணப்பங்களை அங்கீகரித்துள்ளது. சேர்விஸ் கனடா திணைக்களம் ஒவ்வொரு மாதமும் வயதின் அடிப்படையில் முதியவர்களின் புதிய பிரிவுகளைத் தொடர்புகொள்ளும். 77 வயதிற்கு மேற்பட்டோர் தற்போதும் விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கும் அதேவேளை, பெப்ரவரி மாததத்தில் 72 வயதிற்கும் 76 வயதிற்கும் இடைப்பட்டோருக்கு இந்த திட்டத்தை கனடிய அரசு விரிவாக்கியுள்ளது.

இதன்படி, தகுதி பெறுவார்களெனக் கருதப்படும் 72 முதல் 76 வயது வரையான முதியவர்கள் கனேடிய பல் மருத்துவ திட்டத்திற்கு (CDCP) விண்ணப்பிக்குமாறு கோரும் கடிதங்களைப் பெறுவார்கள். தகுதி பெறுவதை உறுதி செய்வது குறித்த விபரங்களும், தொலைபேசி மூலம் விண்ணப்பிப்பதற்கான விபரங்களும் இந்தக் கடிதத்தில் இருக்கும்.

கனேடிய பல் மருத்துவ திட்டம் (CDCP) இடையூறுகளின்றி நடைமுறைப்படுத்துவதற்காக சில கட்டங்களாக செயற்படுத்தப்படுகிறது:

- 2023 ஆம் ஆண்டு டிசம்பரில் இருந்து தகுதி பெறுவார்களெனக் கருதப்படும் 77 வயதை அடைந்த முதியவர்களை விண்ணப்பிக்குமாறு கோரும் கடிதங்களை சேர்விஸ் கனடா அனுப்பியது.
- பெப்ரவரி மாதம் முதலாந் திகதியில் இருந்து 72 முதல் 76 வயது வரையான முதியவர்களை விண்ணப்பிக்குமாறு கோரும் கடிதங்களை சேர்விஸ் கனடா அனுப்பும்.
- மார்ச் மாதம் முதலாந் திகதியில் இருந்து 70, 71 வயதான முதியவர்களை விண்ணப்பிக்குமாறு கோரும் கடிதங்களை சேர்விஸ் கனடா அனுப்பும்.
- 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் விண்ணப்பங்கள் இணையத்தின் மூலமான விண்ணப்ப முறைக்கு மாற்றப்படுவதுடன், 65 வயதை அடைந்த முதியவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவார்கள்.
- 2024 ஆம் ஆண்டு ஜூனில், செல்லுபடியாகும் Disability Tax Credit சான்றிதழை வைத்திருப்போரும், 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களும் இணையத்தில் விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கும்.
- 2025 ஆம் ஆண்டில் இருந்து 18 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்ட எஞ்சிய, தகுதியுள்ள, அனைத்துக் கனேடியர்களும் இணையத்தின் மூலம் விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கும்.

கனேடிய பல் மருத்துவ திட்டத்தில் (CDCP) சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு சேர்விஸ் கனடா திணைக்களத்தால் ஒருவர் அங்கீகரிக்கப்பட்டதும் இந்தத் தகவல் Sun Life நிறுவனத்திற்கு வழங்கப்படும். Sun Life தகுதி பெற்றவர்களை கனேடிய பல் மருத்துவ திட்டத்தில் சேர்த்து, அவர்களுக்கு கனேடிய பல் மருத்துவ திட்டம் குறித்த தகவல், சேவை விபரங்கள், அவர்களது உறுப்பினர் அட்டை, அவர்களுக்கான சேவையின் ஆரம்பத் திகதி என்பவற்றை உள்ளடக்கிய வரவேற்கும் ஆவணத் தொகுதியை அனுப்பி வைக்கும்.

கனேடிய பல் மருத்துவ திட்டத்திற்குத் தகுதி பெறுவோர் 2024 ஆம் ஆண்டு மே முதல் பல் மருத்துவரிடமோ, வேறொரு வாய்ச் சுகாதாரப் பராமரிப்பாளரிடமோ சிகிச்சை பெறக்கூடியதாக இருக்கும். தனிநபர் ஒருவரின் சேவை ஆரம்பமாகும் திகதி, விண்ணப்பம் கிடைக்கும் திகதியிலும், அவர் இணைத்துக் கொள்ளப்படும் நடவடிக்கை நிறைவு செய்யப்படும் நாளிலும் தங்கியிருக்கும். சேவை ஆரம்பமாகும் நாளுக்கு முந்தைய செலவினங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

வாய்ச் சுகாதாரப் பராமரிப்பும் சுகாதாரப் பராமரிப்பாகும். பற்களைப் பராமரிப்பதா அல்லது ஏனைய தேவைகளை நிறைவு செய்வதாவென முடிவெடுக்கும் நிலை எவருக்கும் ஏற்படக் கூடாது. கனேடிய பல் மருத்துவ திட்டம் அனைத்துக் கனேடியர்களும் சமாளிக்கக்கூடியதாக பல் மருத்துவப் பாதுகாப்பை பெறுவதை உறுதிப்படுத்தும்.

மேலதிக தகவல்களுக்கு Canada.ca/dental ஐப் பார்வையிடவும்.

### இந்த கனடிய பல் மருத்துவ திட்டம் பற்றி முக்கிய தலைவர்களின் மேற்கோள்கள் கீழே காணப்படுகின்றன

கனேடிய பல் மருத்துவ திட்டத்தில் ஏற்கனவே கணிசமானோர் இணைந்துள்ளார்கள். முதல் மாதத்தில் மட்டும் நான்கு லட்சத்துக்கும் அதிகமான முதியவர்கள் தொலைபேசி மூலம், தொலைபேசியில் காத்திருக்கவேண்டிய தேவை இன்றி விண்ணப்பித்தார்கள். முதியவர்களும், விரைவில் ஏனைய வயதுப் பிரிவினரும், தேவையான வாய்ச் சுகாதார சேவைகளைப் பெறுவதை உறுதி செய்வதே எமது நோக்கம். எதிர்வரும் வாரங்களில் வேறு வயதுப் பிரிவினரும் இந்தத் திட்டத்திற்குத் தகுதி பெறும் வகையில் தகுதி தொடர்ச்சியாக விரிவாக்கப்படும். சேர்விஸ் கனடா தடையின்றிய, தரமான பயனாளர் சேவையை வழங்கத்தக்க நிலையில் உள்ளது.

**- கௌரவ ரெறி பீச், குடிமக்கள் சேவைகள் அமைச்சர்**
The Honourable Terry Beech, Minister of Citizens' Services

முதியோர் பற்பராமரிப்பைத் தடையின்றிப் பெற உரித்துடையோர். இன்று வரை CDCP திட்டத்தில் இணைவதற்கு 400,000 திற்கும் அதிகமான முதியவர்கள் வெற்றிகரமாக விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் 2024 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து பற் சுகாதார சேவையாளரின் சிகிச்சையைப் பெறக் கூடியதாக இருக்கும். அதிக முதியவர்கள் ஒவ்வொரு நாளும் விண்ணப்பிக்கிறார்கள். மக்களை உடல் நலத்துடன் வைத்திருப்பதும், அவர்கள் உடல்நலத்துடன் வாழ்வதற்குத் தேவையான கண்ணியத்தை வழங்குவதுமான பல் மருத்துவத்தை மேலும் அதிக கனேடியர்கள் பெறக்கூடியதாக இருக்குமென்பதே இதன் அர்த்தமாகும்.

**- கௌரவ மார்க் ஹொலன்ட், சுகாதார அமைச்சர்**
The Honourable Mark Holland, Minister of Health

அனைத்துக் கனேடியர்களுக்கும், முக்கியமாக முதியோருக்கு பல் மருத்துவ சிகிச்சை கிடைக்கவேண்டும். கனேடிய பல் மருத்துவ திட்டத்தின் கீழ் காப்புறுதி அற்ற லட்சக்கணக்கான முதியோர் பல் மருத்துவத்தைப் பெற ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், நாளாந்தம் மேலும் அதிகமானோர் இணைகிறார்கள். சுகாதாரப் பராமரிப்பு வருடங்கள் தொடர்பானதல்ல, அது வாழ்க்கையின் தரம் தொடர்பானது.

**- கௌரவ சீமஸ் ஓ ரீகன், முதியோருக்கான அமைச்சர்**
The Honourable Seamus O'Regan, Minister for Seniors

வாய்ச் சுகாதாரப் பராமரிப்பு, கனேடியர்களின் ஆரோக்கியம், நல்வாழ்வு ஆகியவற்றின் இன்றியமையாத ஓர் அங்கமாகும். கனேடிய பல் மருத்துவ திட்ட விண்ணப்பங்களை விரிவாக்குவதன் மூலம் முதியவர்கள் அவர்களுக்கு உரித்துடைய அத்தியாவசிய பல் மருத்துவ சேவைகளைப் பெறுவதை நாம் உறுதி செய்கிறோம். வாழ்க்கைச் செலவைக் குறைத்து எம் நாட்டுக்கு ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதில் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் விளைவாகவே குறிப்பிடத்தக்க இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**- கௌரவ ஜோன் ஈவ் டுக்ளோ, அரச சேவைகள் மற்றும் கொள்வனவு அமைச்சர்**
The Honourable Jean-Yves Duclos, Minister of Public Services and Procurement

கனேடிய பல் மருத்துவ திட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரும்போது 90,000 டொலரிலும் குறைவான திருத்திய நிகர குடும்ப வருமானத்தைப் பெறும் அனைத்துக் கனேடியர்களையும் உள்ளடக்கியிருக்கும். இதற்குத் தகுதி பெறுவதற்கு உங்களது வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பிப்பதை உறுதி செய்யுங்கள்

**- கௌரவ மரீ குளோட் பிபோ, தேசிய வருமான அமைச்சர்**
The Honourable Marie-Claude Bibeau, Minister of National Revenue

### விரைவுத் தகவல்கள்

- கனேடிய பல் மருத்துவ திட்டத்தைச் செயற்படுத்த 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், 2023-24 இல் ஆரம்பமாகி, ஐந்து வருடங்களுக்கு 13 பில்லியன் டொலருக்கும் அதிகமான முதலீடு அறிவிக்கப்பட்டதுடன், 4.4 பில்லியன் தொடர்ந்து ஒதுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது. கடந்த சில தலைமுறைக் காலத்தின் மிகப் பெரும் அரச திட்டமாக இது அமைகிறது.

- கனேடிய பல் மருத்துவ திட்டம் ஹெல்த் கனடாவால், Employment and Social Development Canada (ESDC) வின் ஒத்துழைப்புடன் சேர்விஸ் கனடா மற்றும் Sun Life ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

- கனேடிய பல் மருத்துவ திட்டத்திற்குத் தகுதி பெறுவதற்கு உங்களது குடும்பத்தின் திருத்திய நிகர வருமானம் 90,000 டொலரிலும் குறைவாக இருப்பதுடன், வேலைகொள்வோர் அல்லது ஓய்வூதியம் மூலமான அல்லது தனியார் பல் மருத்துவ காப்புறுதி இல்லாதிருப்பதுடன், முந்தைய ஆண்டுக்கான வருமான வரிக் கணக்கை நீங்கள் சமர்ப்பித்தும் இருக்கவேண்டும்.

- வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக கனேடிய பல் மருத்துவ திட்டம் வாய்ச் சுகாதாரப் பராமரிப்பாளரின் பரிந்துரைக்கு அமைவாக விரிவான வாய்ச் சுகாதார சேவைகளை வழங்கும். துப்பரவு செய்தல், பொலிஷ் செய்தல் போன்ற நோய்த் தடுப்பு சிகிச்சைகளும் பரிசோதனைகள், எக்ஸ் கதிர் படப்பிடிப்பு, பல் அடைத்தல், கழற்றக்கூடிய பொய்ப் பற்களைக் கட்டுதல், பல்வேர் சிகிச்சை (root canal) போன்றன வேறு சேவைகளும் உதாரணங்களாக விளங்கும்.

- 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 2024 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆந் திகதி வரை கனடா பல் மருத்துவ உதவிக் கொடுப்பனவு தொடர்ந்து கிடைக்கும். 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்காக பெற்றோரும், பராமரிப்பாளர்களும் 2024 ஆம் ஆண்டு ஜூன் முதல் கனேடிய பல் மருத்துவ திட்டத்திற்கு விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கும்.

**தொடர்புகளுக்கு:**
Erik Nosaluk
Director of Communications and Issues Management
Office of the Honourable Terry Beech
Minister of Citizens' Services
erik.nosaluk@hrsdc-rhdcc.gc.ca
Media Relations
Employment and Social Development Canada
819-994-5559
media@hrsdc-rhdcc.gc.ca



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1089

## மட்டக்களப்பு நரசிங்க வைரவசுவாமி கோயில்

## மட்டக்களப்பு

*“நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக*
*நீலமணிமிடற்றான் நீர்மையே - மேலுவந்த*
*எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்*
*அக்கோலத்து அவ்வுருவே ஆம்”*

உயிர்களுக்கெல்லாம் தலைவனாகத் திகழும் இறைவனுக்கு, திருக்கோயில்களைக் கட்டும் கலை ஏறக்குறை 1400 ஆண்டுகால வரலாற்றிகைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. சங்க காலத்திலே பெரு மரங்களின் குளிர் நிழலிலும், கொடி தவழும் சோலைகளிலும், இயற்கைச் சூழலிலும் தெய்வ உருவங்களை நிறுவி வழிபட்டனர். இம்மரபின் தொடர்ச்சியாக இன்றும் கிராமங்களில், அரசமரந்தோறும் விநாயரை இருத்தி வழிபாடியற்றுகின்றனர். படிப்படியாக மரத்தடியிலும், மலர்ச்சோலைகளிலுமிருந்த தெய்வங்களுக்கு ஆலயங்களை அமைக்க, தமிழர்கள் முற்பட்டனர். ஆயினும் ஆதியில் ஆலயங்களாகக் கருதப்பட்ட மரங்களை மறக்கவில்லை. ஆலயங்கள் கட்டிட அமைப்பிற்கு மாற்றப்பட்ட பின்னர், இவற்றைத் தலவிருட்சங்களாகப் போற்றினர்.

இவ்வாறான கோயில்களில் இலக்கியமும், கலையும் வளர்ச்சிபெற்றது. தலபுராணங்கள், பிள்ளைத்தமிழ், தூது, கலம்பகம், உலா போன்ற சிற்றிலக்கியங்களும் தோற்றம் பெற்றன. திருக்கோயில்களில் இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்கள் படிக்கப்பெற்று, தொன்மையான கருத்துக்கள் மக்களை வளப்படுத்தின. புராண வரலாறுகளோடு இணைந்த வகையிலே ஆகமமுறைப்படி கோயில்கள் அமைக்கப்பட்டு, மூலமூர்த்தியோடு, பரிவாரமூர்த்திகளையும் அங்கு நிறுவி வழிபடும் வழக்கம் தொன்று தொட்டுக் காணப்படுகின்றது. சைவசமயத்திலே பரிவாரமூர்த்திகளாகக் கருதப்படும் தெய்வங்களுக்கு, தனிக்கோயில்கள் எடுத்தும் வணங்கும் வழக்கம் காணப்படுகின்றது.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவனை ஆவாகிக்கும்பொழுது, ஆவரணபூசை நிகழ்த்தப்படுகின்றது. ஆவரணம் என்னும் சொல் சூழ்ந்து நிற்பதைக் குறிக்கின்றது. தமது கடமைகளை ஆற்றவேண்டி, சூழ்ந்துநிற்கும் பரிசனங்களை ஒத்ததாக பரிவார தெய்வங்கள் காணப்படுகின்றன. திருக்கோயிலுள் சென்று அதன் அமைப்பினை நோக்கின், பரிவாரதெய்வங்கள் வழிபாட்டிலே வகிக்கும் நிலையினை உணரமுடியும். சைவத்திலே இன்றியமையா இடம் வகிக்ககும் தேவி, சிவனுக்கு இடது பக்கத்தில் தனிக்கோயிலில் இடம்பெறுகின்றாள். இறைவனுக்கு இடப்பக்கத்தில் கணபதிக்கும், வலப்பக்கத்தில் கந்தவேளுக்கும் தனித்தனி கோயில்கள் இருக்கின்றன. உள்ளே நுழைந்ததும் நந்திதேவரைக் தரிசிக்கமுடியும். இவரது அனுமதிகோரியே உள்ளே நுழைய வேண்டும். வாயிலுக்கு அருகாமையில் உட்புறத்தில் பாதுகாவலனாக பைரவர் வீற்றிருப்பார். இறைவன் சந்நிதானத்திற்கெதிரே வலப்புறம் சூரியனும், இடப்புறம் சந்திரனும் இறைவனை எதிர்நோக்கி வீற்றிருப்பர். நவக்கிரகங்களும் பரிவார தெய்வங்களே. இவற்றிற்கும் தனிக்கோயில்களும் காணப்படுகின்றன.

பரிவாரதெய்வங்களாகக் கருதப்படும் தெய்வங்களுக்கு தனித்தனி கோயில்கள் அமைத்து, அவற்றைப் பெருந்தெய்வங்களாக வணங்கும் நிலை காணப்படுகின்றது. பிள்ளையார், சுப்ரமணியர், தேவி ஆகிய தெய்வங்களோடு, தேவியின் வெவ்வேறு அம்சங்களான துர்க்கை, காளி, சாமுண்டி முதலிய தெய்வங்களுக்கும் தனிக்கோயில்கள் காணப்படுகின்றன. இத்தகைய கோயில்களில் சிவனுக்கும் சக்திக்கும் இடம் உண்டெனினும், இவ்விருவரும் பரிவார தெய்வங்களாக ஒருபொழுதும் கருதப்படமாட்டார்கள். பிள்ளையார், சுப்ரமணியர் ஆகியோருக்குரிய தனிக்கோயில்களில் சிவனும், சக்தியும் உயரிடம் வகிப்பதற்கு எடுத்துக்காட்டாக, இலங்கையிலும், இந்தியாவிலும் பல கோயில்கள் காணப்படுகின்றன. இவ்வேளையில் சிவன் பார்வதி இல்லாத தனிக்கோயில்கள் பல, பிள்ளையாருக்கும், முருகனுக்கும், காளிக்கும், துர்க்கைககும், தேவிக்கும், வீரபத்திரருக்கும் உண்டு. சிவாகமங்கள் அனைத்தும் சிவனை முக்கிய இடத்திலும் ஏனையோரைப் பரிவார தெய்வங்களாகச் சுற்றிலும் அமைக்கும்படி விதித்துக் கூறியுள்ளன. இதிகாசபுராணங்களும் இந்நிலையினையே தெளிவாகச் சுட்டியுள்ளன.

சிவனின் அறுபத்து நான்கு மூர்த்தங்களுள் பைரவ வடிவமும் ஒன்றாகும். இவரை வைரவர் எனவும் அழைப்பர். அக்கிரமத்தையும், ஆணவத்தையும் அழிப்பதற்காக சிவன் கொண்ட உக்கிரகோலங்களுள் ரைவமூர்த்தமும் ஒன்றாக விளங்குகின்றது. கோயிலின் பிரதான வாயிலை அடுத்து எல்லா மண்டபங்களுக்கும்வெளியே வடகிழக்குக்கும், வடக்குக்கும் இடையில் பைரவர் கோயில் இடம்பெறும். பைரவருக்கு ஷேத்திரபாலகர் என்னும் பெயரும் உண்டு. ஷேத்திரம் என்பது கோயிலைக் குறிக்கும் சொல். பாலகர் என்பது காப்பவர் எனப் பொருள்படும். பைரவர், கோயிற் காவலாளி. நாயை வாகனமாக உடைய இப்பரிவாரதெய்வத்தின் உருவம், பயங்கரம்மிக்கதாகக் காணப்படும்.

கிராமிய வழிபாட்டிலே பைரவருக்கு முக்கிய இடம் உண்டு. கிராமத்தில் எழுந்தருளியுள்ள வைரவர், கிராமத்தையும் அங்குள்ள மக்களையும் காப்பதான நம்பிக்கை காணப்படுகின்றது. ஈழத்தில் வைரவருக்குரிய தனிக்கோயில்கள் மிகச் சிலவாகவே காணப்படுகின்றன. இவ்வாறான தனிக்கோயில்களுள் மட்டக்களப்பிலுள்ள நரசிங்க வைரவசுவாமி கோயிலும் ஒன்றாகும். குறித்தவொரு சமூகத்தவர்களுக்கே சொந்தமான இக்கோயில், மட்டக்களப்பு புகையிரதநிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அமைவால் இக்கோயில் அமைந்துள்ள இடம், வயிரவன்காடு என அழைக்கப்படுகின்றது. மட்டக்களப்பில் காணப்படும் ஒரேயொரு வைரவர் கோயில் என்ற பெருமை இக்கோயிலுக்குண்டு. இக்கோயிலின் தோற்றம் பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தைச் சேர்ந்ததாக விளங்குகின்றது. இக்கோயிலை கந்தன் கதிர்காமர் என்பரே தோற்றுவித்தவராகக் காணப்படுகின்றார்.

*வளரும்...*



ॐ
OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.


# இவ்வார ராசிபலன்

## 01-03-2024 வெள்ளி தொடக்கம் 07-03-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** செல்வாக்கு உயரும் வாரம். வாடும் நிலை விலகி, வீடு, நிலமும் வாங்கக்கூடிய அற்புதமான காலம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியா சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்பாட்டில் கவனம் தேவை. கூட்டுத்தொழில் லாபம் தேவை. ஆரோக்கியம் கூடும். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். கர்ம வினைகள் அகலும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர். குதூகலம் கூடும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இஷ்ட தெய்வம், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,W




**ரிஷபம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையும் வாரம். புதிய வாய்ப்புக்கள் கூடும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். வியாபார லாபம் கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசு வழியில் ஆதாயம் பெருகும். பொது வி'யங்களில் நாட்டம் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழையக்கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். நண்பர்கள் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாவங்கள் விலகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் போட்டி மறையும். குடும்பத்தில் அமைதி நிலவும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். காதலர்கள் ஒற்றுமை கூடும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். வங்கி சேமிப்பு உயரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். புது முயற்சி தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உழைப்பால் மதிப்பும், உங்களால் சிறப்பும் சேரும் காலம். மனைவியால் மதிப்பு உயரும். மன அமைதி கிட்டும். மந்தமான நிலை மாறும். அற்புதமான தருணம். பொருளாதாரம் உயரும். சிறப்புக்கள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,O




**மிதுனம்:** கௌரவ வாய்ப்பு கிடைக்கும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். இனிப்பான செய்திகள் வரும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர். பயணம் வெற்றி தரும். உதவும் குணம் உண்டு. சாதக சூழ்நிலை உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஐஸ்வர்யம் கிடைக்கும். ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கும் உன்னதமான காலம். விரும்பியது நிறைவேறும். உற்சாகம் களை கட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். புது சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். கலைத்தொழில் திருப்பம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். தொழில் லாபம் பெருகும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். துன்பம் விலகி ஓடும். இழந்த செல்வம், இழந்த கௌரவம் திரும்பக் கிடைக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,W




**கடகம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. மனைவியால் மரியாதை உயரும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். சுபிட்ஷங்கள் பெருகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை உண்டு. பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். மாற்றங்கள் கிடைக்கும். மகத்தான காலம். நினைத்ததெல்லாம் நடக்கும் நேர்த்தியான காலம். வீண் வம்பு விலகும். வயிற்று உபாதைகள் தோன்றி மறையும். விரக்திகள் மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைக்கூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். நெருக்கடிகள் குறையும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டு. பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,6
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் "ராஜயோகம்"

"ஜோதிட மகரிஷி" Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பிரார்த்தனை நிறைவேறும். பிரபல்யம் ஆகும் வாய்ப்பு வரும். உடல் நலனில் அதிக அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்ப குழப்பம் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பெற்றோர் வாழ்த்து உண்டு. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணம் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். காயத்திரி மந்திரத்தால் கஷ்டங்கள் விலகும். பட்டம் பதவி தேடி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கனிவான பேச்சு அவசியம். பணிவான செயல்களால் காரியத்தால் வெற்றி காணும் காலம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் பாராட்டு கிட்டும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகுவர். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். போட்டிகள் அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**கன்னி:** இல்லம் வளர்ச்சி அடையும் வாரம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பஞ்சாயத்து மூலம் பழையக் கடன் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். செல்வாக்கு உயரும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். தாய்வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். கலகலப்புக் குறையும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். சுபிட்ஷங்கள் பெருகும். ஒரு சிலருக்கு கவுரப் பதவி தேடி வரும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். பண நடமாட்டம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 8,1,2,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**துலாம்:** சொந்தங்களால் மனநிறைவு கிட்டும் வாரம். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளி தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு வளரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். செய்த்தொழில் சிறப்படையும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். தொட்டது துலங்கி சட்டென உயரக்கூடிய சாதகமான காலம். பேச்சில் பணிவு தேவை. தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். குடும்ப மேன்மைகள் உண்டாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லையுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. நோய் நொடிகள் அகலும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். கலை ஈடுபாடுகள் அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பெத்தவங்களோட ஆசி கிட்டும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலம் கவனம் தேவை. அனுகூலமான போக்கு நிலவி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். மனைவியால் மதிப்பு உயரும். பழைய பகை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அத்தியாவசிய செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. ஆனந்தம் பெருகும். வாகன மாற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். இனிப்பான செய்திகள் வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். மாற்றங்கள் கிடைக்கும். குடும்ப பாசம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Z

(தொடர்ச்சி 30 பக்கம்)

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சாந்தன் உடலை முறையாக இலங்கைக்கு அனுப்ப சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு



சென்னையில் புதன்கிழமை அன்று காலமான சாந்தன் அதற்கு முன்னர் தொடர்ந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் 29.02.2024 அன்று மீண்டும் விசாரணைக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது, நீதிபதிகள் சுரேஷ் குமார், குமரேஷ் பாபு இருவரும், சாந்தனை இலங்கை அனுப்ப எப்போது அனுமதி வழங்கப்பட்டது என்று மத்திய அரசிடம் கேள்வி எழுப்பினர். கடந்த ஜனவரி 22-ம் தேதியே சாந்தன் இலங்கை செல்ல அனுமதி அளிக்கப்பட்டது என்று மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதை கேட்ட நீதிபதிகள், “மத்திய அரசு ஜனவரி 22-ம் தேதியே அனுமதி அளித்த பிறகும் சாந்தனை ஏன் இலங்கைக்கு அனுப்பவில்லை” என்று தமிழக அரசுக்கு கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த தமிழக அரசு வழக்கறிஞர், “ஜனவரி 24-ம் தேதி முதலே சாந்தன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரால், நடக்க கூட முடியவில்லை என்பதற்காகவே இலங்கை அனுப்ப முடியவில்லை” என்று விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், “சாந்தனின் உடலை இலங்கை கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐ.ஏ.எஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை நியமித்து தேவையான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை தூதரக அனுமதி, இறப்புச் சான்று உள்ளிட்டவற்றை பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றியது குறித்து மார்ச் 4-ல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்” என்று உத்தரவிட்டனர்.

சாந்தனின் உடலை இலங்கைக்கு கொண்டு செல்ல தூதரக அனுமதி ஆவணம் உள்ளிட்ட அனைத்து அனுமதியும் உடனடியாக வழங்கப்படும் என்று மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்திலும் தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு 25 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு




இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு எதிர்வரும் சித்திரை மாதம் 25ஆம் திகதிக்கு யாழ்பாணம் மாவட்ட நீதிமன்றாலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி என்.சிறிக்காந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு தொடர்பான வழக்கு வியாழக்கிழமை (29) யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போ-தே சட்டத்தரணி என்.சிறிக்காந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வழக்குகள் சுருக்கமாக முடிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பது இரண்டு தரப்பினரதும் பொதுவான நிலைப்பாடாக இன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் சட்ட விதிகளுக்கு அமைவாக நாங்கள் மறுமொழி தாக்கல் செய்வதற்கு திகதி குறிப்பிடுமாறு நான் கேட்டிருந்தேன்.

அந்த அடிப்படையில் எதிர்வரும் சித்திரை மாதம் 25ஆம் திகதிக்கு மறுமொழி தாக்கல் செய்யுமாறு வழக்கு தவணை இடப்பட்டு இருக்கிறது, அத்தோடு ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசனுக்கு மீண்டும் அழைப்பு கட்டளை அனுப்பப்படுவதற்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

முதலாவது மற்றும் மூன்றாவது எதிராளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் ஆகிய இருவர் சார்பிலும் நாங்கள் சட்டத்தரணி நியமன பத்திரத்தை தாக்கல் செய்து அந்த அடிப்படையில் எங்களுடைய நிலைப்பாட்டை மிக சுருக்கமாக குறிப்பிட்டு இருந்தோம்.

ஏனைய இரண்டு எதிராளிகள் சார்பிலும் வேறு சட்டத்தரணிகள் தங்களுடைய நியமன பத்திரத்தை சமபித்தார்கள் ஐந்தாவது எதிராளி சண்முகம் குகதாஸ் சார்பில் எவரும் ஆஜராகி இருக்க வில்லை, அவருக்கான அழைப்பு கட்டளை இதுவரையில் அவரிடம் கையளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்காளியான தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நண்பர் குருபரன் ஏற்கனவே இரண்டு வாரங்களுக்கு வழங்கப்பட்ட தடை கட்டளையை மேலும் நீடிக்குமாறு தான் கோரவில்லை என தெரிவித்திருந்தார், அந்த வகையில் கட்டாணை தொடர்பாக எந்தவித நீடிப்பும் இன்று வழங்கப்படவில்லை, அவர் அவ்விதம் தெரிவித்ததற்கான காரணம் கட்டானை கடந்த 19ஆம் திகதி நடைபெற இருந்த மகநாடு தொடர்பாகவே குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த திகதி கடந்து போய்விட்ட நிலையில் ஜதார்த்த ரீதியாக அதை நீடிக்குமாறு கூற முடியாதுஅந்த வகையில் தான் அவருடைய விண்ணப்பம் அமைந்திருந்தது,

எங்களுடைய தரப்பில் இந்த வழக்கு சுருக்கமாக முடிக்கப்பட கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதை சுட்டி காட்டினோம். இதே நேரத்தில் திருகோணமலை நீதிமன்றிலும் சமாந்தரமாக ஒரே நேரத்தில் இன்றைய தினம் இதே எதிராளிகளும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் சுமந்திரனையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கூப்பிடப்படுகிறது என்பதையும் தெரிவித்தோம்.

ஆகவே இந்த வழக்குகள் சுருக்கமாக முடிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பது இரண்டு தரப்பினருடைய பொதுவா நிலைப்பாடாக இன்றைக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றிலே தெரிவிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

## சண்முகம் பொன்னையா பாலசிங்கம்

**தோற்றம்: நவம்பர் 24, 1930** **மறைவு: பெப்ரவரி 21, 2024**



யாழ்பாணம் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வாழ்விடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீலங்கா நிர்வாக சேவை முன்னாள் யாழ் மாவட்ட உதவி அரசராகப் பணியாற்றி இளைப்பாறிய திரு. சண்முகம் பொன்னையா பாலசிங்கம் அவர்கள் புதன் கிழமை, பெப்ரவரி 21, 2024 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

இவர் பொதுநிருவாக உள்நாட்டு அமைச்சில் முகாமைத்துவ உத்தியோகத்தவராகவும்,முன்னாள் யாழ் மாவட்ட அமைச்சரின் இணைப்புச் செயலாளராகவும், யாழ் விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளராகவும், நல்லூர், அச்சுவேலி கிராம சபைகளின் விசேட ஆணையாளராகவும், நாயன்மார்கட்டு இராசஇராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் தேவஸ்தானத் தலைவராகவும், இன்னும் பல சேவைகளை ஆற்றியவராவார். மேலும் இவர் கனடா யுத்தகால ஊனமுற்றோருக்கு உதவும் பணியகத்தில் (War Amps, Canada) கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர், நீண்ட கால தொண்டனாக Tuxedo Court கட்டிடப் பிரதிநிதியாக கடமையாற்றியவருமாவார்.

அன்னார், நாயன்மார்கட்டு காலஞ்சென்ற போதிய பணக்காரன் சின்னதம்பி சண்முகத்தின் பேரனும், காலஞ்சென்ற பொன்னையா-சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏக புத்திரனும், கொக்குவில் காலஞ்சென்ற செல்லப்பா சோமசுந்தரம்- பவளம்மா அவர்களின் மருமகனும், சரோஜினிதேவியின் அன்பு கணவரும், வாசுகி(அமெரிக்கா) , பாலரவி (அமெரிக்கா), ஜானகி (அமெரிக்கா), தேவகி(அமெரிக்கா), சித்ரா,MD (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜேந்திரன் பொன்னுத்துரை (அமெரிக்கா), பவானி, MD (அமெரிக்கா), சுகுமார் சண்முகரட்ணம் (அமெரிக்கா), ரவிச்சந்திரன் ரட்ணசிங்கம் (அமெரிக்கா), ரவீந்தர் டிக்கு, MD ( அமெரிக்கா ) ஆகியோரின் மாமனாரும், Sophia (அமெரிக்கா), Sonia, MD & Anand (அமெரிக்கா), Julia & Ranga (அமெரிக்கா), Sanje (அமெரிக்கா), Ramyiah (அமெரிக்கா), Dhanesh (அமெரிக்கா), Kiran (அமெரிக்கா), Jay (அமெரிக்கா) அவர்களின் அன்பார்ந்த பேரனும், காலஞ்சென்ற இராசலெட்சுமியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் ஆறுமுகம் அவர்களின் மைத்துனரும், அருணாவதி & சண்முகரத்தினம், காலஞ்சென்ற உதயகுமார் & குமாரி, காலஞ்சென்ற சிறீதரன், மங்களேஸ்வரி & குகதாசன், ஸ்ரீமதி & வனஞ்சரஞ்சன், சிவநேசன்& விக்னேஸ்வரி, அருள்நேசன் & கயல்விழி, அருள்மொழி & யோகராஜா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது பூதவுடல் Ajax Crematorium இல் ஞாயிற்றுக்கிழமை பெப்ரவரி 25 அன்று மாலை 5 மணி முதல் 9 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் திங்கட்கிழமை பெப்ரவரி 26 அன்று காலை 8 மணிக்குக் கிரியைகள் நடை பெற்ற பின் 11 மணிக்கு பூதவுடல் தகனம் **செய்யப்பட்டது.**

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பாலசிங்கம் குடும்பம்: (416) 438 – 7755 / பாலரவி பாலசிங்கம்: +1 (908) 512-4474 / ஜானகி சுகுமார்: +1 (908) 303-1075

## இவ்வார ராசி பலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** ஏற்றங்கள் அதிகரிக்கும் வாரம். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். இனிப்பான செய்திகள் வரும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்புக்கள் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இனிய தகவல் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டு பயணம் ஏற்படும். மாற்று இனத்தவர் நட்பு கிட்டும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். தாய்வழி உறவில் சற்று கவனம் தேவை. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கௌரவம் உயரும். வறுமைகள் ஒழியும். தன லாபம் கூடும். தகுதிகள் உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். தங்க நகைகள் சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளிப்பதால் யோக பலன் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**மகரம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். முன்கோபம் தவிர்க்கவும். எதிரிகளையும் நண்பர்களாக்கி ஏற்றங்கள் காணக்கூடிய எதார்த்தமான காலம். லஷ்மி கடாட்ஷம் உண்டாகும். ஆடை, அணிகலன் சேரும். குதூகலமான மனநிலை காணப்படும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தாய்வழி உறவினர் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கடன் தொல்லை தீரும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. மங்களச் செய்திகள் வரும். திருப்புமுனைகளை சந்திக்கக்கூடிய காலம். திருமண வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** எடுத்த காரியம் வெற்றி பெறும். தொலைநோக்கு சிந்தனையால் விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கக் கூடிய அற்புதமான காலம். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். குதூகலம் அதிகரிக்கும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் தாமதமாகும். வாகன யோகம் உண்டு. வகையான செல்வம் சேரும் காலம். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். மாலை நேரத்தில் பெண்களுக்கு கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலை உள்ள அற்புதமான காலம். இக்கட்டான சூழ்நிலை அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை தரும். நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உற்சாகம் களை கட்டும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கஷ்ட காலம் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்ச பூதம், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் வாரம். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் இன்று நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களால் பிரச்சனை ஏற்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். மனசஞ்சலம் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். வேண்டாத விஷயங்களை தவிர்க்கவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சகோதர வழியில் ஒற்றுமை அதிகரிக்கும். விவேகமான செயல்களால் வெற்றி கிட்டும். திருமண தடைகள் விலகும். கணவன், மனைவி உறவு வலுப்படும். சிறப்போடும், பொறுப்போடும் செயல்படுவீர். திருப்பு முனைகளை சந்திக்கும் காலமாக அமையும். அயல்நாட்டுப் பிரயாணம் கூடி வரும். உறவினர் பகை மாறும். வேலைவாய்ப்பு கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். உயர்ந்த நிலை அடைவீர். பொருளாதார நிலை சீராக இருக்கும். கோபம் தவிர்த்து ஆன்மீகத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும். புதிய நிலம், வீடு வாங்க நேரிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். எதிர்ப்புக்கள் குறையும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். காதலர்கள் தம்பதியாவார்கள். செல்வாக்கு மேம்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X

# "13"ஐ சாகடிக்கும் "22"

**"1988 இல் தெரிவான வடகிழக்கு மாகாணசபை 1990 ஆம் ஆண்டிலேயே கலைக்கப்பட்டது. அடுத்தகட்டமாக 13 இல் தமிழர்களுக்கு முதுகெலும்பாக இருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு வட,கிழக்கு இணைப்பு துண்டிக்கப்பட்டது .தற்போது 13 இலுள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்க 22ஆவது திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது ."**

**கே. பாலா**

தமிழர் பிரச்சினை குறித்துப் பேசும் ஒரே இலங்கை அரசியலமைப்பு சட்டப் பிரிவாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மட்டுமே இன்றுவரை குற்றுயிரும் குலையுயிருமாக இருந்துவரும் நிலையில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒரேயடியாக கொன்று அதன் சவப்பெட்டிக்கான இறுதி ஆணி அடிக்கும் வேலை பேரினவாத கட்சியான "பிவிதுரு ஹெலஉறுமய"வின் தலைவர் உதய கம்மன் பிலவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினை மற்றும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஆகியோருக்கு இடையில் 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதி இந்த 13ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நாட்டில் மாகாண சபைகளை உருவாக்கும் நோக்கில், இந்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இந்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக, இலங்கையில் 9 மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இணைந்த மாகாண சபைகளாக அப்போது அறிவிக்கப்பட்டிருந்தன.அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் வகையிலேயே இந்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இந்த 13ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தின் ஊடாக தமிழர்களுக்கு அதிகமாக அரசியல் அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன என்று பேரினவாத தலைவர்கள், கட்சிகள், சிங்களவர்கள் எதிர்த்தனர். அதேவேளை தமிழ் மக்களுக்கு, இந்த ஒப்பந்தம் போதுமானளவு அதிகாரங்களைப் பகிரவில்லை என்று மக்களின் உரிமைகளுக்காக ஆயுதப் போரில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளும் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் ஊடான இந்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்த்தனர்.

இந்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் முதல் குழந்தையாக 1988ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட முதல் வடகிழக்கு மாகாணசபை 1990ஆம் ஆண்டிலேயே அரசாங்கத்தால் கலைக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்த மாகாண சபையானது பதினாறு மாதங்கள் மட்டுமே செயற்பட முடிந்தது. இது நடந்து 17 ஆண்டுகளின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) 2006 ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கின் அடிப்படையில் 2007ஆம் ஆண்டில் வட, கிழக்கு இணைப்பும் துண்டிக்கப்பட்டது. அதன் பின், தேர்தல் நடத்தப்பட்டு 2008இல் கிழக்கு மாகாணசபை உருவானது.

இந்தியாவின் வற்புறுத்தலினால் உருவான 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு எந்தவித அதிகாரங்களும் கிடைத்து விடக்கூடாது என்பதில் கண்கொத்திப்பாம்பாக இருந்த பேரினவாதிகள் தமது முதல் நடவடிக்கையாக 1988 இல் தெரிவான வடகிழக்கு மாகாணசபையை 1990ஆம் ஆண்டிலேயே கலைத்தனர். அடுத்தகட்டமாக 13 இல் தமிழர்களுக்கு முதுகெலும்பாக இருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் 2007ஆம் ஆண்டு வட, கிழக்கு இணைப்பைத் துண்டித்தனர். தற்போது 13 இலுள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்க முடிவெடுத்துள்ளனர்.

ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள், தீர்வுகள் வழங்கப்படுமென தமிழர்களையும் சர்வதேசத்தையும் தொடர்ந்தும் ஏமாற்றி வந்தனர். பேரினவாதிகளான ராஜபக்ஸக்களின் ஆட்சியில் கூட தமிழர்களுக்கு 13 பிளஸ், 13 பிளஸ், பிளஸ் அடிப்படையில் தீர்வுகள் வழங்கப்படுமென ஐ.நா.வுக்கு கூட வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால் மறுபுறத்தால் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஆயுளை முடிக்கும், அதிகாரங்களை குறைக்கும் தந்திரங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

13 ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தின் மாகாண சபை முறையின் ஊடாக, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபை வசமாகின்ற போதும் மத்திய அரசாங்கம் இன்று வரை மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரங்களை வழங்காதிருக்கின்றது. அதிலும் மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்க ஒட்டுமொத்த பேரினவாத தலைவர்களும் கட்சிகளும் கடும் எதிர்ப்புக்களை பகிரங்கமாகவே வெளியிட்டு வருகின்றனர். அதிலும் சிலர் வடக்கிற்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் அடுத்து வரும் யுத்தம் சிங்கள இராணுவத்துக்கும் தமிழ் பொலிஸுக்குமாகத்தான் இருக்கும் எனவும் பொது வெளியில் கூறி வருகின்றனர்.

இவ்வாறான சூழலில் சுமார் 37 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்த சட்டத்தை, முழுவதுமாக நடைமுறைப்படுத்த வேண்டும், அதனை நடைமுறைப்படுத்த இந்தியா தலையிட்டு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் எனக் கோரி இந்தியப் பிரதமர் மோடிக்கும், தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் கடிதங்கள் எழுதிக்கொண்டிருக்கும் நிலையில்தான் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒரேயடியாக கொன்று அதன் சவப்பெட்டிக்கான இறுதி ஆணி அடிக்கும் வேலையை பேரினவாத கட்சியான "பிவிதுரு ஹெலஉறுமய"வின் தலைவர் உதய கம்மன் பில முன்னெடுத்துள்ளார்.

(தொடர்ச்சி ___ பக்கம்)


MORTGAGE FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
COMMERCIAL
INDUSTRIAL
VACANT LAND
CONSTRUCTION
"Let's step forward together"
Contact Us Today
NESAN
Subramaniam
416-908-5656
Our Services
• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity Line of Credit
• Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
TD Canada Trust
NATIONAL BANK
FIRST NATIONAL
FINANCIAL LP
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
RFA
radius financial
RMG mortgages









26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1456 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 1, 2024

# கனடாவிற்கான இந்தியத் தூதுவர் சஞ்சே குமார் வெர்மா ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு ரொறன்ரோவில் இடம்பெற்றது

## High Commissioner of India in Ottawa, His Excellency Sanjay Kumar Verma hosted a 'Media Reception' in Toronto



**High Commissioner of India in Ottawa, His Excellency Sanjay Kumar Verma with the Consul General of India in Toronto Mr. Shri Siddhartha Nath jointly hosted a 'Media Reception' in Toronto, on Sunday 25th. Feb. 2024, at Roof Garden Holiday Inn in Toronto.**

**Members from many Ethnic Media Outlets from difference Languages, were invited by High Commissioner and Consul General.**

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

# கனடா— ஸ்காபுறோ நகரில் நாஸ்டின் வீதியில் அமைந்துள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி



குருமன்றத்தில் கடந்த மாசி மக திருநாளில் இடம்பெற்ற விசேட பூசைகள் மற்றும் வழிபாடுகள் மற்றும் அபிராபி அந்தாதி பதிகம் பாடல் ஆகிய சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன.

பல சக்திகள் உருக்கத்துடன் கலந்து கொண்ட இந்த திருநாளில் அன்றைய தினம் அபிராமி அந்தாதி பதிகத்தின் பாடல்களை பக்தி ததும்ப உருகிப் பாடிய நன்கு அறியப்பெற்ற பக்தி பாடகர் மற்றும் ஓதுவார் திரு விக்னேஸ்வரன் (யாக்கோப்) அவர்களுக்கு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி

குருமன்றத்தின் நிறுவனரும் சக்தியுமாகிய ஞானம்மா திருநாவுக்கரசு அவர்கள் பொன்னாடை மற்றும் பிரசாதம் ஆகியவை வழங்கிக் கௌரவிப்பதை இங்குள்ள படத்தில் காணலாம்.

# திசை மாறிச் செல்லும் கனடிய தமிழர் பேரவையை சீர் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ள "கனடிய தமிழர் கூட்டு".

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**



கனடாவில் ஏனைய பல இனக்குழுக்கள் தங்கள் இனம் சார்ந்த பலமான அமைப்புக்களை நிறுவி அவற்றை பயனுள்ள செயற்பாடுகளுக்கு ஊடாக தங்கள் இனம் சார்ந்த சேவைகளை தொடர்கின்றன என்பதை நாம் செய்திகள் வாயிலாக அறிந்து வருகின்றோம்.

மேலும், கனடிய அரசாங்கத்தோடு இடம்பெறும் பயனுள்ள பேச்சுவார்த்தைகள் மற்றும் குறிப்பிட்ட இனம் பல்வேறு வகையில் சலுகைகளையும் சந்தர்ப்பங்களையும் கனடிய அரசிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளும் வகையில் நிறுவப்பெற்ற ஏனைய இனம் சார்ந்த அமைப்புக்கள் அவற்றால் பல வெற்றிகளை சாதித்துள்ளன. இன்னும் மிக உறுதியாக தங்கள் இருப்பையும் நிலை நாட்டியுள்ளன.

(உள்ளே செய்தி 6ம் பக்கத்தில்)

# ஒன்றாரியோ கனரக வாகன சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் சங்க மாநாட்டில் பேச்சாளராக மாகாண போக்குவரத்து துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம்



கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் 'ஒன்றாரியோ கனரக வாகன சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் சங்கத்தின்' வருடாந்த மாநாடு 29-02-2024 வியாழக்கிழமையன்று மிசிசாகா நகரில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

மேற்படி மாநாட்டில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம், அங்கு பயனுள்ள உரையாற்றியதாக தமிழ் பேசும் அன்பரும் மேற்படி 'ஒன்றாரியோ கனரக வாகன சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் சங்கத்தின்' நீண்ட கால உறுப்பினரும் எமது மத்தியில் இயங்கிவரும் .. '**Jays Professional Truck Training Centre** நிறுவனத்தின் தலைவருமாகிய ஜேய் ஜெயானந்தன் எமது ஆசிரிய பீடத்திற்கு தகவல் தருகையில் அங்கு உரையாற்றிய எமது மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் அவர்களின் உரையை பல்வேறு மொழிகளைப் பேசும் பயிற்சி நிறுவனங்களின் அதிபர்கள் பாராட்டிச் சென்றார்கள் என்றும் தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 23ம் பக்கத்தில்)

# தாய் மண்ணை நேசித்த காரணத்தால் தாய் முகம் காணாமலே கனத்த இதயத்துடன் மடிந்த சாந்தன் என்னும் உணர்வாளன்




இதுவரை எழுதித்தீரா ஈழத்தின் தியாக வரலாற்றில் "சாந்தன்" என்னும் இன்னுமொரு உயிர் சருகாகியிருக்கிறது.

தாயகக் கனவைச் சுமந்து, தனது இருபது வயதில் தாய்நிலம் பெயர்ந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்டு 33 ஆண்டுகள் சிறைமீளப் போராடி, விடுதலையான பின்னரான இறுதி ஒன்றரை ஆண்டுகள் தாய்நிலம் திரும்பப் போராடி, அந்த ஏக்கம் தீராமலேயே உயிரிழந்திருக்கிற செய்தி, அத்தனை தமிழர்களையும் உறையவைத்திருக்கிறது.

இருபது வயது இளைஞனாக சிறைசென்ற தன்மகன், என்றோ ஓர் நாள் தாய்மடி சேர்வான் என்ற, சாந்தனின் தாயாரின் 33 வருடக் காத்திருப்பு பொய்த்துப்போய்விட்டது. (உள்ளே செய்தி 6ம் பக்கத்தில்)

# தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடைய செய்துள்ளன

**மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை**



தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடைய செய்துள்ளன.

எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு தேர்தல்கள் பின் தள்ளப்பட்டு வருகிறன. இது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் மறைமாவட்ட இறை மக்களுக்கு தவக்காலத்தில் விடுக்கும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தவக்கால மடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,

திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டில் மீண்டும் ஒரு தவக் காலத்தில் கத்தோலிக்க மக்களாகிய நாம் காலடி பதித்துள்ளோம். (உள்ளே செய்தி 17ம் பக்கத்தில்)

